வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

## SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்


மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 ஆனி திங்கள் 10-ம் நாள் (24—6—1962) ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் 20 | இதழ் 4

# கந்தளாயில் மேலும் 750 சிங்கள குடும்பங்களை குடியேற்றும் அரசாங்கத் திட்டம்

## தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களத் தொகுதி நிறுவ ஏற்பாடுகள்

## தமிழரசுக் கட்சியை அழிக்காவிடில் சிங்கள இனம் அழிந்து விடுமாம்

மூதூர் தொகுதியிலே சிங்கள ஆக்கிரமிப்பைத் தீவிரப்படுத்த அரசாங்கம் ஒரு சதித் திட்டம் தீட்டியுள்ளது. மேலும் 750 சிங்கள விவசாயக் குடும்பங்களைக் கொண்டுபோய் கந்தளாயில் குடியேற்றுவதே அத்திட்டம்.

இவ்வாறு செய்யக் காரணம் ஏற்கனவே சிங்கள மயமாக்கப்பட்டுள்ள இப் பிராந்தியத்தில் வசிக்கும் சிங்களவர்களின் எண்ணிக்கையை மேலும் பெருக்கி, கந்தளாய் அல்லைப் பகுதியை உள்ளடக்கிய தனிப் பாராளுமன்றத் தொகுதியொன்றை நிறுவுவதுதான்.

கந்தளாயில் தனித் தொகுதியை நிறுவிவிட்டால் அங்கிருந்து பாராளுமன்றத்துக்கு ஒரு சிங்களப் பிரதிநிதியைத்தான் தேர்ந்தெடுக்க முடியும். இதுதான் அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவர விருக்கும் நயவஞ்சகத் திட்டம். அத் தொகுதியில் சிங்களவர்களின் அலுவல்களைக் கவனிக்க தனியொரு சிங்களக் காரியாதிகாரப் பிரிவும் ஏற்படுத்தப்படுமாம். என்னே கொடுமை!

### பெரும்பான்மை சிறுபான்மையாகிறது

புதிதாக நிறுவப்படவிருக்கும் தொகுதியிலே தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையாக்கப்படுவாரெனத் தெரிகிறது தமிழ் பேசும் மக்களின் சொந்தப் பிரதேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டு, அங்கே சிங்களவர்களைக் குடியேற்றியதோடு, பெரும்பான்மையோரான தமிழ் பேசும் மக்களைச் சொந்தப் பூமியிலேயே சிறுபான்மையோராக்கி, அங்கிருந்தே சிங்களப் பிரதிநிதியைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புவதென்றால், தமிழினத்தை திட்டமிட்டு எவ்வளவு துரிதமாக அழித்து வருகிறார்களென்பது எளிதிற் புரிந்து கொள்ளலாம்.

அத்தோடு, அடுத்த பொதுத் தேர்தலிலே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட இலங்கையிலே ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிடுவதென முடிவு செய்திருக்கிறது. இவ்வாறு வட கீழ் இலங்கை முழுவதையும் சிங்களக் கட்சி கைப்பற்றும் திட்டம் தயாராகிறதாம்?

இதற்கு முட்டுக் கட்டையாயிருப்பது தமிழரசுக் கட்சி ஒன்றுதானென்றும், அதை அடியோடு அழித்துவிட வேண்டுமென்றும் ஸ்ரீ. ல. சு. கட்சி தலைமைப் பீடம் கருதுவதாக அறியப்படுகிறது.

தமிழரசுக் கட்சியை ஒழித்து விட்டால், அதன் பின்னர் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகப்

(9-ம் பக்கம் பார்க்க)

## வோட்டு வாங்க மிரட்டல்

குடாக்கரைக் கிராமப் பகுதியில் உள்ள இரண்டு கிராமத் தலைவர்களும், ஒரு பிரமுகரும் அப்பகுதி மக்களிடஞ் சென்று தமிழரசுக் கொடிக்குப் பதிலாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நீலக்கொடி கட்டும்படி துன்புறுத்துகிறார்களாம்.

ஏழை மக்களிடஞ் சென்று மூதூர்த் தொகுதி இடைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி அபேட்சகரை ஆதரிக்காவிட்டால், கூப்பன் புத்தகங்களை இரத்துச் செய்து விடுவோம், தருமப் பணத்தை நிறுத்தி விடுவோம், வெடி வைத்து மீன் பிடிப்பதாக வழக்குப் போடுவோம் என்றெல்லாம் பயமுறுத்துகிறார்களாம்.

ஆனால் மக்கள் ஒரு நேர்மையான அபேட்சகரை ஆதரிக்க வேண்டுமென எண்ணியுள்ளார்கள். இவ்வுத்தியோகஸ்தர்களின் போக்கு மக்களிடத்தில் பீதியை உண்டுபண்ணியுள்ளது. சுதந்திரக் கட்சியின் பிரசாரக் கூட்டத்திற்கு அமைச்சர்கள் வருவார்களாம். அவ்வேளையில் எங்கும் நீலக்கொடி பறக்க வேண்டுமாம் என்று வற்புறுத்துகிறார்கள். அமைச்சர்களைத் திருப்திப் படுத்துவதற்கு ஏராளமான நீலக் கொடிகளைத் தயாரித்துள்ளார்கள்.

இவர்கள் என்ன செய்த போதிலும் குடாக்கரைப் பகுதி எங்கிலும் தமிழரசுக் கொடி கம்பீரமாகப் பறந்த வண்ணமிருக்கின்றது.

இம்மாதம் பதினாறந் திகதி வெள்ளை மணலில் ஒரு உபதபாற் கந்தோர் திறக்க விருப்பதால், அதற்கு வருகை தரும் திரு. கலுகல்லை அவர்களைத் திருப்திப் படுத்த ஏராளமான நீலக் கொடிகளை இவ்விரு தலைமைக்காரரும் தயார் செய்கிறார்கள்.

யூ. என். பி. ஆட்சி காலத்தில் பணமொதுக்கப்பட்டுக் கிண்ணியாவில் கட்டப்பட்ட ஆஸ்பத்திரி சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன் திறக்கப்பட்டு கடமையாற்றுகிறது. அவ்வாஸ்பத்திரி இன்று பழைய ஆஸ்பத்திரியாகக் காட்சியளிக்கிறது. இதனை இம்மாதம் 20ம் திகதி சுகாதார அமைச்சர், சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசாரத்திற்காகத் திறந்து வைக்க ஏற்பாடுகள் நடைபெறுகிறது.

# மந்திரிப் பதவியில் எமக்கு அக்கறை இருந்ததில்லை

## திரு. சுந்தரலிங்கத்துக்கு தமிழரசுத் தந்தையின் ஆணித்தரமான பதில்

திருவாளர் சுந்தரலிங்கத்தின் நாட்டமெல்லாம் மந்திரிப்பதவியின் மீதே லயித்திருப்பதால், மற்றவர்கள் மந்திரிப்பதவியை முன்விட்டல்லாமல் வேறு காரணத்துக்காக அரசியலில் ஈடுபடுவதென்பது அவருக்கு விளங்காத ஒரு புதிராக இருக்கின்றது.

தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றவர்கள் ஒருவருக்கும் மந்திரியாக வரவேண்டுமென்ற நப்பாசை இருந்ததில்லை. எமது மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் கடமை எம்மை எதிர்நோக்கியிருந்தது. அந்த உரிமைகளைப் பாதுகாப்பதில் தான் எமக்கு அக்கறை இருந்ததே தவிர, மந்திரிப் பதவிகளிலல்ல.''

இவ்வாறு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. சுந்தரலிங்கத்தின் குற்றச் சாட்டுக்குப் பதிலளிக்குமுகமாக விடுத்துள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் அவ்வறிக்கையில் கூறுவதாவது:

எனது கட்சிக்கும், எனக்கும் எதிராக திரு. சுந்தரலிங்கம் அவர்கள் காரணமின்றிச் சொல்மாரி பொழிவது, அவர் எமது கட்சியின் அபேட்சகரை எதிர்த்துப் போட்டியிடும் தொகுதியான மூதூரில் நடாத்தும் தேர்தல் பிரசாரத்தில் அவர் பெற்று வரும் அநுபவத்தின் எதிரொலியாக இருக்க வேண்டும் என்ற ஒரு விளக்கத்தையே தர முடிகிறது.

திரு. சுந்தரலிங்கம் தமது நீண்ட கடிதத்தில் எழுதியிருப்பவற்றில் பெரும்பாலும் எனது கவனத்துக்குரியதல்ல. ஆனால், நான் மந்திரியாக்கப்படாததால் தான் தமிழ்க் காங்கிரஸிலிருந்து விலகினேன் என அவர் குறிப்பிட்டிருப்பதுக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

நான் மந்திரியாக வருவது பற்றித் தமிழ்க் காங்கிரஸில் எந்தக் காலத்திலாவது பிரச்சினை இருந்ததே கிடையாது. மந்திரிப் பதவியையிட்டு எனக்கும் திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்துக்குமிடையில் போட்டி இருந்ததும் இல்லை. பிரச்சினை எதுவாக இருந்ததென்றால், திரு. டி. எஸ். சேனநாயக்காவின் அரசாங்கத்துடன் நாங்கள் எந்த நிபந்தனையுமின்றிச் சேருவதா, இல்லையா என்பதே.

இப்படிச் சேர்வதால் தமிழ்க் காங்கிரஸ் எதற்காக நிறுவப்பட்டதோ அவற்றையெல்லாம் விட்டுக் கொடுக்க வேண்டிவருமென்று எங்களிற் சிலர் எண்ணினோம். திரு. பொன்னம்பலமோ வேறு விதமாக எண்ணினார்.

இந்திய, பாகிஸ்தான் குடியுரிமைச் சட்ட மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, அதை நாம் ஆதரித்தால் எமது கட்சிக் கொள்கையில் முக்கியமான ஒரு அம்சத்தை விட்டுக் கொடுத்தவர்களாவோம் என்பது எங்களுக்கு நிதர்சனமாக விளங்கிற்று.

(9-ம் பக்கம் பார்க்க)

சகலவித மூலநோய் நிவாரணி
ரிச்லெட்ஸ்
ப்ளட் பியூரிபயர்
(RICHELET'S BLOOD PURIFIER)
இரத்த சுத்தி செய்து


மூலம்
வாதம்
படை
(ECZEMA)
மாத விடாய்
கோளாறுகள்

முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானாகவே ஏற்படும்.
எங்கும் கிடைக்கும்.
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
63, பேங்ஷால் வீதி, கொழும்பு.
(போன்: 2885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் தொழிலாளருக்கு வேலை நீக்கப் பயமுறுத்தல்

## கல்ஓயா அபிவிருத்திச் சபையின் சுற்றறிக்கை

கல்ஓயா அபிவிருத்திச் சபையில் கடமையாற்றும் இலங்கையரல்லாதோர் தங்களின் விஸா, பாஸ்போர்ட், அது சம்பந்தப்பட்ட இதர தஸ்தாவேஜுகள் ஆகியவற்றை மூன்று மாதங்களுள் சமர்ப்பிக்கா விட்டால், ஆகஸ்டு 15ம் திகதிக்குப் பின்னர் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்று கல்ஓயா சபை நிர்வாகி சுற்றறிக்கை ஒன்றின் மூலம் பயமுறுத்தியிருக்கிறார். இச்சுற்றறிக்கையைக் கண்டித்து கல்ஓயா நகரசுத்தி ஐக்கியத் தொழிலாளர் சங்கத்தின நிர்வாக செயலாளர் திரு. சுந்தரம் ஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் கூறியதாவது:—

நாட்டின் சுகாதாரத்துக்காக நாளெல்லாம் பாடுபடும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு, குறிப்பாக கல்ஓயா அபிவிருத்தி சபையில் கடமையாற்றும் நகரசுத்தி, இதர தொழில் செய்யும் இலங்கையரல்லாத தொழிலாளர்களுக்கு, மேற்படி சபையின் அதிகாரியால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை பெரிதும் பாதகம் விளைவிப்பதாகவும், அவர்களின் வருங்காலம் இருள் சூழ்ந்ததாகிவிடுமோ என அஞ்சத்தக்கதாகவும் இருக்கிறது.

நாட்டின் நாலா பக்கத்திலும் இப்படிப்பட்ட பிரச்சினை ஏற்பட்டிருப்பினும், கல்லோயா சபை ஒருபடி மேலாகச் சென்று, தனது சர்வாதிகாரத் தன்மையை, தொழிலாளர்களை நசுக்கி ஒடுக்கும், துக்ககரமான மனப்பான்மையைக் காட்டிவிட்டது.

இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளர் நலனுக்காக அல்லும்பகலும் கண்டகண்ட இடங்களிலெல்லாம் கதறியழுத தலைவர்கள் கடைசியாக, எங்கோ உல்லாசப் பயணம் சென்று விடுகிறார்கள். நிலைமையோ கட்டுக்கடங்காது சென்று, என்றோ, எப்போதோ என்றிருந்த நிலைமாறி, இரண்டொரு மாதங்களுக்குள் முடிக்க வேண்டுமென்ற அளவு முற்றி வந்து கொண்டிருக்கிறது. இந்நிலையிலும் ஏனோதானோ என்றிருந்துவிட்டோமானால் நாதியற்றவர்களாக ஆக்கப்படுவது உறுதி

இன்றைய நிலையில் கெடுபிடியாகத் தலைதூக்கும் எண்ணத்தை மேற்படி சபையினர் கொண்டு வந்திருப்பது அதன் உள் நோக்கத்தை உண்மையான எண்ணம் எது என்பதை நாம் கண்கூடாகக் காண உதவுகிறது.

எத்தனையோ ஆண்டுகளாகத் தீர்க்க முடியாத நிலையிலுள்ள இந்தியர் பிரச்சினையை கல்ஓயா சபையினர் மூன்று மாதத் தவணைக்குள் தீர்த்து இந்தியத் தொழிலாளர்களை நாதியற்றவர்களாக, பிரகடனப் படுத்த உறுதி பூண்டுள்ளனர்.

காலமெல்லாம் உழைத்த தொழிலாளர்கள், பாஸ்போட் விசா இல்லை என்ற திருகுதாள காரணத்தைக் காட்டி "ஆகஸ்டு 15-ல்" பிச்சைக்காரர்களாக்கப்பட இருக்கிறார்கள்.

இந்தசூழ்ச்சியை எதிர்த்து இங்குள்ள இந்திய குடியரசுத் தூதுவர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். நேரு—கொத்தலாவலை ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணானது, மூர்க்கத்தனமானது என்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டுமென, நாட்டின் பல பாகங்களிலும், பரந்து கிடக்கும், இந்தியத் தொழிலாளர்களையும், அவர்கள் தம் தலைவர்களையும் இதன் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

மௌலானா

அச்சடி சீத்தைகள்



ரமணீகரமாக காட்சியளிக்க

இன்றே தெரிவு செய்யுங்கள்

- கண்ணைக் கவரும் டிசைன்கள்
- சாயம் மங்காதவை
- நீடிய உழைப்பு
- தரத்தில் உயர்ந்தது

விசேஷமாக வரவழைக்கப்பட்டிருக்கும் புத்தம் புதிய டிசைன்களை, தெரிவு செய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.

மௌலானா (சிலோன்) லிமிட்.

கொழும்பு, மருதானை, கண்டி.

### செனட். தோமாஸ் சனசமூக நிலையம்

பருத்தித்துறை செனட். தோமாஸ் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் சனிக்கிழமை (9—6—62) செனட். தோமாஸ் றோ. க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. வண. கட்டளைக் குரவர் லெபோன் அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டத்தில் ஆசிரியர் திரு. ம. றெமிசியார் அவர்கள் அங்கத்தவரின் தொண்டு பற்றி விளக்கி உரை நிகழ்த்தினார். 'விவாதமும் இணக்கமும்' என்ற விடயம்பற்றி செல்வன் த. எட்வேட் பேசினார். குரவரின் தலைமையுரை முடிவடைந்ததும் நடப்பு வருட புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பின்வருவோர் ஏகமனதாகத் தெரியப்பட்டனர்:

தலைவர்:— ம. அருளானந்தம், உபதலைவர்: த. எட்வேட், செயலாளர்: எஸ்.ஆர். யேசுநாதன், உப செயலாளர்: றெ. மரியபேர்னட், பொருளாளர்: எம் எவ். வின்சன்டிபோல், உபபொருளாளர்: அ. சந்தியாப்பிள்ளை, சனசமூக பொறுப்பாளர்: சி. மரியதாஸ், கௌரவ போஷகர்கள்: திரு. சின்னத்தம்பி, திரு. மரியாம்பிள்ளை ஆசிரியர்.

# மக்கள் குரல்

## ஆங்கிலப் பத்திரிகையின் அவசியம்

தமிழ் மக்களைத் தவறான வழிகளில் எடுத்துச் செல்ல முயற்சி செய்யும் சில பிரமுகர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் இலங்கை ஆங்கிலப் பத்திரிகைகள் முன்னணியில் நிற்கின்றன.

இப்பொழுது சில காலமாக தமிழரசுக் கட்சியை எதிர்த்து எழுதப்படும் கடிதங்களைப் பிரசுரித்தும், அதை ஆதரிக்கும் கடிதங்களை நிராகரித்தும் வருகின்றன. உதாரணத்திற்கு, ஒரு ஆங்கிலப்பத்திரிகையில் தமிழரசுக் கட்சியை எதிர்த்து தலையங்கமும் நேயர் கடிதங்களும் பிரசுரிக்கப் பட்டிருந்தன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே விடை அளிக்குமுகமாக ஐந்து கடிதங்கள் எழுதியிருந்தேன். ஒன்றேனும் பிரசுரிக்கப்படவில்லை. காரணம் யாதோ நானறியேன். ஆனால் என் கடிதங்களை சென்னை ஹிந்துப் பத்திரிகை பிரசுரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதைப்போன்றே மற்ற ஆங்கிலப் பத்திரிகைகளும்.

இச் சூழ்நிலையில் சுதந்திரன் ஒவ்வொரு வாதத்திற்கும் விடை அளித்து தமிழ் பேசும் மக்களை கட்டுப்படுத்தி ஒற்றுமைப்படுத்த வேண்டும்.

இயன்றால் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றை நடாத்த முயற்சி எடுக்க வேண்டும்.

மா. முருகேசு,

கொழும்பு.

### தொடர்ந்து போராடுவோம்

தமிழ் பேசும் மக்களின் உரிமையைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாக சென்ற வருடம் தமிழரசுக் கட்சியின் கீழ் நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டம் தமிழர்களின் முயற்சிக்கு அமோக வெற்றியெனக் கூறுவதில் வியப்பில்லை. தொடர்ந்து நடக்க விருந்த இவ்வுரிமைப் போராட்டத்திற்கு இலங்கை அரசாங்கம் தடையுத்தரவு விதித்து அவசர கால சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது. இதன் காரணமாக எமது கோரிக்கைகளைப் பூரணமாகப் பெற முடியாவிட்டாலும் சத்தியாக்கிரகத்தைச் செவ்வனே நடாத்தினோம்.

இலங்கையில் பல பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் சாதி, மத பேதமின்றி அவைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு தமிழுக்கு சம அந்தஸ்து வாங்கும் வரை, சுதந்திரப் போராட்டத்தில் கலந்து ஈடுபடத் தயாராக விருக்கின்றார்கள் ஆனால் ஒரு சில அரசியல் வாதிகள் சென்ற வருடம் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் தோல்வி கண்டுவிட்டது என்று கூறுகிறார்கள். இது முற்றிலும் தவறான கருத்து. இதை நம்பி ஏமாந்து விடாதீர்கள். இலங்கையில் தமிழர்கள் நடத்தும் சத்தியாக்கிரக போராட்டத்திற்கு என்றுமே தோல்வியில்லை.

ஆனால் சில அரசியல் கட்சியில் உள்ளவர்கள் தமிழரசுக் கட்சியைக் கவிழ்க்கச் சதி செய்வதுமன்றி தமிழர்களை நசுக்கப் பார்க்கிறார்கள். ஆனால் தமிழர்கள் ஏமாறக் கூடியவர்கள் அல்ல. தற்போது தடை உத்தரவு நீக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. எனவே மீண்டும் எமது நாடு விடுதலை பெற்று சுதந்திர உணர்ச்சியுடன் வாழ எவ்வளவு காலமானாலும் சரி "உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற பாரதியின் பாடலுக் கேற்ப வான் எமது தலையில் இடிந்து விழுந்தாலும் எங்கள் போராட்டமாகிய சத்தியாக்கிரக அறப் போரில் ஈடுபட்டு தமிழ் அன்னையின் கண்ணீரைத் துடைக்க இன்றே போராட்டம் நடத்தி வெற்றி காண்போம்.

எஸ். பி சுப்பையா,

எட்டியாந்தோட்டை.

### முனிவரின் மௌனம் கலைந்தது

தவம் செய்து கொண்டிருந்த நம் சுந்தரமுனிவரின் மௌனம் கலைந்து விட்டது. நிட்டை கெட்டு விட்டது.

செய்த தவறுகளுக்காகவும் விட்ட தவறுகளுக்காகவும் பச்சாத்தாபப்பட்டு சிவியபரியந்தம் தவம் செய்யப் போவதாகச் சொன்ன முனிபுங்கவரின் மோனம் கலைந்து விட்டது. மோகம் பிறந்து விட்டது.

சுந்தரமுனிவர் அறிவில் பெரியவர். உண்மை ஆனால் அரசியலில் தீர்க்கதிருஷ்டி இல்லாமல் நடந்து கொண்டவர். அதனால் தமிழ் மக்களின் மதிப்பை இழந்து விட்டவர். அப்படிப்பட்டவர் மீண்டும் அரசியலில் குதித்திருக்கிறார்.........சொன்ன சொல்லை மறந்து, செய்த பிரதிக்கினையைத் துறந்து. காரணம்? வேறென்ன? ஆசைதான்.

பாராளுமன்றத்துக்குள் இருந்து உரிமைக்கு போரிடுவதில் பிரயோசனம் இல்லை என்று சொன்னவரே தேர்தலுக்கு நிற்கிறார். அவர் அதற்குச் சொல்லும் காரணம் சேவை செய்ய வேண்டுமென்ற தனக்குள்ள ஆசை தானும்!

ஒருவர் பாராளுமன்றத்திற்குப் போனால்தான் மக்களுக்குச் சேவை செய்ய முடியுமா? மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற உண்மையான ஆசை சுந்தரமுனிவருக்கு இருந்தால் அவரால் செய்யக்கூடியதை, நமக்குத் தேவைப்பட்டதைச் செய்யட்டுமே? வேண்டுமானால் கணிதத்திலே அவருக்குள்ள அறிவை, அதைப் பெற வசதி இன்றி ஏங்கும் தமிழ் சந்ததிக்கு, அள்ளி அள்ளிக் கொடுக்கலாம். அப்படி அவர் செய்தால் அது அவர் தமிழ் மக்களுக்குச் செய்யும்

(15-ம் பக்கம் பார்க்க)

## நுவரெலியாவில் தனிச் சிங்களம்

### மலைநாட்டுத் தமிழருக்குச் சதி

மலைநாட்டுத் தமிழர் எவ்வளவு புறக்கணிக்கப் படுகின்றனர் என்பதற்கு அண்மையில் நுவரெலியாவில் நடைபெற்ற பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி இதை அப்பட்டமாய்க் காட்டி விட்டது. அண்மையில் 9-6-62-ல் நுவரெலியா வட்டார பாடசாலைகளின்-சிரேஷ்ட பாடசாலைகளின் உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டி சம்பந்தமான நிகழ்ச்சி நிரல் அட்டவணை, அழைப்புகள் யாவும் சிங்களத்திலேயே அச்சிடப்பட்டிருந்தன. பங்கு பற்றும் மாணவ மாணவிகளின் பெயர்கள் யாவும் சிங்களத்திலேயே இருந்தன.

நுவரெலியா முனிசிப்பல் எல்லைக்குள் பெரும்பான்மையான மாணவர்கள் தமிழ் மாணவரே. நல்லாயன் கொன்கந்தப்பொலை பாடசாலைகளிலும் பெருமளவு தமிழ் மாணவர், மாணவிகள் உளர். தனித் தமிழ் பாடசாலைகளும் உள. நுவரெலியா வட்டாரத்தில் வசிப்பவர்களில் அரைவாசிக்கு மேல் மலைநாட்டுத் தமிழரேயாவர். இப்படியிருக்கையில் தமிழில் இல்லை என்ற ஏதேச்சாதிகாரமே தாண்டவமாடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




க. மகேந்திரன், போயிட்டி.

கே: எனது நண்பர் ஒருவர் கூறுகிறார். திரு. சுந்தரலிங்கம் மூதூரில் வெற்றிபெறுவாரென்று—நான் இல்லையென்று பந்தயம் பிடிக்கிறேன். இதில் யாருக்கு வெற்றி?

ப: உங்களுக்குத்தான் வெற்றி. தேர்தலில் அல்ல—பந்தயத்தில். காரணம் மக்களை மயக்க என்னதான் மாய் மால வார்த்தைகளைப் பேசினாலும் திரு. சுந்தரலிங்கம் வெற்றி பெறுவதற்காக இத் தேர்தலில் போட்டியிடவில்லை. அவரது அந்தரங்க நோக்கம் தமிழ்பேசும் மக்களை இரு கூறுகப் பிளவு படுத்தி, தமிழ்—முஸ்லிம் பேதத்தை ஏற்படுத்தி தமிழரசுக் கட்சி அபேட்சகருக்குக் கிடைக்கும் வாக்குகளைச் சிதறடிப்பதுதான். சுதந்திரக் கட்சிக்கு வெற்றி தேடிக் கொடுப்பதற்காகச் செய்யும் நரித் தந்திரந்தான் இது.

ஃ

எஸ். எம். பாரூக் ஜவ்மின், பதுளை.

கே: கிழவனைப் பெண்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள். அதைப்போல கிழவியை வாலிபர் திருமணம் செய்து கொண்டாலென்ன?

ப: செய்து கொள்ளலாம்—ஆனால் வயதுக்கு மூத்த பெண்ணை மணம் முடிப்பதால் ஆணுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்படக் கூடுமென்பது சில வைத்திய நிபுணர்களின் கருத்து.

ஃ

சி. அரசீயல் ருஜா, செம்பியன்பற்று.

கே: பத்திரிகைத் தணிக்கை தொடங்கி, அது ரத்தாக மட்டும் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்?

ப: திருமதி குயுக்தியாரின் கேள்விகளுக்கு நேரடியாக பதில் அளித்துக்கொண்டிருந்தேன்.

கே: தாங்கள் எப்போதாவது நிம்மதியாக உறங்கியதுண்டா?

ப: சுதந்திரம் பெறுவதற்காகப் போராடுகிறவனுக்கு நிம்மதி ஏது? தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெற்ற தினத்தன்றுதான் நிம்மதியாக ஒரு தூக்கம் போடலாமென்று நினைத்திருக்கிறேன்.

ஃ

கே. கே. ஆறுமுகம், காரைதீவு.

கே: காந்திஜிக்கு "மகாத்மா" என்று சிறப்புப்பெயரிட்டது ரவீந்திரநாத் தாகூர் என்கிறேன் நான். எனது நண்பர் ஒருவர் இல்லை என்று மறுக்கிறார். யார் கூற்று சரி?

ப: நீர் கூறுவதுதான் சரி.

ஃ

கே. பாக்கியவதி, கிருஷ்ணபுரம்.

கே: என் காதலரைச் சந்தித்துப் பேசுவதைத் தடை செய்யாத என் பெற்றோர் வேறு வரன் தேடுவதிலும் முனைகின்றனர், காரணமென்ன?

ப: தடை செய்யாத காரணம், காதல் கல்யாணத்துக்கு உதவாது என்பதைப் பெற்றோர்கள் தெரிந்திருப்பதுதான். வேறு வரன் தேடுவது கல்யாணத்துக்கு.

ஃ

எழுச்சிதாஸன், பெரிய நீலாவணை.

கே: படித்த வாலிபர்கள் உத்தியோகம் கிடைத்தவுடன் எந்த எண்ணத்துடன் தங்கள் கடமைகளைச் செய்கிறார்கள்?

ப: பெரிய சீதனத்துடன் பெண்களை வேட்டையாடலாம் என்ற கெட்ட எண்ணத்துடன்...

ஃ

கணேஷ், கல்முனை.

கே: என்னை ஒரு செல்வந்தரின் புதல்வி காதலிக்கிறாள். "உன்னைப் போன்ற அந்தஸ்துடையவர்களையல்லவோ நீ விரும்ப வேண்டும்" என்று பல சமாதானம் கூறியும் கேட்பதாயில்லை. 'கைவிட்டால் சாவேன்' என்பவளை நிராகரித்தால் வாழ்வில் நிம்மதி கிடைக்குமா?

ப: நிராகரித்தால், வறுமைக்குத்தான் நீர் தாலி கட்ட வேண்டும். காலடியில் வந்து விழும் செல்வத்தை ஏனையா மறுக்கிறீர்? அதுசரி! காதலித்தால் மட்டும் போதுமா? கல்யாணம் செய்யவும் வேண்டாமா? அதற்குத் தயாரா என்று கேட்டுப் பாரும்!

ஃ

வே. சண்முகராசா, உப்புவெளி.

கே: சிங்களமே முக்கிய பாஷையாக இருப்பதால் அதைப் படிக்க வேண்டியதாயிருக்கிறது. சிங்களத்தைப் படித்தால் நாம் முன்னேற ஏதும் சிறந்த வழி இருக்கிறதா?

ப: சிங்களம் நமது மொழியை அடக்கிவிட்டு நம்மை ஆட்சி புரிய வருகிறது. எனவே அந்த மொழியைக் கற்பதால் நமது மொழி சாசுவதமாக அழிந்து போவதோடு நமது இனமும் இல்லாது ஒழிந்துவிடும். இனம் ஒழிந்த பின் முன்னேற்றம் எங்கிருந்து வரும்? ஆகையால்தான் கூறுகின்றோம் சிங்களம் கற்க வேண்டாம்—வேண்டாம்—வேண்டாம் என்று.

ஃ

வி. பாலசுப்பிரமணியம், தெல்லிப்பழை மேற்கு.

கே: சர்க்கரையும் கற்பூரமும் விலையேறி இருப்பதேன்?

ப: கசிப்பும், கடவுள் பூசையும் அதிகரித்திருப்பதால்.

ஃ

தமிழ்ச் செல்வன், போகல மைன்ஸ்.

கே: தன்னைத் தானே உயர்த்திக் கொள்பவன் தாழ்த்தப்படுவானா? அல்லது தன்னைத் தானே தாழ்த்திக் கொள்பவன் உயர்த்தப்படுவானா?

ப: தானே தன்னை உயர்த்தியோ தாழ்த்தியோ கொள்ளாதவன் உயர்த்தப்படுவான்.

ஃ

இ. திருநாவுக்கரசு, ஸ்பிரிங்வல்லி.

கே: நீங்கள் இலங்கையின் சர்வாதிகாரியாக வந்தால்.........?

ப: நான் சர்வ—அதிகாரியாகி விட்டால் வேறு அதிகாரிகளுக்கு அரசாங்கத்தில் இடமிருக்காது. அவர்கள் எல்லோருக்கும் 'கல்தா' கொடுத்துவிட்டு, நானே சர்வ அதிகாரங்களையும் செலுத்துவேன்.

ஃ

வெ. உங்கு, அம்பலமணி.

கே: திருவாளர் குயுக்தியாரிடம் நான் பல கேள்விகள் கேட்டும் பதில் கிடைக்க வில்லையே! ஏன்?

ப: இதோ கிடைத்துவிட்டதே!

ஃ

எம். முருகேசு, புதூர்.

கே: பயிற்றப்பட்ட இரு ஆசிரியர்கள் கொம்யூனிஸ்டுகளுக்குப் பின்னால் திரிகிறார்களே ஏன்?

ப: நப்பாசை—கொம்யூனிஸ்டுகள் அரசாங்கத்தின் செல்வப்பிள்ளைகளாதலின், அவர்களின் சிபார்சு மீது உத்தியோகம் பெறலாமென்ற தவறான எண்ணம்.

ஃ

நா. குமாரவேல், வேலணை.

கே: விடுதலை வீரனுக்கு வேதனை தருவது எது?

ப: சகாக்களே தன்னைக் காட்டிக் கொடுத்தல்.

ஃ

மு. சி. நாதன், மன்னார்.

கே: உரிமைகள் பெற அடங்காத் தமிழர் திட்டங்கள் வைத்துள்ளாரா? அத்திட்டமென்ன?

ப: வைத்திருக்கிறார்—தமிழர், முஸ்லிம்கள் எனத் தமிழ் பேசும் மக்களைப் பிரித்தல்—மலை நாட்டுத் தமிழர், வட, கிழ் மாகாணத் தமிழரென தமிழர்களைப் பிரித்தல்,—யாழப்பாணத் தமிழர், மட்டக்களப்பு தமிழர் எனப் பிரித்தல், வவுனியாத் தமிழர் இதர பகுதிகளிலுள்ள தமிழர் எனப் பிரித்தல், தமிழ் ஈழம், சிங்கள ஈழம் எனப் பிரித்தல்—கடைசியில் தன்னையே தமிழ் பேசும் மக்களிடமிருந்து தனியாகப் பிரித்தல்—இதுதான் அந்த மகானுபாவரின் திட்டம்.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல, 1183
கொழும்பு-12.

க. கு. தியாகராஜன், நீர்வேலி.

கே: யாழ்-இளம் எழுத்தாளர் சங்கத்தினர் மந்திரி திரு. இலங்கரத்தினவை ஆண்டு விழாவின் பொருட்டு யாழ்ப்பாணத்துக்கு அழைத்துள்ளனராம். எத்தனையோ படித்த தமிழ்ப் பெரியார்கள் நம் மத்தியிலிருக்க அவர்களை விட்டு, சிங்களத் தீவிரவாதிகளை அழைக்கின்றாரே!

ப: இளசுகள்தானே! உதைக்கும் காலை முத்தமிடும் அளவுக்குத் தமிழன் தன் மானம் இழந்துவிடவில்லை யென்பதைச் சுட்டிக் காட்டி, தவறு செய்வதினின்று அவர்களைத் தடுக்க வேண்டியது பெரியோர்களின் கடமை.

ஃ

சி. மகாதேவா, கொட்டாஞ்சேனை.

சமஷ்டி என்றால் என்ன? இரண்டொரு வார்த்தைகளில் விளக்கம் கொடுங்கள்!

ப: கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் வழக்கறிஞர் திரு. கதிர்வேற்பிள்ளை சமஷ்டி என்ன என்பதை ரத்தின சுருக்கமாக விளக்கியதை உங்களுக்கு அப்படியே சமர்ப்பிக்கிறேன். "ஒரு பெரிய வீட்டில் பல அறைகள்—அந்த அறைகளில் தனித் தனிக் குடும்பங்கள் வசிக்கின்றன. ஆனால் எல்லா அறைகளுக்கும் ஒரே கூரைதான். இதுதான் சமஷ்டி" என்றார் அவர். தேசிய இனங்களுக்குத் தனித் தனி ஆட்சி—ஆனால் ஒரே இணைப்பு அரசின் கீழ். இதுதான் சமஷ்டி ஆட்சி அமைப்பு முறை.

ஃ

எம் சுப்பிரமணியம், சாவகச்சேரி.

கே: திரு. சுந்தரலிங்கத்தின் ஈழத் தமிழர் முன்னணியின் அங்கத்தினர் பட்டியல் தங்களிடம் இருக்கிறதா? மொத்தம் அங்கத்தினர் தொகை எவ்வளவு?

ப: அங்கத்தினர் பட்டியல் என்னிடம் இருக்கிறது. அந்த அதிசய முன்னணியில் ஒரே ஒரு அங்கத்தினர்தான் இருக்கிறார். அவர் பெயர் சி. சுந்தரலிங்கம்.

ஃ

வி இராசதுரை, கிளிநொச்சி.

ப: பாரதத்தின் புதிய ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் தமது மாதச் சம்பளத்தை பத்தாயிரத்திலிருந்து ரூ. 1900 ஆகக் குறைத்து விட்டாரல்லவா? அப் மாதிரி இலங்கை கவர்னர்—ஜெனரலும் தமது சம்பளத்தைக் குறைத்துக் கொள்வாரா?

ப: என்னிடம் கேட்டால்...? இது அவரிடம் கேட்க வேண்டிய கேள்வியல்லவா?

ஃ

இரா. சண்முகம், நூரளை.

கே: ஒரு மாணவன் தனக்குப் படிப்பிக்கும் ஆசிரியைக் காதலித்தால் காதலில் வெற்றி கிட்டுமா? அல்லது படிப்பில் வெற்றி கிடைக்குமா?

ப: குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்டவனுக்கு வெற்றி ஏதையா? தனக்கு அடங்கி நடக்கும் ஆடவர்களையே சில பெண்கள் விரும்புவார்கள். மாணவனை மணந்து கொண்டால் படுக்கை அறையையும் வகுப்பு அறையாக்கிக் கொள்ளலாமென ஆசிரியை திட்டமிடக்கூடும்.

ஃ

த. அருள், கல்முனை

கே: தமிழ் நாட்டில் தி. மு. கழகத்தின் திராவிடஸ்தான் கோரிக்கையும் தமிழரசுக் கட்சியின் சமஷ்டி ஆட்சி கோரிக்கையும் ஒரே நோக்கத்தைக் கொண்டவைகளா?

ப: தமிழ்நாடு, கேரளம், ஆந்திரா, கன்னடம் ஆகிய நான்கு தனித்தனி சுயாட்சிகளைக் கொண்ட திராவிட சமஷ்டிதான் (திராவிட பெடரேஷன்) திராவிடஸ்தான் என்பது. தமிழ் சுயாட்சியையும் சிங்கள சுயாட்சியையும் கொண்ட இணைப்பு அரசுதான் இலங்கையில் தமிழரசுக் கட்சி கோரும் சமஷ்டி ஆட்சி.

ஃ

கே. வி. மணியம், இரக்குவானை.

கே: ஒரு வருடத்துக்கு முன்பு எனது மனைவி இறந்துவிட்டதால் மறுமணம் செய்ய விரும்புகிறேன். இதில் தவறு ஏதுமில்லையே!

ப: தவறில்லை—மறுமணம் செய்யவிரும்பினால் ஒரு விதவைக்கு சந்தர்ப்பம் அளியுங்கள்!


**நாடகம்**
நடிகவேள் லடீஸ் வீரமணி குழுவினரின்
**புனித அருளப்பர்**
அல்லது
**சலோமியின் சபதம்**
23—6—62 சனிக்கிழமை
(பள்ளி மாணவர்களுக்கு)
மாலை 6-30 மணிக்கும்
24—6—62 ஞாயிற்றுக்கிழமை
இரவு 7-30 மணிக்கு
சென் பெனடிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.



**வாழ்க்கையின் சின்னம்!**
**வாழ்வின் புத்துயிர்!!**


ரிஷி சாலாமிஸ்ரி லேகியம் நரம்புத்தளர்ச்சி முதலிய பலவீனங்களை ஒரே நாளில் நிவிர்த்தியாக்கும்.

இதற்கு அத்தாட்சியாக கீழே குறிப்பிடும் நற்சாட்சியை வாசியுங்கள்.

Aynr. Dr. T. H. மதுரநாயகம், கதிர்காமம்,
வைத்தியராஜ் M/s T. D. மதுரநாயகம் & கோ., 12-4-1962
ஞானசுந்தர வைத்தியசாலை,
கொழும்பு.

ஐயா

இன்று எனக்கு 85 வயதாகிறது. நான் கடந்த 55—60 வருட காலமாய் ஞானசுந்தர வைத்தியசாலையில் பலவிதமான வியாதிகளுக்கு வைத்தியமும் செய்து, பலவித தயாரிப்பு மருந்துக்களும் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். பூரண சுகமடைந்திருக்கிறேன். முக்கியமாகத் தங்களின் கருணைக்கிழங்கு லேகியம், ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம், ரிஷி சாலாமிஸ்ரி லேகியம் மிகவும் கை கண்டது.



உன்னத தயாரிப்பு என்பதை முழு மனதோடு உறுதிப்படுத்துகிறேன். இந்த நற்சாட்சி தாங்கள் எவ்விதத்திலும் பிரசுரஞ் செய்யலாம். தங்களின் வைத்திய சிகிச்சையாலும், மருந்துகளின் மகிமையாலும் இன்னும் சுகதேகியாக வாழுகிறேன்.

இங்ஙனம்
லெச்சுமணன் சாமியார்

**30 நாள் மருந்து விலை ரூ. 10-00**
**15 நாள் மருந்து விலை ரூ. 6-00**
தபாற் செலவு முறையே -/95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
**T. D. மதுரநாயகம் & கோ.,**
187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
விபரமடங்கிய கெட்லாக் இனுமாக அனுப்பப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மூதூர் சிங்களத் தொகுதியாக மாறுகிறது

## இனத்தை அழிக்கும் திட்டத்தில் இது முதல் படி

## "சுதந்திரன்" கூற்று மெய்யாகியது

இன்று மூதூர்த் தொகுதியில் தமிழ் இனத்தை அடிமையாக்க முயலும் அரசாங்கக் கட்சியும், தமிழ் இனத்துக்குச் சுதந்திர வாழ்வளிக்கப் போராடி வரும் தமிழரசுக் கட்சியும் மோதுகின்ற நிலையில், 10-4-55 சுதந்திரன் இதழில் வெளியிடப்பட்டிருந்த பின் வரும் கட்டுரை மூதூர் வாக்காளருக்குச் சில நிதர்சனமான உண்மைகளை ஞாபகமூட்ட பெரிதும் உதவும் என எண்ணுகிறோம்:

உண்மையில் ஆட்சியாளர்கள் அடைந்த சுதந்திரத்தை ஆட்சி பீடத்தை ஆக்கிய பாமரர்களும், பாட்டாளிகளும் கண்டிப்பான முறையில் அனுபவிக்க வேண்டுமல்லவா? ஆனால் பெற்ற தாய், தன் குழந்தை முன்னேறி, மக்கள் பணியிலீடுபட்டு, அந்த மகவை மக்கள் புகழ, மனம் களிக்க—பார்த்துக் குதூகலமடைவாள். இதே போல ஆட்சி பீடத்தை நிறுவிய இலங்கை மாதா தன் குழந்தைகளாகிய ஆட்சி பீட அதிகாரிகள் உண்மை ஜனநாயக முறையில் இனவெறி, சாதித்துவேஷம், வகுப்பு வேற்றுமை ஆகியன மலியாமல் இலங்கைப் பிரஜைகளுக்குத் தொண்டாற்ற வேண்டும். ஆனால், ஆட்சியாளர்கள் ஈழநாட்டின் மற்றக் குழந்தையாகிய தமிழினத்துக்குத் தனிப்பெரும் துரோகம் செய்ய திட்டவட்டமான வேலைகளிலீடுபட்டு முதலாவதாக அதைக் குடியேற்றத் திட்டங்களில் சாதித்தது வருந்தத்தக்க விஷயமாகும். கந்தளாய்—அல்லையாகிய குடியேற்றத் திட்டங்களில் அன்றும் இன்றும் சிங்களவரைப் பரப்பி மூதூர் தொகுதியைச் சிங்களத் தொகுதியாக்க அரசாங்கம் எண்ணி விட்டதை நினைத்தால் இந்த அரசியல் நெருக்கடியான நிலையில் உள்ளூர் வாசிகளுக்கு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலிருக்கின்றது.

முதலாவது குடியேற்றத் திட்டத்தில் குடியேற்றப்பட்ட ஒரு ஏழை விவசாயிதனக்குக் கொடுக்கப்பட்ட ஐந்து ஏக்கர் நீர்ப்பாசன காணியில் வேளாண்மை செய்தும் மூன்று ஏக்கர் மேட்டுப் பிரதேசக் காணியில் தோட்டங்கள் செய்தும் பல மாதங்களாக குடியேற்றத் திட்டத்திலேயே குடும்பத்துடன் குதூகலமாக வாழ்க்கைத் தேரை ஓட்டிச் சென்றனர். இந்தச் சமயத்தில் கிண்ணியாவில் தன் மகளுக்குத் திருமணம் நடாத்துவதற்காக கிண்ணியா வந்தனர். இங்கு வந்து திருமணம் முடித்து ஒரு கிழமையளவில் சுணங்கி விட்டு மேற்படி கந்தளாய்க்குச் சென்றனர். அங்கு சென்றதும் இவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட வீட்டில் வேறு ஒரு சிங்களக் குடும்பம் வசிப்பதைக் கண்டார்கள். இந்நிலையைக் குடியேற்றத் திட்ட அதிகாரியிடம் சென்று முறையிட்ட பொழுது அவர் என் இஷ்டம் என்று கூறினார்.

இவர்கள் அழுத கண்களுடன் குடியேறிய குடும்பத்தைக் கெஞ்ச, அவர்கள் இவர்களைத் துரத்தி விட்டனர். பின் எத்தனையோ விண்ணப்பங்கள் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தும் அரசாங்கம் ஆவன செய்ய வில்லை. இதே போல இன்னும் எத்தனையோ குடும்பங்கள் இந்நிலையில் ஆக்கப்பட்டுக் கஷ்டப்பட்டிருக்கின்றனர்.

படிப்படியாக அல்லையிலும் கந்தளாயிலும் சிங்களவர்களை இன்று எண்ணிக் கணக்கெடுக்க முடியாத முறையில் பரப்பிவிட்டது அரசாங்கம். இதனால் உள்ளூர் வாசிகள் சுபீட்சமாக வாழ்வதற்கு குடியேற்றப்பட்ட சிங்களவர்களின் முரட்டுப் பழக்க வழக்கங்கள் முட்டுக்கட்டை போடுகின்றன. உதாரணமாக சென்ற முறை மூதூரில் கிளப்பிய உள்ளூர் குழப்பத்தையும், கிண்ணியாவைச் சேர்ந்த நெடுங் கரைச்சையில் புகைந்த சிங்கள முஸ்லிம் குழப்பத்தையும் ஆதாரமாகக் கொள்ள முடியும்.

### நேருஜியும் ரோஜாவும்!

சட்டைப் பித்தான் துளைக்குச் சரியான ரோஜா மலர் அகப்படாமல் பிரதமர் நேரு சிறிது தடுமாறினர்.

பிரதமர் நேரு டில்லி போகும் வழியில் சஹரான்பூர் புறப்படும்போது இந்தச் சம்பவம் நடந்தது.

அரசாங்க மாளிகையிலிருந்து வழக்கமாகத் தான் அணிந்துகொள்ளும் ரோஜா மலர் இல்லாமலே பிரதமர் நேரு வெளியே வந்தார்.

வெளியில் வந்தவுடன் சுற்றிப் பார்த்துவிட்டு பலத்த சிரிப்பிற்கிடையே 'எவ்வளவு அழகான பெரிய பூந்தோட்டம் வைத்திருக்கிறீர்கள்; ஆனால் எனக்கு ஒரு ரோஜா மலர் கிடைக்கவில்லை' என்றார். உடனே ஒரு அதிகாரி சென்று நிறைய ரோஜா மலர்களைக் கொண்டுவந்தார்.

பொருள் வளம் சிறக்க 4:

# பதநீர் பதப்படுத்தும் முறை

## குறைந்த செலவும் நிறைந்த பயனும்

திரு. கூ. சம்பந்தம்

பொருள் வளம் சிறக்க-4 என்ற பகுதியில் 'கலைக்கதி'ரில் வெளியாகியிருந்த கட்டுரையின் முதல்பாகம் 'தமிழகத்தின் தேசிய பானம் பதநீர்' என்ற தலைப்பின் கீழ் சென்ற வாரச் சுதந்திரனில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதன் இரண்டாவது பாகமே இது. இத்துடன் கட்டுரை நிறைவுறுகிறது.

மின்சார மில்லாத இடங்களில் குளிர்விக்கும் பெட்டி இயங்க இயலாதபடியால் கீழ்க்காட்டியபடி பதநீர் பதப்படுத்தப்படுகிறது.

உயர்ந்த இடத்தில், பதநீரைத் துணியால் வடிகட்டித் தொட்டிலில் வைக்கவும். சற்று உயரம் குறைந்த இடத்தில் மற்றொரு தொட்டியின் உள் 25 அடி நீளமுள்ளதும் ½ அங்குலம் விட்டமுள்ளதுமான தாமிரக் குழாயைச் சுருட்டி வைத்து ஒரு நுனியைப் பதநீர் தொட்டியில் இணைக்கவும். மற்றொரு நுனியை இரண்டாவது தொட்டியின் வெளிப் பாகத்தில் எடுத்து வைக்கவும். அரை அடி ரப்பர் அல்லது அல்கதின் குழாயை இரு நுனியிலும் பொருத்துக. முதல் தொட்டியில் உள்ள வடிகுழல் திருக்கியில் பொருத்துக. இப்பொழுது உயர்ந்த தொட்டியில் உள்ள பதநீர், குழாயைத் திறந்ததும் நேரடியாக 25 அடி நீளமுள்ள குழாய் மூலம் பாய்ந்து வெளியே நீட்டப்பட்டுள்ள நுனி மூலம் வெளியேறும். பதநீர் உள்ள முதல் தொட்டியும், குழாய்ச் சுருள் உள்ள இரண்டாவது தொட்டியும் சாதாரண துத்தநாகத் தகட்டினால் செய்து, வெளியில் தெர்மோகோல் (Thermocole) என்னும் பொருளால் இன்சூலேட் செய்யவும். இரண்டாவது தொட்டியில் ஒரு பாகம் பனிக்கட்டியையும், 3 பாகம் உப்பையும் கொட்டித் தாமிரக் குழாய்ச்சுருள் புதையும்படி நிரப்பவும்.

முதலில் முதல் தொட்டியின் குழாயைத் திறந்தால் பதநீர் உடனே தாமிரக் குழல் மூலம் சென்று வெளியேறுகிறது. நுனியில் பொருத்தியுள்ள ரப்பர் அல்லது அல்கதின் குழாய் மூலம் அருகில் அடுக்கி வைத்துள்ள புட்டிகளில் விரைவில் நிரப்பவும்.

சராசரி 75°F வெப்ப நிலையில், முதல் தொட்டியில் உள்ள பதநீர் 25 அடி நீளம் உள்ள தாமிரக் குழாய் மூலம் சென்று வெளியேறும் பொழுது 40°F லிருந்து 44°F வெப்ப நிலைக்குத் தணிந்து விடுகிறது.

இந்தப் புட்டிகள் தெர்மோகோலால் மூலம் இன்சூலேட் செய்யப்பட்ட பெட்டிகள் மூலம் விற்பனை நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப் பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. குளிர வைக்கப்பட்ட பின் சுமார் 8 லிருந்து 10 மணி நேரம் வரை பதநீர் குளிர்ந்தபடியே இருக்கிறது; புளிப்படைவதற்கோ அல்லது கள்ளாக மாறுவதற்கோ வாய்ப்பில்லை. முதல் தொட்டியில் பதநீரை ஊற்றியவுடன் உடனே குளிர்விக்கப்படுவதால், இதற்கு (Flash chilling) 'திடீரெனக் குளிரவைத்தல்" என்று பெயர்.

### உடலுக்கு உறுதி

பதநீர் குடிப்பது, உடலுக்கு உறுதியும் வளமும் தருவதால் போதுமான உணவில்லாத பள்ளிக் கூடக் குழந்தைகளுக்குத் தினமும் இதைக் கொடுக்கலாம்.

சாதாரணமாக 8 அவுன்ஸ் பதநீர்

| | |
|---|---|
| சேகரிக்கும் செலவு | 0—03 புதுக்காசு |
| அதைக் குளிர்விக்கும் செலவு | 0—01 " |
| வியாபாரச் செலவு | 0—03 " |
| விற்பனை செய்யும் ஸ்தாபனத்திற்கு இலாபம் | 0—03 " |
| மொத்தம்... | 0—10 " |

ஆகவே 8 அவுன்ஸ் கொண்ட புட்டி ஒன்று 0—10 புதுகாசுக்கு விற்கப்படுகிறது.

அண்மையில் மத்திய பனை வெல்ல ஆராய்ச்சிக்கூட்டம் செய்த பரிசிலனையின்படி பதநீர் கண்ணாடிப் புட்டிகளில் அடைப்பதற்குப் பதிலாக, அல்கதினால் செய்யப்பட்ட புட்டிகளில் அடைக்கப்படுகிறது. இவ்வாறு அல்கதின் புட்டிகளில் அடைப்பதால் கீழ்க்கண்ட நன்மைகள் உண்டாகின்றன.

### அல்கதின் அடைப்பின் நன்மைகள்

1. கண்ணாடி போத்தல்களை வண்டிகளில் எடுத்துச் செல்லும் பொழுது 20% உடைந்து விடுகின்றன. இந்தச் சேதம் இதில் ஏற்படுவதில்லை.

2. அல்கதின் புட்டிகளுக்கு மூடியும் சேர்ந்து இருப்பதால், அலுமினிய காகித மூடிகள் தேவையில்லை.

3. மேலும், அல்கதின் புட்டிகளின் உழைக்கும் காலம் சுமார் 3 வருடங்கள்.

4. ஒரு அல்கதின் புட்டியின் விலை மூடியுடன் 0.50-0.60 புதுகாசுகள் தான் ஆகிறது.

ஆகவே, பதநீர் பொது மக்களுக்குச் சுகாதார முறையில் எளிதில் கிடைக்கும்படி செய்தால், குறைந்த செலவில், உயர்ந்ததும், சக்தி நிறைந்ததுமான பதநீரைப் பருகி மக்கள் பயன்பெற ஏதுவாகும்.


நீடிய சேவைக்கும் நிரந்தர எழிலிற்கும்

லதா!!!



லதா! அச்சடி கிளேஸ்ட் கொட்டன் !!

கவர்ச்சி மிரு கணக்கற்ற நிறங்களிலும் உளத்திற்கு மகிழ்ச்சி தரும் மகோன்னத டிசைன்களிலும் என்றும் சுருங்காது தயாரிக்கப்பட்டது.

லதா! பொப்ளின்!!

ஆடவர் தம் சேட் முதலியவற்றிற்கு ஏற்ற அற்புத நிறங்களில் நீண்ட நாட் சேவை புரியும்படி தயாரிக்கப்பட்டது.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணிவரை இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.




எல்லோரிடமும் கிடைக்கும்

எஜெட் சுப்பர்லோன் வியாபாரிகள்

ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

கொழும்பு

சில்லறை வியாபாரப் பகுதி: 110 & 114, மெயின் வீதி.

மொத்த வியாபாரப் பகுதி: 26, கெய்ஸர் வீதி.

—Mylads/KL. 330/62—


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

## பத்திரிகைகளைப் புரட்டிப்பாரும்!

தமிழ் காங்கிரசில் இருந்து பிரிந்து தமிழரசுக் கட்சி உதயமாகிய வரலாறுபற்றி திரு. சுந்தரலிங்கம் அவர்களும், இனத்துரோகப் பட்டியலில் முண்டியடித்து முன்வரிசையில் முன்னணியில் நிற்கப் பாடுபடும் ஒரு பிரகஸ்பதியும் பத்திரிகைகளில் பொய் வதந்திகளை வெளியிட்டு வருகின்றனர். ஏரிக்கரை ஆங்கிலப் பத்திரிகைகள் இச்செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

மானிப்பாயிலிருந்து செய்தி அனுப்பும் அந்த பிரகஸ்பதி, தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் "1948 ஒக்டோபரில் வெளியிட்ட அறிக்கை" என்று ஒரு குறிப்பை எடுத்து அனுப்பித் தன் கட்சியை வலுப்பெற வைக்க முயற்சிக்கிறார். அவர் குறிப்பிடும் அறிக்கை, 1949 ஆகஸ்டு மாதம் வெளியாகிய அறிக்கை.

ஐயா பிரகஸ்பதியாரே! தயவுசெய்து தங்கள் கண்களின் கோளாறுகளை நீக்கி பத்திரிகைகளைப் புரட்டும். 15—8—1949 வெளியாகிய "டைம்ஸ்" பத்திரிகையில் அவ்வறிக்கை வெளியாகியுள்ளது.

மேலும் விளக்கங்கள் தேவையா?

அடுத்தவாரம் வரை பொறுத்திரும்.

—அப்பாக்குட்டி அம்மான்—

### சுந்தரரின் விண்ணப்பம்

அந்நாட்களில் "சர்வகலாசாலைக் கல்லூரி"யில் அதிபர் ஸ்தானம் காலியாகவிருந்தது; விண்ணப்பங்கள் கோரப்பட்டன. திரு. சுந்தரலிங்கமும் அப்பதவிக்கு விண்ணப்பித்தார்.

படித்தவர், பட்டம் பெற்றவர். நல்லபடி விண்ணப்பித்திருந்தால் நிச்சயம் பதவி கிடைத்திருக்கும். ஆனால், அதிகம் படித்த குற்றமோ என்னவோ? சர்வ முட்டாள்தனமாக விண்ணப்பித்திருந்தாராம்.

3-ம் வகுப்பு படிக்கும் சமயம் முதல் பட்டப்படிப்பு வரை தான் வெவ்வேறு பாடங்களில் பெற்ற புள்ளிகள் முழுவதையும் வரிசையாக எழுதியிருந்தாராம். அதுமட்டுமா? தனது பிள்ளைகள் பள்ளிக்கூடப் பாடங்களில் பெற்ற புள்ளி விபரங்களையும் எழுதியிருந்தாராம். இதைப் பார்த்த எந்த அதிகாரிக்கு திரு. சுந்தரலிங்கத்தை நியமிக்க எண்ணம் வரும்?

அவ்வளவு தூரம் மூளை கொழுத்தவர்தான் இன்று அடங்காத் தமிழராகி, தமிழ் பேசும் மக்களைக் காட்டிக் கொடுக்க தேர்தல் களத்தில் குதித்துள்ளார்.

### நற்குறியின் தர்க்கம்

மூதூர் பகுதி கிராமச் சங்கத் தலைவர் ஒருவர் (குழந்தையின் ஆங்கிலப் பெயருடையார்) திரு. சுந்தரருக்கு ஆலவட்டம் தூக்கி ஆடி வருகிறாராம். "யாழ்ப்பாணத்தார் கட்சியான தமிழரசுக் கட்சியை நம்புவதா? கூடாது கூடாது," என்று கூவித்திரிகிறார்.

சுந்தரருக்கு வால் பிடிக்கும் அவரைப் பார்த்து சிலர் பல கேள்விகளைக் கேட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தவரைத் திட்டும் அவர் எதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுந்தரருக்கு ஆதரவுதேட வேண்டுமோ தெரியவில்லை. இதையிட்டு நண்பர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஒழுங்காகப் பதில் அளிக்க முடியவில்லையாம்.

சத்தியாகிரகத்தின்போது ஏராளமான பணத்தை தமிழரசுக் கட்சியினர் சுருட்டிக் கொண்டனர் என்றும் பொய் வதந்தி பரப்பும் இவர், இச் செய்தியை தனக்கு "கட்சிக் காரியதரிசியே கூறியதாக கூசாமல் உரைக்கிறாராம். ஆனால் காரியதரிசியின் பெயரையோ, உருவத்தையோ இவருக்குத் தெரியாது. பொய்யாலும், புழுகாலும் வாக்குச் சீட்டு வேட்டையாடும் சுந்தரரின் போலி அபிமானிகளின் புஸ்வாணங்கள், மூதூர் வாக்காளர்களின் முன் செயலற்று விடுகின்றன. அவை அவ்வப்போதே பிசுபிசுத்து விடுகின்றன.

### ராஜினுமாச் செய்த காரணம்

தமிழ் பேசும் மக்களை முறியடிக்கச் சதித்திட்டங்களை உருவாக்கிய டி. எஸ். சேனநாயக்கா மந்திரி சபையில் சுந்தரர் ஒட்டிக் கொண்டிருந்தாரல்லவா? அப்போது அவரே தமிழ் பேசும் மக்களை ஒழித்துக் கட்டும் சில ஆலோசனைகளை அளித்துள்ளார். இவைகளை நன்கு உணர்ந்தே செய்திருக்கிறார். "துரோகத்தைத் தெரிந்திருந்தும் செய்தேன்" என்று அவரே வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

இலங்கை குடியுரிமைச் சட்டம் இயற்றப்படும் போது, அச்சட்டத்தில் படுமோசமான பகுதிகள் இருந்தும் அவர் அதற்கு ஆதரவளித்துள்ளார். ஆனால் அதன்பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட இந்திய, பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டதும் தான் மந்திரிபதவியிலிருந்து ராஜினுமாச் செய்து கொண்டார்.

திரு. பொன்னம்பலம் இரண்டாவது மசோதாவுக்கு அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களித்ததும், அவருக்கு மீன்பிடி மந்திரி பதவி கொடுக்கப்பட்டது.

பொன்னம்பலம் மந்திரிசபையில் இடம் பிடிக்க, சுந்தரலிங்கம் மந்திரிசபையை விட்டு வெளியேறினார். இதுதான் இரகஸ்யம். உண்மையான உள்ளத்தோடு; உத்தமமான எண்ணத்தோடு, தீர்க்கமான கருத்தோடு, தியாக புத்தியோடு வெளியேறவில்லை.

திரு. டி. எஸ். சேனநாயக்கா, திரு. சுந்தரலிங்கத்திடம் வெளிப்படையாகவே இதைக் கேட்டுள்ளார். "ஒரு தமிழன்மேல் மற்றத் தமிழன் பொருமைப்படுகிறான்" என்று திரு. சுந்தரலிங்கத்தைப் பார்த்தே கேட்டாராம்.

தான் ஒரு தலைவனாக வில்லையே என்ற பொருமை என்னும் தீயினால் பொசுக்கப்பட்டதனாலேதான், திரு. சுந்தரர் இன்று மூதூரில் போட்டியிடுகிறார். கட்சியைத் தூற்றுவதற்கும் இதுவேதான் காரணம்.

தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களிடம் அதிக செல்வாக்குப் பெற்றிருப்பதனால், பொருமை கொண்ட சுந்தரலிங்கனார் கட்சியையும், தலைவர்களையும் தாறுமாருகத் திட்ட ஆரம்பித்துள்ளார். எதிர்த்துப் போட்டி போடவும் முனைந்துள்ளார்.

### அடக்கும் ஆள்

பாராளுமன்றத்தில் திரு. சுந்தரலிங்கம் இருக்கும் போது அடிக்கடி பெரிய அட்டகாசங்கள் செய்வதுண்டு. பண்டாரநாயக்கா அரசாங்கம் அமைத்த வேளையிலும் ஒரு முறை பெரிய அமளியை உண்டாக்கினார் திரு. சுந்தரலிங்கம். அப்போது பண்டாரநாயக்கா சுந்தரலிங்கத்தைப் பற்றி கீழ் கண்ட கருத்தை வெளியிட்டாராம்:—

"திரு. சுந்தரலிங்கத்தை அடக்கக் கூடிய ஒரே ஒரு ஆள்தான் இருந்தார். அவர் தான் திரு. டி. எஸ். சேனநாயக்கா. திரு. சுந்தரலிங்கம் தகராறு ஏதாவது செய்யாமலிருப்பதற்காக, மாட்டுக்கு மூக்கணங்கயிறு போடுவதைப் போல் மந்திரி பதவியாகிய கயிற்றைமாட்டி விடுவார். உடனே அடங்காத மாடு அடங்கிவிடும்".

### மந்திரிகள் வரவேற்பு

வல்வெட்டித்துறையில் மந்திரிமாருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகள் பற்றி நமது அம்மான் கொண்டு வரும் செய்திகள் அத்தனையும் போடுவதானல் நமது சந்தி அடங்காது. இருப்பினும் சிலவற்றைத் தருகிறேம்:—

தான் செய்யும் பாவங்களை மறைப்பதற்காக ஆண்டவனுக்கு அபிஷேகம், ஆராதனைகள் செய்து (கடவுளின்) [illegible]

(9-ம் பக்கம் பார்க்க)

அப்பாக்குட்டி அம்மானுக்கு:

அம்மான்,

தயவுசெய்து தமிழ் காங்கிரஸ் கொழும்புக் கிளையின் முகவரியைத் தருவீர்களா? அவர்களை ஒரு வட்டமேசை மாநாட்டுக்கு அழைக்க வேண்டும்!

இப்படிக்கு,
ஒரு தமிழன்

கொழும்பு.

..............................

ஒரு தமிழன்,
கொழும்பு.

மருமகன்,

இதோ முகவரி:—

தமிழ் காங்கிரஸ்,
C/o பிளாட்பாரம்,
கொழும்பு—[illegible]

அப்பாக்குட்டி அம்மான்.

---

காவடிச் சிந்து 3.

## திடம் தாராயோ!

### ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம்

காவடிச் சிந்தின்முதல் இரு பகுதிகளிலும் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள தமிழ் பேசும் மக்களின் வேண்டுதல்கள் இடம் பெற்றன. யாழ்ப்பாண மக்களின் கோரிக்கைகள் இம்முறை இடம் பெறுகின்றன. எல்லோரும் சேர்ந்து எடுத்துக்கொள்ளும் சபதமும் இங்கு தரப்படுகிறது.

**யாழ்ப்பாணம்:-**

ஈழத்தில் தமிழரசை நிறுத்தி ஆண்டு
இதிகாச ஏட்டினிலே பொறித்த மன்னர்,
யாழ் நகரில் சாதித்த புகழ் தான் இன்று
யாவருக்கும் தாயதியாய்ப் பொதுச் சொத்தாச்சு
காலத்தால் சாகாத புகழைத் தந்த
கதையுடைய கிரிமலை கடைசி மன்னன்,
வீழுற்ற சங்கிலித் தோப்பிலுற்ற [illegible]
விளம்புதலில் பெருமையுண்டு தமிழே தாயே!

★

அலைகடலைச் சுழியோடி அப்பால் சென்றேம்
ஆழ்நிலத்தில் குழிதோண்டி நீரைப் பெற்றேம்
பல்கலையும் காவியமும் கணிதம், சிற்பம்,
பாட்டுடனே நாட்டியமும் பலதும் கற்றேம்
மணல் தனையே நிலை மாற்றி பயிர்கள் நட்டு,
மாங்கனியும் தேன்சுவையும் உண்டு வாழ்ந்தோம்
இதைவிடவும் மேலொன்றை இழந்து போனேம்,
எழிலரசி! அதை ஈந்து இரட்சிப்பாயே!

★

கல்வியிலே கரை கண்டோம், மேல் நாட்டாரின்
கலைகளிலே காமுற்றேம், பதவி பெற்றேம்
சொல்லுதிறல் அரசோச்சும் சூழ்ச்சி வாழ்வில்
சூரரென புகழ்பெற்றேம், சுகமும் பெற்றேம்
நல்லதொரு கண்விற்றே பணத்தை வாங்கும்
நாசமதை உணர்ந்திட்டோம் குருடரானேம்
அல்லல்வினை தீர்த்தெமக்கு அருளுவாயே
அம்மாவோ! அம்மாவோ! அறிவுத்தாயே!

## எமது சபதம்

உடலினிலே உயிர் இருக்கும் வரையும் தாயே!
உன் பணியைத் தவிர்த்தோர் பணி உளதோ, அம்மா?
அடல் மிகுந்த பிள்ளைகளைப் பெற்ற தாய்தான்
அடிமையிலே உழலுதற்கு அடுக்கா தந்தோ!
குடல் சுமந்து பெற்ற உந்தன் நோவு தீர
குலவு மணி மகுடத்தைச் சூட்ட இன்றே
திடமுடனே சபதமதை ஏற்றேம் தாயே!
தேவியே! உளம் மகிழ்ந்துதிடம் தாராயோ?

(முற்றும்)

## "தடுப்புக்காவலில் நாம்"

தடுப்புக்காவலில் இருக்கும்போது தன் மகளான "அன்பரசி"க்கு எழுதிய கடிதங்களை வாசகர்களுக்காக சுவைபட அமைத்துத்தருகிறார்,

**"புதுமைலோலன்"**

விரைவில் இப்பகுதியில் இடம்பெறும்

பாகப்படி மூலித் திராவகங்களால் தயாரிக்கப்பட்டது

MEVIGAR BALM

மெவிக்கார் பாம்

இது தலையிடி, தேள்கடி, வாதம், பல்வலி, இருமல், ஜலதோஷம், வெட்டுக்காயம் முதலிய வியாதிகளை நொடிப்பொழுதில் நீக்கி சுய நிலையை அடையச் செய்யும்.

ஒருமுறை உபயோகித்து உண்மை அறியுங்கள்.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

உங்கள் வீடுகளில் அவசியம் இருக்க வேண்டியது.

உடன் வெட்டுக் காயங்களுக்கு கை கண்ட தைலம்.

விலை போத்தல் ஒன்று ரூ 1-25 சதம்

பிற ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.

கவி கெம்ஸ்,

19, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே இனம்! ஒரே மொழி! ஒரே மதம்!
# சிங்களத் தலைவர்களே! இதுதானா உங்கள் திட்டம்?

## அடக்குமுறை காட்டி எம்மை அடிமையாக்க முடியாது

## மூதூர் வாக்காளர்களின் மகத்தான கடமை

இன்று எமது மூதூர் தொகுதியின் இடைத் தேர்தலுக்கான மணி ஓசை இடியென ஒலித்துவிட்டது. உறங்கிக்கிடந்தோரைத் தட்டி எழுப்பித் தம் பார்வையின் கூர்மையால் நல்லவரை — நம் இனத்தின் எதிர்கால உரிமைக் காவலரை சக்தி மிக்க நம் வாக்குப் பலத்தால் பெற்றுக்கொள்ள ஜனநாயகம் உயரிய சந்தர்ப்பத்தை எமக்குத் தந்துவிட்டது. அழிந்து ஒழிந்து நடைமுறைக் கொள்கைக்கு உவாது குப்பை மேடாகிப்போன கொள்கையைக் கொண்டவர்களும், தமிழ் பேசும் மக்களின் மொழி—கலை—கலாச்சாரம்—அந்தஸ்துப் போன்றவைகளைத் துப்பாக்கியால் அழிந்தொழிந்து, அடக்கு முறையால் ஒரே இனம், ஒரே மொழி, ஒரே மதம் என்று வெறி பிடித்து அலையும் சிங்களத் தலைவர்களின் தாசர்களும்—தமிழ் பேசும் மக்களின் பறிக்கப் பட்ட உரிமைகளுக்காக இன முழக்கமிடும் தமிழரசுக்கட்சியின் அபேட்சகருமே நமது மத்தியில் எமது உரிமையிலும் மேலான வாக்குரிமைச் சீட்டுக்களைப் பெறப் போட்டியிடுகின்றார்கள்.

**மூதூரில் தமிழரசுக் கட்சி அபேட்சகரை முறியடிப்பதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் கிளர்ச்சியை அடக்கி அவர்களை அடிமையாக்கிவிட எண்ணுகிறது அரசு. இவ்வேளையில், மூதூர் வாக்காளப் பெருமக்கள் எவ்வகையில் தொண்டாற்ற வேண்டும் என்பதைக் கட்டுரை ஆசிரியர் ஜனாப் கே. எஸ். ஏ. விளக்குகிறார்.**

### இல்லாத கட்சியின் பெயரால்......

அரசியல்—வாக்குரிமை என்பதெல்லாம் சொந்தம்—பந்தம்—நண்பர் என்ற பாசத்திற்கு அப்பால் பட்டன. அதனால் தான் பல அரசியல் விற்பன்னர்கள் செங்கோல் தாங்கும் கரத்திற்கும் வலுவான கரமாக வாக்களிக்கும் கரத்தையும், கரன்ஸி நோட்டைவிட சக்தி வாய்ந்த நோட்டாக வாக்குச் சீட்டையும் கணித்து மகத்துவமளித்து வருகின்றார்கள். ஆகவே தான் ஆளைப் பார்க்காமல்—அவர்களின் அரசியல் ஆட்டத்தைப் பார்த்து—யார் சொல்லும் கருத்திலே உண்மையிருக்கின்றது என்பதை உணர்ந்து அவர்கள் கொண்ட இலட்சியங்களுக்காகவே வாக்களிக்க வேண்டுமென எனதன்புக்குரிய இஸ்லாமிய மக்களை வேண்டுகின்றேன்.

வவுனியாத் தொகுதியில் சாதாரண பட்டினசபைத் தேர்தல் மூன்றிலும் மாறி மாறிப் படுதோல்வி அடைந்து—அதைத் தொடர்ந்து பொதுத் தேர்தலிலும் மகத்தான தோல்வியைத் தாவி அணைத்து மக்கள் முகத்திலே விழிக்க முடியாது மூலையிலே இத்தனை காலமாக முடங்கிக்கிடந்த திரு. சுந்தரலிங்கம் எப்படியோ தன்னைப் போன்றவர்களால் வஞ்சிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் இன்றைய இழிநிலையை மறந்து எமது மத்தியில் "ஈழத் தமிழர் முன்னணி" என்ற பெயரில் திடீர் என்று குதித்திருக்கின்றார். கட்சியாக இல்லாத இக்கட்சிக்கு இவரேதான் தலைவரும்—செயலாளரும்—பொருளாளரும்—பொறுப்பாளருமாகும். சுயேச்சையாகப் போட்டியிட்டால் எங்கே தன் சுய இச்சைத்தனங்களை மக்கள் மத்தியிலே எடுத்துக் காட்டித் தம் முகமூடியைக் கிழித்து அம்பலப்படுத்தி விடுவார்களோ என்ற பயத்திலேயே இப்படி இல்லாத ஒரு 'முன்னணியின் பெயரைக் காட்டித் தேர்தல் களத்தில் நுழைந்திருக்கின்றார்கள்.

வவுனியாத் தொகுதியின் பாராளுமன்றப் பிரதிநிதியாகக் கடந்த காலங்களில் பணியாற்றிய திரு. சுந்தரலிங்கம் எப்படி எப்படியெல்லாம் வவுனியாத் தொகுதி மக்களை வாஞ்சை காட்டி வஞ்சித்து வந்திருக்கின்றார் என்பதை மூதூர் தொகுதி வாக்காளர் பெருமக்கள் அறியாதவர்களல்ல. நடைபெற்ற காணிப் பங்கீடுகளில் திரும்பத்திரும்ப தானே சுமார் அறுநூறு ஏக்கர் காணிகளை வசதி நிறைந்த இடங்களில் சுரண்டிக் கொண்டு ஏழை மக்களுக்கு ஒரு ஏக்கர் காணியாவது கொடுக்க மறுத்து வந்தாரென இன்றும் மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

1957—60-ம் ஆண்டுகளில் கூட்டுறவு அபிவிருத்திப் பகுதியால் வவுனியாத் தொகுதிக்கென ஒதுக்கப்பட்ட சுமார் ஒன்பது லட்சம் ரூபா கடனுதவியில் தனக்கு வேண்டிய ஐந்து சங்கத்திற்கும்—அதில்உள்ளவர்களுக்குமாக ஆறு லட்சம் ரூபாவை ஒதுக்கிக்கொடுத்துவிட்டு எஞ்சிய 49 கூட்டுறவு சங்கங்களுக்கு மூன்று லட்சம் ரூபாவை மட்டும் தனக்கு வேண்டாதவர்கள் என்ற ஒரே காரணத்திற்காகப் பாரபட்சம் காட்டிப் பங்கிட்டுக் கொடுத்துத் தன்னைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்கு நேரடியாகவே துரோகமிழைத்து வந்தாரென்ற குற்றச்சாட்டை திரு சுந்தரலிங்கத்தால் மறுக்க முடியுமா?

அதனால்தான் என்னவோ வவுனியா மக்கள் அவரின் முகத்தில் கரியைப் பூசி அர [illegible] தான் மூதூர் தொகுதியின் வாக்காளர்கள் மத்தியிலே அவர் சாயம் பூசிக்கொண்டு வந்திருக்கின்றார்.

### ஹமீதுக்குரிய வாக்கு ஏகாதிபத்தியத்திற்கே!

அடுத்து லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளரின் சொந்த விவகாரங்களை நீக்கி—அவர் சார்ந்துள்ள கட்சியின் கொள்கையை நினைத்தால் தமிழ் பேசும் மக்கள் இன—மத வேறுபாடின்றி இரத்தக் கண்ணீர் தான் வடிக்க வேண்டும்—வடித்துக்கொண்டே தான் இருக்கின்றார்கள். ஐ. தே. கட்சியும் அதிலிருந்து பிரிந்த ல. சு. கட்சியும் மாறி மாறி எப்படி எல்லாம் தமிழ் பேசும் மக்களுக்குப் படுகுழி தோண்டி வந்திருக்கின்றன என்பதை நினைத்தால் நெஞ்சமே நடுங்குகின்றது. இதை மூதூர் தொகுதியின் இரண்டாவது பிரதிநிதியால்கூட மறுக்க முடியாது.

1948-ல் தேசியக் கொடிப் பிரச்சினை எழுப்பப்பட்ட போது தமிழர்கள் மட்டுமல்ல—முஸ்லிம்களும் தேசியக் கொடி அந்தஸ்தின்றி வஞ்சிக்கப்பட்டே இருக்கின்றார்கள். பின் அதைத் தொடர்ந்து எழுந்த சோல்பரி அரசியல் திட்டம்—பிரஜாவுரிமைச் சட்டம் போன்றவைகள் எல்லாம் தமிழ் பேசும் மக்கள் மீது இன—மத வேறுபாடின்றி மொழி அடிப்படையில் மாட்டப்பட்ட அடிமை விலங்குகள் தான்

காலத்திற்கொவ்வாத இந்த பிரஜாவுரிமைச் சட்டத்தின் மூலம் இஸ்லாமிய சமுதாயம் தன் கௌரவத்தை இழந்து விட்டதோடு, நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் ஹஜ்ஜு யாத்திரைக்குக் கூட செல்ல முடியாது அவதிப்படுவதையும்—பலரின் பயணங்கள் அதனால் தடைப்படுவதையும் வேதனையுடன் நாம் பார்க்கின்றோமே!

### குடியேற்றத்தால் பிரதிநிதித்துவம் அழிகின்றது

குடியேற்றத் திட்டத்தின் மூலம் முஸ்லிம் பெருங்குடி மக்களின் பரம்பரைப் பிரதேசங்கள் பலவற்றை ல. சு. தொடர்ந்து ஆக்கிரமித்து வருவதையும்—அதனால் முஸ்லிம்கள் தம் சொந்தப் பிரதேசங்களிலேயே சிறுபான்மையாக்கப்பட்டு வருவதையும் மூதூர் பிரதிநிதி ஜனாப் மஜீதால் மறுக்க முடியுமா? உதாரணமாக மூதூர் தொகுதியையே எடுத்துப் பார்க்கலாம். சிங்கள மக்களின் குடியேற்றத்தால் எந்தளவுக்கு பீதியும்—அபாயமும் மக்களுக்கு நிமிடத்துக்கு நிமிடம் பெருகி வருகின்றன.

இந்நிலை தொடர்ந்து நடந்து வந்தால்—சிங்கள மக்களின் பெருக்கத்தால் அவர்களுக்கென்று ஒரு தனிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்டு முஸ்லிம்கள் தம் பாரம்பரிய பிரதேசங்களிலேயே பிரதிநிதித்துவமற்று அடுத்தவர்களின் தயவில் கைகட்டி வாய் பொத்தி—கருணை வேண்டி—இனப் பெருமையற்று வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும், என்பதைத் தான் வாக்காளப் பெருமக்கள் சிந்திக்க வேண்டும். அம்பாறைத் தொகுதி எமக்கு ஒரு எடுத்துக் காட்டாக அமைந்து விட்டது.

### ஒரே மதம் சட்டம் விரைவில்......

1939-ம் ஆண்டு ஏற்பட்ட சாதாரண "கொச்சி"த்துவேஷம் 1949-ல் இலங்கை—இந்தியர் பிரச்சினையாக மாறி 1956-ல் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் மொழி—பிறப்புரிமைகளைப் பறிக்கும் படலமாகி—அதைத் தொடர்ந்து எமது அரசியல் உரிமைகளைச் சூறையாடி வரும் ல. சு.

(13-ம் பக்கம் பார்க்க)




ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14

டெலிபோன் : 2739

## 'திருமலையில் கோணேஸ்வரம் அமைத்தான் தமிழ் மன்னன்'

### தர்பலகாமத்தில் திரு. அமிர்தலிங்கம்

எமது முன்னோர்கள் கூறிய தீர்க்கதரிசனம் பொய்த்துப் போனதாகத் தெரியவில்லை. இந்த நாட்டின் ஆட்சி முறையைப் பற்றியும் எமது மூதாதையர்கள் பூர்வத்தில் தங்கள் தீர்க்க தரிசனத்தை வெளியிட்டுள்ளனர். அது நூற்றுக்கு நூறுவீதம் உண்மையாகப் பலித்து வருவதை இன்று நாம் கண்கூடாகக் காண்கின்றோம் என்று திரு. அ. அமிர்தலிங்கம் தம்பலகாமத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், தமிழ் மன்னனான குளக்கோட்டன் திருமலையில் உள்ள கோணேஸ்வரத்தையும் கந்தளாய் நீர்த் தேக்கத்தையும் அமைத்தான் என்பது பிரசித்தம்—இந்தச் சரித்திரத்தை இலங்கைச் சரித்திரத்தில் காணமுடியாவிட்டாலும் அதிர்ஷ்டவசமாக திருகோணமலைப் பகுதியைப் பற்றிக் கூறும் தமிழ் வரலாறுகள் விரிவாகக் கூறுகின்றன. இந்த நூல்களில் இலங்கை அரசு முறையை கண்கள் ரீதியில் வரிசைப் படுத்தும் ஒரு செய்யுள் காணப்படுகிறது. அந்தச் செய்யுளின் முக்கால் பாகம் உண்மையாக்கப்பட்டு விட்டது. இன்னும் கால்ப்பாகமே நடைபெற இருக்கிறது. செய்யுளின் விபரம் பின் வருமாறு;

முன்னே குளக் கோட்டன்
மூட்டும் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிடிப்பர்—
மன்னாகேள்
பூனைக் கண் செங்கண்ணன்
புகைக்கண்ணன் ஆண்டபின்பு
மானின் கண் முற்றி வடுகன்
அரசாள்வான்

என்பதேயாம். இப் பாடலின்படி குளக்கோட்டன் இயற்றிய கோணேசர் கோயிலைப்போர்த்துக்கேயத் தளபதி இடித்துத் தரை மட்டமாக்கி அக்கற்களைக் கொண்டு இப்போதுள்ள பிரடிக் கோட்டையைக் கட்டினான். புகைக்கண்ணுடைய ஆங்கிலேயர்கள் இந்நாட்டை நீண்ட காலம் ஆட்சிசெய்தனர். இப்போது மானின் கண்ணுடைய ஸ்ரீமாவோ அம்மையாருடைய ஆட்சி நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிக்கு அடிப்படை தேசிய இனஎழுச்சியே!

## சோவியத்தில் சகல இனங்களுக்கும் சமத்துவம்

## இலங்கைக் கம்யூனிஸ்ட்டுகள் மட்டும் ஒற்றையாட்சியை விரும்புவது ஏன்?

இன்றைய உலகில் பொதுவுடமை ஆட்சி இயங்கும் நாடுகளில் எல்லாம் தேசிய எழுச்சி சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டே பொதுவுடமை ஆட்சி நிறுவப்பட்டன என்பதை வரலாறு தெரிந்தவர்கள் தெரிவார்கள். சீனு சிவப்பாவதற்கு அங்கு ஜப்பானியர்களை எதிர்த்து நடத்திய புரட்சிதான் காரணமாக அமைந்தது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பொதுவுடமை நாடுகளாக மாறியதற்கு நாஜிகளை எதிர்த்து நடைபெற்ற போராட்டங்களே மூலகாரணமாக அமைந்தன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தைஎதிர்த்து கியூபாவின் தேசிய எழுச்சி முழக்கமிட்டதே இன்று "பெடல் காஸ்ட்ரோ" மூலமாகப் பொதுவுடமைத்தத்துவம் அங்கு வெற்றிபெற்று வருகின்றது. ஆகவே பாட்டாளி வர்க்கத்தின் பொதுவுடமைப் புரட்சி என்றுலும்—தேசிய இன எழுச்சி தான் அதற்கு மூலமாக—நல்ல பின்னணியாக அமைந்திருக்கின்றது என்ற உண்மையை முடிந்தால் பொதுவுடமை வாதிகள் மறுக்கட்டும் பார்க்கலாம்.

ரஷ்யப்புரட்சி முடிந்ததும் அதன் தோல்வி கண்ட சாம்ராஜ்யத்திலிருந்து பின்லாந்து, போலந்து லித்துவேனியா, எஸ்தோனியா போன்ற பல நாடுகள் சுதந்திரத் தனி நாடாகப் பிரிந்தன. இதில் எஞ்சிய பிற தேசிய இனங்கள் ஒன்றுக்கொன்று சமத்துவமாக இணைந்து பிணைந்து தப் விருப்பப்படியே வாழ்ந்து வரக்கூடிய ஒரு அரசியல் சட்டத்தை லெனின் உருவாக்கி ஐக்கியத்திற்குப் பொருள் பிரித்துக் காட்டினுர். அடக்கி ஒடுக்கப்பட்ட தேசிய இனங்கள் விடுதலையுடன் தலை நிமிர்ந்து வாழ லெனின் ஒரு தனி வழியைக் காட்டினுர் அங்கே. ஆனுல் அதே லெனினிசத்தைக் கொண்ட இலங்கைக் கம்யூ

**கே. எஸ் ஏ. கபூர்**

னிச வாதிகள் தமிழ் தேசிய இனம் அடக்கி ஒடுக்கப்படுவதைச் சரிதான் என்று சிங்கள ஏகாதிபத்தியத்திற்குத் தாளம் போட்டுக் கொண்டிருக்கின்றுர்கள்.

### சோவியத் தேசிய இனங்களுக்குத் தனி உரிமை.

1929ல்-ரஷ்யா, ட்ரான்ஸ் காக்கேசினியா, உக்ரைனியன், பைலோ ரஷ்யா ஆகிய நான்கும் ஒன்று சேர்ந்து தம் எண்ணப்படியே சோவியத் யூனியனை உருவாக்கிக் கொண்டன. ஓர் இனத்தையோ—மொழியையோ குறிப்பதாக ரஷ்யாவின் பெயர் அமையக் கூடாது என்பதற்காகத்தான் பன்னெடுங்காலமாக வழங்கி வந்த ரஷ்யா என்ற பெயரையே தலை கிழாக மாற்றிவிட்டு எல்லா இனங்களுக்கும் பொதுவான பெயராக "சோவியத் சோசலிச ஐக்கிய குடியரசுகள்" என்று பெயர் சூட்டியிருக்கின்றுர்கள். இன்றைய சோவியத்தில் பதினுறு குடியரசுகள் ஒன்றிப்பிணைந்து ஐக்கியமாக வாழுகின்றன.

1936-ல் ஸ்டாலின் வகுத்துள்ள அரசியல் சட்டபடி சோவியத் யூனியனிலுள்ள ஒவ்வொரு குடியரசுக்கும் விரிவான அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இராணுவம்—வெளிநாட்டு உறவு—மொழி போன்ற எவைகளையுமே சுயமாக அனுபவிக்க எந்தத் தடைகளுமே கிடையாது. இவைகளும் போக விரும்பினுல் எந்தக் குடியரசும் சோவியத்திலிருந்து பிரிந்து தனி நாடாகலாம் என்ற உரிமையும் குடியரசுகளுக்கு உண்டு.

### இன உணர்ச்சிக்குரியதே கம்யூனிசம்.

1945ல்- ஐ. நா. மகாசபையின் சாசனம் அமைக்கப்பட்ட நேரத்தில் சோவியத் யூனியனின் சிறப்பான நிலைகளை விளக்கி "சோவியத் யூனியன்" என்ற பெயரால் ஐ. நா. மகாசபையில் ஓர் உறுப்பினர் என்பதுடன், உக்ரைன், பைலோ ரஷ்யா, ஆகிய இரு குடியரசுகளும் மகாசபையில் அங்கத்துவ நாடுகளாயின. சார் மன்னனின் சாம்ராஜ்யத்தில் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த தேசிய இனங்கள் இன்று சமத்துவமாக சோவியத்தில் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருப்பது ஈழத்துப் பொதுவுடமைவாதிகளுக்குத் தெரியாதா? அல்லது தெரிந்தும் மறைக்கின்றுர்களா?.

யாருக்கும் யாரும் பின்தொடர்ந்து செல்லக் கூடாது—தேசிய இனங்கள் ஒடுக்கப்படக் கூடாது என்று மாபெரும் புரட்சியைத் திட்டமிட்டு நடத்தி வெற்றிகண்ட தேசிய உணர்ச்சிக்குரிய கம்யூனிசம், இரு பெரும் தேசிய இனங்கள் வாழும் இலங்கையில் மட்டும் எப்படி ஒற்றை ஆட்சியை ஆதரிக்க முடியும் என்றுதான் பரிதாபத்திற்குரிய எமது பொதுவுடமைவாதிகளிடம் கேட்கின்றேன்.

### மொழி அடிப்படையில் தனி உரிமை.

சுமார் இருபது கோடி மக்களை உள்ளடக்கிய சோவியத் யூனியனில் மொழி அடிப்படையில் கீழ்க்கண்டவாறு மக்கள் தொகையினர் வாழுகின்றனர்.


1. ரஷ்யர்கள் —1126 லட்சம்
2. உக்ரைனியர்கள் —406 லட்சம்
3. பைலோரஷ்யர்கள்—80 லட்சம்
4. [illegible] லட்சம்
5. கஸக்கியர்கள் —[illegible]5 லட்சம்
6. ஜார்ஜியர்கள் —40 லட்சம்
7. அசர்பைட்சானியர்கள் —34 லட்சம்
8. மால் தேவியர்கள் —27 லட்சம்
6. லித்துவேனியர்கள்—27 லட்சம்
10. லத்துவியர்கள் —20 லட்சம்
11. கிர்கிசியர்கள் —19 லட்சம்.
12. தாத்சிக்கியர்கள்—18 லட்சம்.
13. ஆர்மீனியர்கள் —16 லட்சம்,
14. டர்க்மென்கள் —14 லட்சம்.
15. எஸ்தோனியர்கள் —11 லட்சம்.
16 கார்லோபின்னிஸ்கள் —6 லட்சம்.

இப் புள்ளி விபரப்படி ரஷ்ய மொழியார்கள் மிகக் கூடுதலான பெரும்பான்மையினர் என்றுலும்—மிகக் குறைந்த சிறு பான்மையினமான சுமார் ஆறேகால் லட்சம் கார்லோபின்னிஸ்களுக்கு என்ன உரிமைகள் இருக்கின்றனவோ, அதே உரிமைகளைத்தான் சுமார் பதினுறு கோடி ரஷ்ய மொழியாளர்களும சம உரிமையோடு அனுபவிக்கின்றுர்கள். 16 கோடி ரஷ்ய மொழியாளர்கள் எங்கே— 6¼ லட்சம் கார்லோபின்னிஸ்கள் எங்கே? இருந்தும் அங்கே சிறுபான்மை மக்களின் தேசியப் பிரச்சனைகளே கிடையாது. ஆனுல் இங்கே 65 லட்சம் சிங்கள மக்களிடம் 30 லட்சம் தமிழ் பேசும் மக்கள் இன விடுதலை கேட்பது தவறு என்று இலங்கைப் பொதுவுடமைவாதிகள் காட்டுக் கூச்சல் போடுகின்றுர்கள்.

### மொழி—வரலாறுகள் இல்லாத சோவியத் இனம்

சோவியத் யூனியனின் இந்த சிலபல தேசிய இனங்களுக்கு உயர்ந்த வரலாறுப் பெருமைகளோ தனி நாடாக வீறுற்றுத் திகழ்ந்த பழம் பெரும் சிறப்புகளோ—இலக்கிய வளங்களோ குறிப்பிடக் கூடிய அளவுக்குக் கிடை

(13-ம் பக்கம் பார்க்க)



இங்கு அண்மையில் வந்திருந்த, சென்னை கிறிஸ்தவக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபரான திரு. ஜே. ஆர் மக்பெயிலுக்கு, அவருடைய பழைய மாணவர்களால் கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டலில் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தின்போது எடுக்கப்பட்ட படம் கே. என். அப்துல்காதர் ராவுத்தர் அன்ட் கம்பெனியின் நிர்வாகியான ஜனுப் எஸ். எச் எம். அலியார் மாலையிடுவதைப் படத்தில் காண்க.

## கொழும்பு தொழில் நுட்ப பாடசாலையில் சிங்களம் மட்டும்

### தமிழிலும் வகுப்பு நடாத்த முயற்சி

விசேட வர்த்தக ஆசிரிய பயிற்சி வகுப்பு. கொழும்பு தொழில்நுட்ப பாடசாலையில், 1957-ல் இருந்து தனிச் சிங்கள மொழியில் நடைபெறுகின்றது. இவ்வகுப்பை தமிழ் மொழியில் நடாத்தவேண்டுமென்று திருவாளர்கள் கு. வன்னியசிங்கம், வி. தர்மலிங்கம், வே. அ. கந்தையா ஆகியோர் மக்கள் பிரதிநிதி சபையில் கல்வி மந்திரியின் கவனத்திற்கு கொண்டுவந்தார்கள். மன்றத்தின் சார்பில் திருவாளர்கள் மு. பாலசுந்தரம், மு. சிவசிதம்பரம், வ. ந. நவரத்தினம், சா. ஜே. வே. செல்வநாயகம், வி. தர்மலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் பல கடிதங்களும் தந்திகளும் அனுப்பி, தமிழ் மொழியில் நடாத்தும்படி கேட்டுள்ளார்கள்.

4—7—61ல் இருந்து அகில இலங்கை வர்த்தக கலை மன்றமும் பல கடிதங்களையும், தந்திகளையும், கல்வி மந்திரிக்கும், பிரதம மந்திரி உட்பட மற்றும் பல அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ளார்கள்.

ஆனுல், விசேட வர்த்தக பயிற்சி வகுப்பு தனிச் சிங்கள மொழியில் நடைபெற விருப்பதாக 1-6-62 வர்த்தமானிப் பத்திரிகை தெரிவித்திருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உடனடியாக இவ்வருடம் இவ்வகுப்பை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மற்ற மன்ற செயலாளருடன் திருவாளர்கள் மு. பாலசுந்தரம், வ. ந. நவரத்தினம், அ. அமிர்தலிங்கம், இ. மு. வி. நாகநாதன், வி. தர்மலிங்கம் ஆகியோர், கல்வி மந்திரி உட்பட பல அதிகாரிகளுக்குத் தந்திகள் அனுப்பினுர்கள்.

இதனைத் தொடர்ந்து திரு. மு. பாலசுந்தரமும் கொழும்பில் கல்வி மந்திரியைச் சந்தித்து நடவடிக்கை எடுத்திருக்கின்றுர். அரசாங்கம் விரைவில் அரசாங்க வர்த்தமானியில் தனிச் சிங்களம் என்றிருப்பதை மாற்றி தமிழ் மொழிக்கும் இடம் கொடுத்துத் திருத்தி பிரசுரிக்கவிருக்கின்றது.

அகில இலங்கை வர்த்தக கலைமன்றம், விசேட வர்த்தக ஆசிரிய பயிற்சி பிரவேசப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை மன்றத்தின் ஊடாக அனுப்பிவைக்கும்படி அங்கத்தினர்களை வேண்டுகின்றது.

இது சம்பந்தமாக மந்திரிக்கு அவ்வப்போது அனுபபிவைக்கப்பட்ட மகஜர்களும் தந்திகளும் நிரந்தரக் காரியதரிசியினுல் மந்திரிக்குக் காண்பிக்கப்படாதிருந்தது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. திரு. மு. பாலசுந்தரம் அவர்கள் மந்திரியை அணுகி விசாரித்தபோது மேற்படி சம்பவங்கள் எதுவும் தனக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்பதை மந்திரி ஒப்புக்கொண்டுள்ளார்.

நம்பிக்கையான

நைலோன்



வலைகளுக்கும், நூல்களுக்கும்

சேகரம் அன் சன்ஸ்

74, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

டெலிபேசி: 693

தந்தி: சேகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1962 ஜூன் மாதம் 24-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலைபேசி எண் : 3411 · த. பெ. 1183


## நல்ல தீர்ப்பு வழங்குக!

மூதூர் வாக்காளர்களே, உங்களது பொன்னான வாக்குகளைப் பயன்படுத்த இதோ மற்றுமொரு சந்தர்ப்பம்! அடுத்த வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் உபதேர்தலிலே வாக்களிக்க முன்பு ஒரு முறைக்குப் பத்து முறை சிந்தியுங்கள். தவறான நபருக்கு வாக்களித்துவிட்டால் அதன் விளைவு பயங்கரமானதாயிருக்கும். நமது இனம், மொழி, நாடு அனைத்தின் அழிவுக்கும் அது வழி வகுத்துவிடும். எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கையைப் படுகுழியில் தள்ளிவிடும்.

இத்தேர்தலிலே இருபெரும் அரசியற் சக்திகள் மோதுகின்றன. ஒரு பக்கம் தமிழ் பேசும் இனத்திற்குக் குழிதோண்டும் ஆட்சியாளர் கட்சி. மறுபக்கம், தமிழ்பேசும் மக்களின் விடுதலைக்காகப் போர்க்கொடி ஏந்தி நிற்கும் தமிழரசுக்கட்சி. இவ்விரு சக்திகளின் மோதுதலுக்கிடையே இரு உதிரிகள் வேறு சிக்கிக் கொண்டு விழி பிதுங்குகின்றனர்.

சுயேச்சை என்று கூற வெட்கப்பட்டு, ஒரு "முன்னணி" முகமூடிக்குள் மறைந்து கோமாளிக்கூத்து நடத்துகிறார் திரு. சுந்தரலிங்கம். "தனி ஈழம்" என்ற இவரது கொள்கை என்றோ பொசுங்கிச் சாம்பலாகிவிட்டது. "தனி ஈழம் வேண்டுமா? சமஷ்டி வேண்டுமா?" என்பதை நிர்ணயிப்பதாகக் கூறிக் கொண்டு வவுனியா நகரசபைத் தேர்தலில் ஏககாலத்தில் மூன்று வட்டாரங்களில் அவர் போட்டியிடவில்லையா? அன்று அவர் ஒரு எம். பி. யாக இருந்தும்கூட மூன்று வட்டாரங்களிலும் படுதோல்வி அடைந்ததோடு கட்டுப் பணத்தையும் பறிகொடுத்துப் பரிதவித்தாரே! வவுனியா மக்கள் அவரது உருப்படாத தனி ஈழக் கொள்கையை அன்றே குழிதோண்டிப் புதைத்துவிட்டனர். அதை மறுபடியும் இப்பொழுது தோண்டி எடுத்து மூதூரில் கொண்டு வந்து நிறுத்தப் படாதபாடு படுகிறார்.

மார்ச்சு மாதப் பொதுத் தேர்தலில் கவைக்குதவாத சில உதிரிகளை அங்குமிங்கும் போட்டியிடச் செய்து, அவர்களெல்லாம் கட்டுப்பணத்தை இழக்க, அவரும் படுதோல்வியடைந்து புறமுதுகிட்டோடினார். இப்பொழுது மறைவிடத்திலிருந்து மெதுவாக மீண்டும் தலையை வெளியே நீட்டி மூதூர் மக்களிடம் வோட்டுப் பிச்சை கேட்கிறார். இச்செயல் அவர் ஒரு சந்தர்ப்பவாதி-விஷமம் செய்கிறவர் என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

தமிழரசுத் தலைவர் பதவிஆசை பிடித்தவர் என்றெல்லாம் இன்று நாக்கில் நரம்பின்றிப் பிதற்றித் திரிகிறார். ஆளும் கட்சியோ தமிழர் வாக்குகளைப் பிளவுபடுத்த அவரைப் பயன்படுத்துகிறது. ஒருகாலத்தில் சிங்கள எஜமானர்களுக்குக் கைகட்டிச் சேவகம் செய்தவரல்லவா? அந்த விசுவாசம் அவருக்கு—திரு. சுந்தரலிங்கத்திற்கு நீங்கள் கொடுக்கும் ஒவ்வொரு வாக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காகக் கொடுக்கும் வாக்காகும். அவருக்கு வவுனியா மக்கள் கற்றுக் கொடுத்த படிப்பினையை அதைவிட நன்றாகக் கற்றுக் கொடுக்க வேண்டியது உங்கள் கடமை. அவர் மீண்டும் இம்மாதிரி விஷமம் செய்யாத அளவுக்கு இம்முறை கற்றுக் கொடுக்க வேண்டும்.

தமிழரசுக்கட்சியை அழிப்பதற்காக "சிறீ ல. சு. கட்சிக்கு வாக்களியுங்கள்" என்று மந்திரிகளே பகிரங்கமாகக் கேட்கிறார்கள். சிறீ ல. சு. கட்சி ஒரு சிங்கள வகுப்புவாதக் கட்சி. தமிழினத்தை ஒழிக்க வந்த கட்சி. ராணுவத்தைக் கொண்டு தமிழ் பேசும் மக்களை அடித்து நொருக்கி, தமிழ்த் தாய்மார்களை மானபங்கப்படுத்திய கட்சி. தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பறிக்கவும் தமிழினத்தை வேரறுக்கவும் ஆளும் கட்சியினர் அடுக்கடுக்காக எடுத்த நடவடிக்கைகள் அனைத்தும் உங்களுக்குத் தெரியும். சிறீ. ல. சு. கட்சி உங்களின் நேர் விரோதி—இந்தக் கட்சிக்கு வாக்களிப்பது தமிழினத்தையே அழிப்பதாகும்; ராணுவக் கொடுமைகளை வரவேற்பதாகும்; சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொள்வதாகும்.

முஸ்லிம் மக்களின் இரட்சகர்கள் தாங்கள் தானென்று ஆளும் கட்சியினர் இன்று பசப்புகின்றனர். அவர்கள் முஸ்லிம்களுக்குச் செய்த சேவை என்ன தெரியுமா? முஸ்லிம் சமுதாயத்தின் பூர்வீக நிலபுலன்களை அபகரித்து சிங்களவர்களுக்கு வழங்கினர். அவர்களின் குடியுரிமையைச் சூறையாடி ஹஜ் யாத்திரை செல்வதற்குக்கூட முட்டுக்கட்டை போடுகின்றனர். முஸ்லிம்களின் தாய் மொழியான தமிழ்மொழியை அழித்து வருகின்றனர். பிறந்த மண்ணிலேயே அவர்களை அரசியல் அநாதைகளாக்கி, அடிமைகளாக்கப் பிரயத்தனம் செய்கின்றனர். முஸ்லிம் நலன்களைச் சிங்களவருக்குப் பலியிடுகின்றனர், என்பதை நிரூபிக்க அம்பாறை கச்சேரி விஷயமே போதுமானது. முஸ்லிம் சமுதாயத்தை நசுக்க இவ்வளவையும் செய்துவிட்டு, இன்று வோட்டுக்காக முஸ்லிம்களிடம் வந்து முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். ஆளும் கட்சியின் அபேட்சகர் ஒரு முஸ்லிம் என்பதற்காக அவருக்கு வாக்களிக்க முடியுமா? உடன் பிறந்தே கொல்லும் வியாதி அது—இத்தேர்தல் தனி மனிதன் பிரச்சினையல்ல, கட்சிப் பிரச்சினை. சிறீ. ல. சு. கட்சிக்கு அளிக்கும் ஒவ்வொரு முஸ்லிம் வாக்கும் முஸ்லிம் சமுதாயத்தை அடிமைப் படுத்த அளிக்கும் அடிமைச் சீட்டாகும்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மீண்டும்பெற தளராது போராடும் ஒரே கட்சி தமிழரசுக் கட்சியே. அது உறுதியான கொள்கையுடைய கட்சி. தியாகத் தழும்பேறிய கட்சி. ஸ்திரமான கட்டுக்கோப்புள்ள கட்சி. தீரர்கள் மலிந்த கட்சி. தியாகிகள் நிறைந்த கட்சி. தமிழ் பேசும் சமுதாயத்தை ஒரே கொடியின்கீழ் ஒன்றுபடுத்திய கட்சி. பணத்துக்கோ பதவிக்கோ கொள்கைகளைத் துறந்து இனத்தை அடகு வைக்கும் கட்சியல்ல தமிழரசுக் கட்சி.

# மூதூரில் சுதந்திரக் கட்சியின் வெற்றிக்குச் சுந்தரர் உதவி

## அவருடைய துரோகப் படலத்தின் சிகரம் இது

## தேர்தலில் நல்ல பாடம் கற்பார் என்பது உறுதி

திரு. சுந்தரலிங்கம் மறுபடியும் அரசியல் அரங்கில் பிரவேசித்து தனது புளுகு மூட்டைகளைத் தாராளமாக அவிழ்த்துவிடத் தொடங்கி விட்டார். மதிப்புக்குரிய தமிழ்த் தலைவர்கள் மீது கண்ணுபின்னுவென்று கண்மூடித்தனமாக வசைமாரி பொழிகின்றார். அவர் கூற்று அத்தனையும் பொய். தனது சந்தர்ப்பவாதத்தை மறைப்பதற்காக உண்மையைத் திரித்து பத்தினி வேஷம் போடுகிறார் திரு. சுந்தரலிங்கம்.

திரு. சுந்தரலிங்கம் விஷமப் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டதாலும், உண்மைக்குப் புறம்பான அவரது கூற்றுகளை சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பக்கமேளம் கொட்டும் ஒரு தமிழ் தினசரி பிரகாசமாகப் பிரசுரித்து, தமிழரசுக் கட்சியைத் தாக்கத் தொடங்கி விட்டதாலும் உண்மைச் சம்பவங்களைச் சுருக்கமாக எடுத்துக் கூறவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

### சேனநாயக்கா தாசன்

அவரது பாராளுமன்றப் பிரவேசமே விசித்திரமான கதை. டொனமூர் அரசியற் சட்டத்தின் கீழ இயங்கிய அரசாங்க சபையில் ஓர் ஆசனத்தைப் பிடித்துவிட வேண்டுமென்பதற்காக அவர் செய்த முயற்சிகள் கொஞ்சமன்று. ஆயினும் தமிழ்க்காங்கிரஸ் அவர் எண்ணத்திலே மண்ணைப் போட்டது. இரண்டு முறைகள் நடைபெற்ற அரசாங்க சபை இடைத் தேர்தல்களில் போட்டியிட்டு திரு. சுந்தரலிங்கம் படுதோல்வி அடைந்தார். தமிழ் காங்கிரசே இவரை வீழ்த்தியது. ஆனல் பத்தாண்டு இடைக்காலத்துக்குப் பின்னர் 1947-ல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலிலே திரு. டி. எஸ். சேனநாயக்கா அளித்த ஒரு பேருதவியால் திரு. சுந்தரலிங்கம் வெற்றிபெற முடிந்தது. வவுனியா, முல்லைத்தீவு, மன்னர் பகுதிகள் உள்ளடங்கிய தொகுதியிலிருந்து மன்னரைப் பிரித்து தனித் தொகுதியாக்கினர் பெரிய சேனநாயக்கா. திரு. சுந்தரலிங்கத்துக்கு தேர்தல் வெற்றியீட்டிக் கொடுக்க வேண்டுமென்பதற்காக திரு. சேனநாயக்கா செய்த ஏற்பாடுதான் இது.

இதன் விளைவாக திரு. சுந்தரலிங்கம் பிற்காலத்தில் பெரிய சேனநாயக்காவின் தாசானுதாசஞக மாறி விட்டார்.

### துரோகப் படலம் ஆரம்பம்

1947-ம் வருடப் பொதுத் தேர்தலில் தனியாக அரசாங்கத்தைக் அமைக்கக்கூடிய பெரும்பான்மை ஸ்தானங்கள் பெரிய சேனநாயக்காவின் யு. என். பி. கட்சிக்குக் கிடைக்கவில்லை. அதே சமயத்தில் எதிர்க் கட்சிகளும் சுயேச்சைகளும் சேர்ந்து ஓர் அரசாங்கத்தை அமைக்க கூடிய வாய்ப்புகளோ பெருமளவில் இருந்தன. அதற்காக எதிர்க்கட்சித் தலைவர்கள் பெரு முயற்சி செய்துகொண்டிருந்தனர்.

இதைக் கண்டு திகிலடைந்த திரு. சேனநாயக்கா பதவிகளைக்கொடுத்து மூன்று தலைக் கழுதைகளான சுயேச்சைகளைப் பிடித்து எப்படியாவது அரசாங்கத்தை அமைத்துவிட வேண்டுமென்பதற்காகப் பகீரதப் பிரயத்தனங்களைச் செய்யத் தொடங்கினர். இதற்காக அவர் தனக்குத் தெரிந்த ராஜ தந்திர உபாயங்களையெல்லாம் கையாண்டார்.

அவர் விரித்த வஞ்சக வலையில் முதலில் சிக்கிய மகானுபாவர் திரு. சுந்தரலிங்கம் தான். திரு சுந்தரலிங்கத்துக்கு மந்திரி பதவியொன்றை வீசி யெறிந்ததும் அவர் சேனநாயக்காவிடம் சரணடைந்துவிட்டார்.

இவ்வாறு எதிர்க்கட்சிகள் ஒன்று கூடி ஓர் அரசாங்கத்தை அமைக்கும் முயற்சிக்கு வெடி வைத்த முதலாவது நபர் திரு. சுந்தரலிங்கம்தான். அன்று அவர் மந்திரி பதவியைத் துச்சமென மதித்திருந்தால் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து ஒரு கூட்டு அரசாங்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அரசியலிலே பெரும் மாற்றங்கள் ஏற்படவும் இடமிருந்தது. இவ்வாறு அரசியலில் திரு. சுந்தரலிங்கத்தின் துரோக படலம் ஆரம்பமாயிற்று.

### ஏன் வெளியேறினர்

பிரஜாவுரிமைச் சட்டத்தைத் தான் எதிர்த்ததால் திரு சேனநாயக்கா தன்னை மந்திரி சபையிலிருந்து "கல்தா" கொடுத்து விட்டார் என்று திரு. சுந்தரலிங்கம் ஏதோ பெரிய தியாகம் செய்துவிட்டவரைப் போல இன்று ஜம்பமடித்துக் கொள்கிறார். இஃது உண்மையைத் திரித்துக் கூறுவதாகும்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் திரு. சுந்தரலிங்கத்தின் அரசியல் விரோதி—ஒருவர் மற்றவரைக் கவிழ்த்துவிடுவதிலே கண்ணும் கருத்துமாயிருப்பர். 1947-ல் திரு. சுந்தரலிங்கம் திரு. ஜீ. ஜீ. யைப் பக்கவாட்டில் தாண்டி மந்திரிசபையுள் நுழைந்துவிட்டாலும், காலங்கடந்தாவது திரு. ஜீ. ஜீ. எப்படியோ புழக்கடை வழியாக மந்திரி சபைக்குள் பிரவேசித்து விட்டார். தனது எதிரி நுழைந்த பின்னர் திரு. சுந்தரலிங்கத்துக்கு அங்கே என்ன வேலை? அவர் உடனே தானாகவே வெளியேறிவிட்டார். இது தான் நடந்த சம்பவம்.

### கட்சியின் ஆதரவால் வெற்றி

1956-ம் வருடப் பொதுத் தேர்தலிலே தமிழரசுக் கட்சி ஆதரவளித்ததால் தான் திரு. சுந்தரலிங்கம் வெற்றிபெற முடிந்தது. அவர் பாராளுமன்றத்தில் வானவேடிக்கை காட்டி ராஜிநாமா செய்த போதெல்லாம் உப தேர்தலில் வெற்றி பெற அவருக்குத் தமிழரசுக் கட்சி கைகொடுத்தது.

செய் நன்றி மறந்த திரு. சுந்தரலிங்கம் கட்டுக்கடங்காமல் தான்தோன்றித்தனமாக நடக்கத் தொடங்கியதோடு தமிழரசுக் கட்சியையும் தூற்ற ஆரம்பித்ததால் 1960 மார்ச் தேர்தலிலே கட்சி அவரைக் கைவிட்டது. அதன் விளைவு அனைவரும் அறிந்ததே.

### அபாண்டம், வீண்பழி

மந்திரி பதவி கிடைக்காததால் தான் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் சமஷ்டிக் கட்சியை நிறுவினர் என்று தலை குக்குநாணக வெட்கக் கூடிய ஓர் அபாண்டத்தை அடுத்தபடியாக அவிழ்த்து விட்டார் திரு. சுந்தரலிங்கம். இது பச்சைப் பொய் என்பது அனைவரும் அறிந்த விஷயம்.

திரு. செல்வநாயகமே தமது ஓர் அறிக்கையில் இதனைத் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

திரு. செல்வநாயகம் சிங்கள சிறீ காரில் பிரயாணம் செய்தார் என்று மற்றும் ஒரு வீண்பழியையும் சுமத்தினர் திரு. சுந்தரலிங்கம். திரு. செல்வநாயகம் இதுவரை மறந்தேனும் ஒரு சிங்கள சிறீ காரில் பிரயாணம் செய்தது கிடையாது. இவ்விஷயத்தில் அவர் மிகக் கவனமாக இருப்பதால் தவறு நிகழ இடமே கிடையாது.

### துரோகங்களின் சிகரம்

துரோகங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல இன்று மூதூர் உப தேர்தலில் சிறீ. ல. சு. கட்சிக்கு வெற்றியீட்டிக் கொடுப்பதற்காக தமிழ் வாக்குகளைப் பிரித்து விட சூஜ கர்ணம் கோகர்ணமெல்லாம் போடுகிறார்.

அன்றுபோல இன்றும் அவர் சிங்கள எஜமானர்களுக்கு உதவ முன்வந்துள்ளார். தனது மூக்குப்போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழை ஏற்பட வேண்டுமென்பதுதான் அவரது குறிக்கோள். வேறு வார்த்தைகளிற் கூறின், தமிழினம் அழிந்தாலும் வகுப்புவாத சிங்களத் தலைவர்கள் சீரும் சிறப்புமாக வாழ வேண்டுமென்பதே அவரது பேரவா. இந்தத் தீய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே இன்று மூதூரில் விஷமத்தனம் செய்கிறார். இம்மாதிரியான விஷமம், வம்பு, துரோகம் எல்லாம் இனிமேல் என்றுமே செய்யாமலிருப்பதற்கான ஒரு படிப்பினையை மூதூரில் அவர் கற்றுக் கொள்வாரென்பது திண்ணம்.

எனவே ஆயிரமாயிரமாகத் திரண்டு வந்து தமிழரசுக் கட்சிக்கே வாக்களியுங்கள். தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்தால் தமிழ் பேசும் மக்கள் விடுதலைபெற வழி பிறக்கும். எதிர்கால சந்ததியும் விமோசனம் பெறும் ராணுவத்தின் அட்டூழியங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

தமிழரசு அபேட்சகர் ஜனுப் முகமதலியோ ஜாதிமத பேதங்கள் பாராது மக்களுக்குச் சேவை செய்வதில் என்றுமே தளராத உரம் பாய்ந்த நெஞ்சினர். கடந்த சத்தியாக்கிரக இயக்கத்திலே தொண்டர்களுடன் தானே வந்து கலந்து கொண்டவர். அவர் பாராளுமன்றத்திலே தனிமரமாக நிற்கப்போகிறவரல்ல. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் பாராளுமன்றத்துள் போராடும் தமிழரசுப் படையின் ஒரு போர் வீரராகவே அவர் திகழ்வார். தமிழரசின் பாராளுமன்றப் படையை வலுப்படுத்த வேண்டியது உங்கள் பொறுப்பு. சிந்தித்துச் செயலாற்றுங்கள்! இத் தேர்தலிலே நீங்கள் நல்ல தீர்ப்பை வழங்கிஞல் தமிழ் [illegible] என்றென்றும் நன்றி செலுத்தும். அமரர் திரு. ஏகாம்பரத்தின் ஆத்மாவும் சாந்தி பெறும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் படித்தால்

# உத்தியோகம் நிலைக்கும் என்பது பகற் கனவு

## சந்திக்கு வந்தவை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தோரே, இன்று, இலங்கையை ஆண்டு வருபவருக்கு அபிஷேகம், ஆராதனைகள் செய்ய வல்வெட்டியில் ஒழுங்குகள் செய்துள்ளனர்.

வல்வெட்டித்துறை பட்டின பிதாக்கள்—முன்பிருந்தோர்—இப்போதிருப்போர்—முக்கியமாக முகாமைக்காரர்கள்.

கடந்த காலத்தில் கையாண பட்டின சபைப் பணத்துக்கு கணக்குக் கொடுப்பதில் கணக்கு விடுவோர். மக்கள் செலுத்தும் வரிப்பணத்தை ஏப்பம் விட்டோர். இவர்கள் தான் வல்வெட்டித்துறையில் மந்திரிகளுக்கு மலர்மாலை சூடி வரவேற்பளித்தவர்கள்.

கணக்குப் பரிசோதனையாளர்களின் கருணையை எதிர்பார்த்து அதற்காக மந்திரிமார் மூலம் காக்காய் பிடிக்க எத்தனித்தனர்.

சிதம்பரக் கல்லூரிக்குச் சொந்தமான காணியில் படகு கட்டும் தொழிற்சாலை அமைக்க ஆயத்தம் செய்த மறறொருவர் கல்லூரியை அரசாங்கம எடுத்தாலும், காணியும் தன் தொழிற்சாலையும் அரசாங்கத்திடம் போகாது தப்பவைக்கப் பிரயத்தனம் செய்தார். அதற்கு மந்திரிக்கு வரவேற்பளிக்க முன்வந்தார்.

### பாதுகாப்புப்படலம்?

ஊர் மக்களிடம் வரவேற்புக்குப் பணம் சேகரித்த வரலாறு: ஆஹா! அந்த வண்டவாளத்தை வர்ணிக்க யாரால்தான் முடியும்?

அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதும், தமிழரசுத் தலைவர்களுடன், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிலரும் கைதுசெய்யப்பட்டு முகாமில் வைக்கப்பட்டிருந்தனர். அத்துடன் ராணுவ அட்டகாசமும், பொலிஸ் கெடுபிடியும் அங்கு அதிகமாகவிருந்தது. இனி அவசரகாலமோ அல்லது ராணுவ ஆட்சியோ ஏற்பட்டால் வல்வெட்டித்துறை மக்கள் துன்பமடையாமலிருக்க, விசேஷ கண்ணோட்டம் செலுத்தியருளுவார் மந்திரி, ஆகவேதான் இந்த வரவேற்பை அளிக்கின்ேறாம் என்று அப்பாவி மக்களிடம் பணம் திரட்டினர் வரவேற்புக்கு. தமிழரசுக் கட்சியினர் மீண்டும் போராட்டம் தொடங்கி, அவ்வேலை அவசரகால நிலைமையில் தாங்களும் தடுப்புக் காவலுக்குப் போகக்கூடாதே என்று ஆசைப்பட்ட சில பிரமுகர்கள மந்திரி வரவேற்பில் முன்னணியில் திகழ்ந்தனராம.

### சாராயாபிஷேகம்

இந்துக் கல்லூரியில்தான் மந்திரிமாருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. கல்லூரிககு அண்மையில் சிவன் கோயில். விருந்து நடைபெற்றது வெள்ளிக்கிழமை, அருகே இருந்த கோயிலையும் பொருட்படுத்தாது மாமிச விருந்து மந்திரிகளுக்கு—இந்துக் கல்லூரியில. அது மட்டுமா?

விருந்திலே தண்ணீருக்குப் பதில் இரட்டை வடி சாராயம் தான் உபயோகிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 11 போத்தல் இரட்டைவடி சாராயம், பல விஸ்கி, பியர் போத்தல்கள்.

இவையெல்லாம் ஆண்டவருக்கு (ஆண்டு கொண்டிருப்பவருக்கு) அளிக்கப்பட்ட அபிஷேகம்—விசேஷ ஆராதனைகள்,

### முடிவு?

இத்தனைக்கும் பலன் உடனடியாகக் கிடைத்துவிட்டதுதான் ஆச்சரியம். படகு கட்டும் தொழிற்சாலை நிலம் அரசாங்கததால அபகரிக்கப்பட்டுவிட்டது. சென்ற வார அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை இதை வெளியிட்டுள்ளது.

மந்திரிகள் வரவேற்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகக் கட்டப்பட்ட கறுப்புக் கொடிகள் பொலிசாராலும், ராணுவத்தாராலும் அபகரிக்கப்பட்டன.

வரவேற்புக்கு ஆதரவு கொடுத்தோரும் இப்போது விடயம் விளங்கி வெதும்புகின்றனர். வரவேற்புக்கு முஸ்தீபு செய்த மூலவர் மூவரும ஒருவரை ஒருவர் கறுவிக் கொண்டு திரிகின்றனர்.

சேர்த்த பணம் 8000 ரூபாய். அதிலே 150 பூமாலைகள் வாங்கப்பட்டன. ஆக 18 தான் மந்திரிகளுக்கு விழுந்தன.

வரவேற்புக்கு வாங்கப்பட்ட சீனவெடிகள் அடுத்த நாள் தான அதிகமாக சில பிள்ளைகளால் வெடி தீர்க்கப்பட்டனவாம்.

### பிரதிநிதிகள் சபையில் வரவேற்பு வைபவம்?

மக்கள் பிரதிநிதிகள் சபையில் இந்த மந்திரிமார் வரவேற்பு சம்பந்தமாக நடைபெற்ற ருசிகரமான "வாக்குவாதங்கள்" பற்றி அப்பாக்குட்டி அம்மான் அடுத்த வாரம் கூறுவார்.

### தலையற்ற முண்டம்பற்றி ஜீ. ஜீயின கருத்து

தமிழ் காங்கிரஸ் கொழும்புக் கிளையைப்பற்றி அப்பாக்குட்டி அம்மான் முன்னரும் சில சுவையான சம்பவங்களைத் தெரிவித்தாரல்லவா? இப்போது மேலும் நல்ல சுவையான சம்பவங்கள் அம்மானுக்குச் சிக்கியுள்ளன.

கடந்த வாரம் திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் யாழ்ப்பாணம் செல்லுவதற்காக ரத்மலானை விமான நிலையம் சென்றிருந்தார். அங்கே கல்வி அமைச்சில் கடமை பார்க்கும் தம் நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்ததை நமது அம்மான் ஒட்டுக் கேட்டு விட்டார்.

தினசரிப் பத்திரிகை ஒன்றில் அடிக்கடி கொட்டை எழுத்துச் செய்திகளும், அறிக்கைகளும, வேண்டுகோள்களும் தமிழ் காங்கிரஸ், கொழும்புக் கிளையால் விடப்பட்டுவருகிறது. இவற்றுக்கும் தனக்கும் எதுவித மான சம்பந்தமும் கிடையாது என்று திரு. பொன்னம்பலம் தமது நண்பரிடம் உறுதியாகக் கூறினர்.

தமது பெயரையும், முகலாவணியங்களையும், உருட்டு விழிகளையும் "டுப்ளிக்கேட்" பண்ணும் ஒருவரின் தூண்டுதலாலதான் இது நடைபெறுகிறதாம். இது நல்லதல்ல என்று பலமுறை சிநேகித முறையில் கண்டித்துள்ளாராம். ஆனல் அறிக்கை விடுவோர் இதை யிட்டு சிரத்தை காட்டுவதாயில்லை என்று கூறினர்.

தலைவர் இப்படிக்கூறிய பின்னும், தலையற்ற முண்டமான கொழும்புக் கிளைக்கு ரோசம் ஏற்படாதா?

## சதியில் சிக்கி மதியை இழக்காதீர்!

## அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு திரு. அழகக்கோன் அறைகூவல்

மொழி அழிந்தால் இனம் அழியும் என்பது சரித்திரம் கண்ட உண்மை. நீங்கள் சிங்களம் படித்து அரசாங்க சேவையில் தொடர்ந்து இருக்கலாமென்பது நப்பாசை. ஒரே மொழி, ஒரே இனம் என்ற கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் சிங்கள அரசாங்கம் உங்களை விட்டு வைக்கப் போவதில்லை. சிங்கள மக்களினிடையே வேலை இல்லாத் திண்டாட்டம் கட்டுமீறிப் போய்க் கொண்டிருக்கும்போது சிங்களம் படித்த உங்களை அரசாங்க சேவையில் வைத்திருப்பார்களென்பது பகற் கனவே. இன்று நீங்கள் இந்தச் சதியில் சிக்குண்டால் எமது போராட்டம், எமது இனத்தின் வருங்காலம் வலியிழந்து ஆட்சியாளருக்கு அடி பணிந்து, மண்ணோடு மண்ணாகி மறைந்து விட நேரிடும். தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு சிங்களம் படிக்கக் கூடாது என்று வலியுறுத்தி, மன்னார் பிரதிநிதி திரு. வி. ஏ. அழகக்கோன் விடுத்துள்ள வேண்டுகோளில் இவ்வாறு கோரியுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும்கூறுவதாவது:—

சிங்களம் படிப்பதா, விடுவதா வென நீங்கள் முடிவு செய்ய இயலாத கட்டத்தில் இருக்கிறீர்களென அறிகிறேன். இச் சந்தர்ப்பத்தில் தமிழ் பேசும் இனத்தின் ஓர் பிரதிநிதிஎன்ற கோதாவில் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.



திரு. வி. ஏ. அழகக்கோன்

அற்ப சலுகைகளையும், ஒரு சில பதவிகளையும் கொடுத்து அரசாங்கம் உங்களை ஏமாற்றப் பார்க்கிறது. உங்கள் சம்பள உயர்வைத் தடை செய்து, பயமுறுத்தி பணியச் செய்யப் பார்க்கிறார்கள் இதைக் கண்டு ஏமாந்து விடுவீர்களேயானல் நீங்கள் உங்கள் இனத்திற்கும் எதிர்காலச் சந்ததிக்கும் துரோகம் செய்தவர்களாவீர்கள்.

அரசாங்க சேவையில் தமிழ் பேசும் மக்களுக்கு இடம் இல்லை. வட, கீழ் மாகாணத்திலுள்ள நிலங்களையும் கடற் தொழிலையும் குடிசைக் கைத்தொழிலையும், வியாபாரம் போன்ற தொழில்களையும் செய்தே எம்மையும் எம் சந்ததியையும் காப்பாற்றுவதோடு எம் நாட்டை வளம் பொருந்திய நாடாக்க முயலுவோமாக. "தன் கையே தனக் குதவி" என்ற முதுமொழிக்கிணங்க வழி வகுத்துக் கொள்ள வேண்டும்.

உங்களைஏதோ போர்முனைக்குப் புறப்படும் படி கேட்கவில்லை. ஒரு சிலரின் நலனை மட்டும் எண்ணிச் சிங்களத்தைப் படியாதீர்கள். நீங்கள் சுயமரியாதையுடனும், தியாக உணர்ச்சியுடனும் செயலாற்றுவீர்களேயானல் வெற்றி உங்களுக்கே.

சம்பள உயர்வைத் தடை செய்ததன் விளைவால் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருப்பது நீங்கள் அறிந்ததே. இதன் முடிவு என்னவாக இருந்தாலும், அரசாங்க சேவையில் உள்ள நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் இனப் போராட்டத்தின் வெற்றிக்குச் செய்ய வேண்டியது, தியாக உணர்ச்சியுடன் சிங்களம் படியாமல் இருப்பதே.

## மந்திரிப் பதவியில் எமக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, நானும் திருவாளர்கள் வன்னியசிங்கமும், சிவபாலனும் தமிழ்க் காங்கிரஸிலிருந்து விலகி, மசோதாவுக்கெதிராக வாக்களிப்பதென முடிவு செய்தோம்.

மேலும் திரு. சுந்தரலிங்கம் பண்டாரநாயக்கா— செல்வநாயகம் ஒப்பந்தத்திலுள்ள பகுதியொன்றைப் பிழையாக அர்த்தம் கொண்டு விட்டிருக்கிறார். அப்பகுதி பின்வருமாறு:

"இந்திய வம்சாவளியினர்க்கு இலங்கைப் பிரஜாவுரிமை கொடுப்பது பற்றியும், பிரஜாவுரிமைச் சட்டத்தைத் திருத்தியமைப்பது பற்றியும் சமஷ்டிக் கட்சியின் பிரதிநிதிகள் பிரதமரிடம் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். அத்துடன் இப்பிரச்சினைகளுக்கு விரைவில் ஒரு தீர்வுகாணும்படியும் வற்புறுத்தினர். இப்பிரச்சினையை விரைவில் தம் கவனத்துக் கெடுத்துக் கொள்வதாகப் பிரதமர் அறிவித்தார்."

திரு. சுந்தரலிங்கம் சொல்வது போல், "இப்பிரச்சினை பற்றிச் சமஷ்டிக் கட்சியினருடன் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. அதை நான் தகுந்த ஆட்களுடன் இன்னும்சிறிது காலத்தில் பேசிக் கொள்வேன்" என்று பிரதமர் கூறவில்லை.

எல்லாம் முடிந்து விட்டது என்ற இழப்பு மனப்பான்மை என் கட்சியிடமோ, என்னிடமோ கிடையாது. சத்தியாக்கிரகம் ஓர் மாபெரும் வெற்றி என்றே நாம் கருதுகிறோம். இழந்த எமது உரிமைகளை மீண்டும் பெற மேற்கொண்டுள்ள முயற்சி மிகவும் கஷ்டமான தொன்று என்பதை அறிவு படைத்த அனைவரும் உணரு[illegible] தொடர்ந்து இரண்டு மாத காலமாக நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் மூலம், தமிழினத்தின் ஒன்றுபட்ட முயற்சியைச் செயல்படுத்தியுள்ளது எமது கட்சி.

வவுனியாவில் தமது ஸ்தானத்தை இழந்து விட்டு, மூதூர் மூலம் அரசியலில் மீண்டும் புகலாம் என்று எண்ணியவருக்கு அங்கும் எதிர்ப்பிருப்பதைக் கண்டு, தோல்வி மனப்பான்மையால் பீடிக்கப்பட்டு நிற்பவர் திரு. சுந்தரலிங்கமேயன்றி நாங்களல்ல.

## கந்தளாயில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராடும் எந்தக் கட்சியும் இருக்காது, அவர்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக்குவது எளிதாகிவிடும் என்பதுதான் ஆளும் கட்சியின் வஞ்சகத் திட்டம்.


சி. சி. சி. புகையிலை பசளைக் கலவைகள்

கொழும்பு கொமர்ஷியல் கொம்பனி லிமிட்டெட்,
பசளைப்பகுதி.
அக்னைட் ஹவுஸ், யூனியன் பிளேஸ், கொழும்பு- 2. போன்: 7935.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்பின் அணைப்பில்

க. நவசோதி

ஏங்கும் வெள்ளை வெளேரென்ற பனித்திரை. வானத்தைத் தொடும் உயர்ந்த மலைகளைக் காண முடியவில்லை. பாதாளம் போன்ற பள்ளத்தாக்குகள் இருந்த இடமே தெரியவில்லை.

காலைக் கதிரவன் அப்பனி மறைப்பின் ஒரு மூலையில் மெல்ல எழுகிறான். தனது சிவந்த கதிர்களை நீட்டி அந்தப் பனித்திரையைக் கிழிக்கிறான். இருந்த இடம் தெரியாமல், பனி எங்கேயோ ஓடி மறைகிறது.

இயற்கையன்னை புத்தாடை புனைந்து புன்முறுவல் பூக்கிறாள்......எங்கும் பச்சைப் பசேலென்ற தோற்றத்தை வெளிக்காட்டுகின்றன, மலைத்தொடர்கள். அவை— பொன் விளையும் பூமி; ஆமாம், தேயிலைத் தோட்டங்கள், இலங்கைக்குச் செழிப்பை அளிக்கும் செல்வச் சுரங்கங்கள்! அத்தோட்டங்களில் ஒன்றுதான்—'லட்சுமி தோட்டம்.'

லட்சுமி தோட்டத்தின் வளைந்து வளைந்து செல்லும் பாதை பாம்பு போலத் தோன்றியது. அப்பாதையில் ஒரு தொழிலாளர் கூட்டம் சென்று கொண்டிருந்தது. அவர்கள், லட்சுமி தோட்டத்தில் வேலை செய்பவர்கள்.

அதோ அந்தக் கூட்டத்தின் கடைசியிலே, தனித்து தளர்ந்த நடையில் செல்கிறாளே, அவள் தான் பார்வதி. அவளுக்கு இரண்டு பிள்ளைகள். அவளுடைய கணவனாகிய சுப்பனுக்கு, நெடுநாட்கள் இவ்வுலகில் வாழப் பலனிருக்கவில்லை. தானுண்டு, தன் பாடுண்டு என்று இருக்கத் தெரியாதவன். ஏனைய தொழிலாளர்களைப் போல அவனும் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்து கொண்டான். தொழிலாளர் சங்கத்தின் பெரும் தலைகள் கூறியதைப் போல ஏதோ நன்மை கிடைக்கும் என்ற எண்ணம் அவனை அதில் சேரவைத்தது.

தொழிலாளரின் சம்பள உயர்வுக்காக 'ஸ்ரைக்' செய்ய வேண்டும் என்று சங்கத்தில் தீர்மானம் கொண்டு வந்தனர். தொழிலாளர்களின் குடும்பத்தைப் போல தனது 'ஆமா' போட்டுத் தன் சம்மதத்தைத் தெரிவித்தான் சுப்பன். வேலை நிறுத்தம்— தொழிலாளரின் உரிமைப் போராட்டம் ஆரம்பித்தது. முடிவு— மூன்று தொழிலாளரின் உயிர் பலியிடப்பட்டது. பலர் காயத்திற்குள்ளானார்கள்.

லட்சுமி தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்பவர்களில் விதவை பார்வதியும் ஒருத்தி.

அவளுக்கு இரு குழந்தைகள்—முருகன், வள்ளி. இருவரும் பள்ளி செல்லும் பருவத்தினர்.

ஒரு நாள்......தாயின் கஷ்டத்தை அறியாத இரு சிறுர்களும் புத்தகமும், லெட் பென்சிலும் வாங்கப் பணம் கேட்கிறார்கள், விடாப்பிடியாக.

வந்ததே கோபம் பார்வதிக்கு. வாங்கு வாங்கென்று வாங்கி விடுகிறாள் இருவரையும்.

அழுதுகொண்டே பள்ளி செல்கின்றனர் பிள்ளைகள். பச்சாத்தாபத்தினளாய், தொடர்ந்து செல்கின்றாள் பெற்றவள்.

பள்ளிக்கூடத்தில் அவள் கண்ட காட்சி?

ஆசிரியரின் உருவத்தில் இறைவனையே கண்டாள் பார்வதி,

தனது உயிரும் பலியிடப்படுமென சுப்பன் நினைத்தேயிருக்கவில்லை. மக்களைக் காக்கவேண்டிய கனவான்கள்—பொலிஸ்காரர்கள் அவனுயிரைத் தமது துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கினர்.

சுப்பனின் மறைவுக்கும் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனுதாபத் தீர்மானம் பசியைத் தீர்க்குமானால் நல்லதுதான். ஆனால், சுப்பன் அனாதரவாக விட்டுச் சென்ற அவனது மனைவிமக்களின் நீண்ட பசியை அது தீர்க்கவில்லையே.

பார்வதிக்கு விதவை என்ற பட்டத்தை உலகம் அளித்தது. 'அப்பா' என்று அன்புடன் அழைக்க யாருமற்றவரானார்கள் இரண்டு குழந்தைகளும்.

லட்சுமி தோட்டத்தில் வேலைக்குச் சென்றுகொண்டிருந்த பார்வதியின் முகத்திலே வழமையான மலர்ச்சி இல்லை. அவளுடன் சென்றுகொண்டிருந்தவர்கள் அதை அவதானிக்கத் தவறவில்லை. 'இறந்துபோன கணவனின் எண்ணம் வந்துவிட்ட தாக்கும்' என்று எண்ணி பார்வதியோடு அதிகம் கதைக்காமல் சென்றனர்.

ஆனால், அவர்களிடையே குசுகுசுப்புக் காணப்பட்டது.

பார்வதியிடம் கலகலப்பு இல்லை. அமைதியான நடை. மௌனமாகச் சென்றாள். அவளது உள்ளமோ அவளைப் போட்டுச் சித்திரவதை செய்தது. அன்று அதிகாலையில் நடந்த அந்தச்சம்பவம், எண்ணத் திரையில் மீண்டும் மீண்டும் தோன்றியது. அவளது உள்ளத்தைக் கழுகு போல கொத்திக் கொத்திக் குதறியது.

ஒரு கணக்கு அப்பியாசப் புத்தகம் வாங்கப் பதினைந்து சதம் கேட்டான் அண்ணன். லெட்பென்சில் வாங்கப் பத்துச் சதம் கேட்டாள் தங்கை. 'காசு தராவிட்டால் பள்ளிக்குப் போக முடியாது-மாஸ்ரர் அடிப்பார்' என்று காசு தரும்படி விடாப்பிடியாய் நின்றனர். இருவரும். பார்வதிக்கு அவர்களின் [illegible] பொறுக்க முடியவில்லை.

மூன்று பேரின் மூன்று நேரக் கஞ்சிக்காகப் படாதபாடு பட்டுக்கொண்டிருக்கும் அவளால் அந்த நிலையில் என்ன செய்ய முடியும்!

அவளிடம் அப்போது பணம் என்று இருந்தது இரண்டு ரூபாய் மூன்று சதம் தான். அதில் இரண்டு ரூபாய் அடுத்த லயத்திலிருக்கும் மாரிமுத்துவுக்குக் கொடுக்க வேண்டிய கடன் காசு. அந்த மாரிமுத்துவின் நச்சரிப்பை இன்னும் பொறுக்க முடியாது. இன்றே கொடுத்துவிட வேண்டும்.



அவள் அவசரமாகப் புறப்படும் நேரத்தில் பிள்ளைகள் காசு கேட்டுச் சிணுங்கியதைப் பார்வதியால் பொறுக்க முடியவில்லை.

"காலங்காத்தாலே யாரிடம் போய்க் கடன் கேட்க. நாளைக்குத் தர்ரேன், போங்க பேசாமே" என்று எரிந்து விழுந்தாள். அவர்களோ போவதாக இல்லை. விடாப்பிடியாய் நின்றனர்.

தோட்டத்திலே வேலை தொடங்குவதற்கு சங்கு ஊதியது.

"பார்வதீ வேலைக்கு வல்லியா"—அடுத்த வீட்டுத் தங்கம்மாவின் குரல் காதுகளில் ஒலித்தது.

"நீ வச்சிக்கிற காசைக் கொடேன் ஆயா"—வெடுக்சென்று கேட்டான் பையன்.

பார்வதிக்குப் பொத்தென்று கிளம்பியது ஆத்திரம். அந்த ஆத்திரத்தில். அவள் பத்திரகாளியானாள்,

சொருகியிருந்த அகப்பையை விருக்கென்று இழுத்தெடுத்தாள். இருவருக்கும தாறுமாறாக அடித்தாள். துடிக்கத் துடிக்க அடித்தாள். அகப்பை முறிந்து விட்டது. அவளின் ஆத்திரமோ அடங்கவில்லை. இரண்டு கைகளாலும் மாறி மாறி அடித்தாள். ஆத்திரம் தீருமட்டும் அடித்து ஓய்ந்தாள.

பையனின் உடம்பெங்கும் காயத் தழும்புகள், முருங்கைக் காய்ப் போல வீங்கிக் கிடந்தன. இளையவளின் முகம் 'பொம்' என்று வீங்கி விட்டது. "போய்த் தொலைங்க பள்ளிக்கு"— பார்வதி சீறினாள்.

அண்ணன், தங்கையின் தோள்களில் கையைப் படர்த்தி அணைத்துக் கொண்டே லயத்தின் படியில இறங்கினான் அப்போது அவனுக்கு அவனது தந்தையின் ரோசம் வந்ததோ என்னவோ! திடீரென்று பின்னே திரும்பித் தாயை முறைத்துப் பார்த்தான்.

"நீ கூடாத அம்மா"—விம்மலுக்கும் பொருமலுக்குமிடையே சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தான்.

பார்வதியின் ஆத்திரம் அடங்கி அழுகையாக மாறிற்று. கண்ணீர் மல்க, தான் பெற்ற செல்வங்கள் கதறலும் கண்ணீருமாக கைகோர்த்துச் செல்வதைப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

தனக்கேற்பட்ட துயரத்தை ஓரளவு அடக்கிக் கொண்டான் பையன்—அவன் ஆண் குழந்தை தானே! ஆனால் தங்கை அழுதுகொண்டே மலைச்சரிவில் இறங்கிச் சென்றாள். அவளது விம்மல் ஒலி அவள் வெகுதூரம் போகுமட்டும் பார்வதியின் காதில் கேட்டுக்கொண்டேயிருந்தது. தாயின் நினைவு தன் பிள்ளைகளுடனே சென்றுகொண்டே இருந்தது.

தோட்டத்தில் வேலைசெய்யக் கூடிய நிலையில் அவள் இல்லை. அவளது மனம் வெடித்துச் சுக்கு நூருகிச் சிதறிக் கிடந்தது. ஆயினும் என்ன செய்வது. வேலைக்குப் போகாவிடிலோ ஒரு நாள் பட்டினி கிடக்க வேண்டியதுதான். மனதிலே போராட்டம். உடலிலே சோர்வு. இவற்றைக் காட்டியது அவளது நடை.

மூன்று நேரக் கஞ்சியை எதிர்பார்க்கும் ஒருசாண் வயிற்றுக்கும், பாசவெள்ளத்தினுள் என்றோ அமிழ்ந்து போன உள்ளத்துக்குமிடையில் போராட்டம். ஓயாத போராட்டம்!

அவளது நடை தளர்ந்தது;

போராட்டம் வலுத்தது; நடை இன்னும் தளர்ந்தது;

ஈற்றில்......

போராட்டம் முடிந்தது; ஒரு சாண் வயிறு செத்து மடிந்தது!

நின்றாள்! — திரும்பி விட்டாள்!

இப்பொழுது அவள் நடக்கவில்லை! ஒரே ஓட்டமாக ஓடினாள்!

(11-ம் பக்கம் பார்க்க)


# விற்பனைக்கு

வீட்டுக் கட்டிடத்துக்குத் தேவையான சகல விதமான இரும்புச் சாமான்கள் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

**என். வயித்திலிங்கமும் சகாக்களும் வரை.**

33, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

450, பழைய சோனகத் தெரு, கொழும்பு.

138, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழந்த உரிமைகளை மீண்டும் பெற

## அன்பின் அணைப்பில்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

குடிசையை நோக்கி அல்ல.

அதைஅவள் தாண்டி வந்து விட்டாள். பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடினாள். ஒருநாள் பட்டினி கிடக்க வேண்டுமே என்ற எண்ணத்தை மறந்து ஓடினாள்—இல்லை! அந்த எண்ணத்தைக் காலால் மிதித்துச் சிதைத்துக் கொண்டே ஓடினாள்.

பள்ளிக்கூடத்தை அடைந்த பார்வதி வாசலிலே அப்படியே நின்று விட்டாள் மாணவர்கள் வரிசையாக நின்று தேவாரம் பாடிக் கொண்டிருந்தனர்.

"அம்மையே அப்பா, ஒப்பிலா மணியே, அன்பினில் விளைந்த ஆரமுதே......"—அந்த அமைதியான சூழ்நிலையில் அந்தத் திருவாசகம் அவளை உருக வைத்தது. தட்டியின் இடுக்கு வழியே எட்டிப்பார்த்தாள்—

அவளது மகன் முருகன்——பக்கத்தில் மகள் வள்ளி அந்த முகங்களில் இன்னும் கண்ணீர் காயவில்லை. கை கூப்பி, கண்மூடி மாணவர் வரிசையில் நின்று பாடிக் கொண்டிருந்தனர். முருகனின் கணீரென்ற குரல் அங்கு தெளிவாக ஒலித்தது.

பார்வதியின் கண்களில் நீர் திரண்டது. கைகள் கூம்பின. "அன்பினில் விளைந்த ஆரமுதே......"—ஆசிரியர் திருப்பித் திருப்பி அதைச் சொல்லிக் கொடுத்தார். அந்தத் தொடர், அவளது உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்தது. 'ஓ' வென்று அழவேண்டும் போலிருந்தது பார்வதிக்கு. அழுகையை அடக்கிக் கொண்டாள்.

தேவாரம் முடிந்ததும் "கடவுளே! ஆசிரியர் கொப்பியும்பென்சிலும் கொண்டு வராததுக்காக என் குழந்தைகளை அடிக்காமல் பார்த்துக் கொள்" என்று பார்வதி வேண்டிக்கொண்டாள். ஆசிரியர் முன் செல்ல அவளுக்கு மனம் துணியவில்லை.

குழந்தைகளை எப்படி ஆற்றுவது. அவர்களின் காயங்களை எப்படிப் பார்ப்பது? தட்டியின் மறைவிலேயே நின்று விட்டாள். சற்று நேரம்—பின் என்ன தோன்றியதோ, தட்டியின் இடுக்கு வழியே பார்வையைச் செலுத்தினாள். அவள் அங்கே கண்டது—ஆசிரியர் முருகனை அணைத்து அவனின் முதுகுக் காயத்துக்கு மருந்து பூசிக்கொண்டிருந்தார். நீண்ட பெருமூச்சு—ஆசிரியரின் உருவத்தில் இறைவனையே கண்டாள் பார்வதி.

"ஏண்டா! உன் அப்பன் செத்த பிறகு உன் அம்மாவுக்கு என்ன வெறியா வந்திருக்கு?"—ஆசிரியரின் வார்த்தைகள் அம்பாக வந்து காதைத் துளைத்து உள்ளத்தில் தைத்தது. இனி அவளால் அங்கு நிற்க முடியாது. நின்றால் அவளது உள்ளம் வெடித்துச் சுக்கு நூறாகி விடும். குடிசையை நோக்கி ஓடினாள். துயர வெள்ளத்தைத் தாங்கிக் கொண்டு ஓடினாள்.

வெள்ளத்தின் பாய்ச்சல் அணையை உடைத்து விட்டது.

குடிசையுள் குப்புற விழுந்து குமுறிக் குமுறி அழுதாள்!

சூரியன் தலைக்குமேல் வந்து ஒரு மணித்தியாலமாகி விட்டது. லயத்தின் வாசலில் நின்று கொண்டிருந்தாள், பார்வதி. அவளது உள்ளத்திலே உவகை; முகத்திலே மலர்ச்சி. பாடசாலையிலிருந்து கைகோர்த்துக் கொண்டு வரும் தன் குழந்தைகளை நோக்கி விரித்த கைகளுடன் ஓடினாள். இருவரையும் இரண்டு கைகளுள்ளும் அணைத்துக் கொண்டு, குடிசைக்குள் நுழைந்தாள். மாறி மாறி இருவருக்கும் முத்தங்கள் சொரிந்தாள்.

"அம்மா எங்க மாஸ்ரர் நல்லவரு"— முருகன் பேசினான். பார்வதி ஊமையாகி விட்டாள்.

"எங்க மாஸ்ரர், எனக்குக் கொப்பியும் தங்கச்சிக்கு வெப்பென்சிலும் வாங்கிக் கொடுத்தாரு'— பார்வதி இப்பொழுதும் பேசவில்லை. தன் இரு குழந்தைகளையும் மார்போடு அணைத்துக் கொண்டு கண்ணீர் சொரிந்தாள்.

தான் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி அவள் உள்ளம் மன்றாடியது.

"ஏ...மா அழறே"— பெற்றெடுத்த தாயின் கண்ணீர் வள்ளியின் உள்ளத்தை உருக்கியது.

"ஐயோ, கண்ணே"— பார்வதி அலறியே விட்டாள்.

தன் இரு குழந்தைகளுக்கும் தான் உண்டாக்கிய காயத் தழும்புகளில் மாறி மாறி முத்தமாரி பொழிந்தாள் பாசவெள்ளம் பாய்ந்தோடியது. அதைவிட மாற்று மருந்து வேறு எதையுமே அவளால் கொடுக்க முடியவில்லை.

"உங்க ரெண்ணு பேரையும் காலேலே நன்ஞ அடிச்சுட்டேன். என்னை மன்னிச்சுக் கோங்க"— தாயின் கண்ணீரைத் துடைத்தாள் வள்ளி.

"அம்மா! அண்ணனும் நானும் பணிஸ் வைச்சிருக்கோம், நாம மூனுபேருஞ் சாப்பிடுவோம்"— வள்ளி, பேப்பரில் சுற்றியிருந்த பணிசை வெளியே எடுத்தாள்.

குழந்தைகளை இறுக அணைத்தாள் பார்வதி. வேலைக்குப் போகாததால் அன்றைய கூலி தனக்கு இல்லை என்பதை அந்த நிலையில் அவளால் எப்படி உணர முடியும்?

அதை உணரமுடியாமலாக்கிவிட்டது— அவளின் பாசம்!

அதை அழித்துவிட்டது —அவளின் அன்பு!

அன்பின் அணைப்பில் துன்பம் ஏது!

## தமிழரசுக்கட்சிதான் வழிகாட்டும்

### வாக்காளருக்கு முகம்மதலி வேண்டுகோள்

**1960-ம்** ஆண்டு நடைபெற்ற இரு தேர்தல்களிலும் மூதூர் தொகுதியில் முதலாவது பிரதிநிதியாக தமிழரசுக் கட்சியின் அபேட்சகரான திரு. த. ஏகாம்பரம் தெரிவு செய்யப்பட்டார். அவர் மறைந்த காரணத்தினால் மீண்டும் ஒரு இடைத் தேர்தல் மூதூரில் நடைபெறுகிறது. தமிழரசுக் கட்சி தனது அபேட்சகராக ஜனாப் முகம்மது அலியை நிறுத்தியுள்ளது. தற்போதுள்ள அரசியற் சூழ்நிலையில் தமிழரசுக் கட்சி தனது முழு பலத்தையும் வெளிக்காட்ட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களின் இன்னல்களை நீக்கி, இழந்துபோன உரிமைகளை மீண்டும் பெற தமிழரசுக் கட்சியாலேதான் முடியும் என்பதை ஆட்சியாளருக்கும் உலகத்துக்கும் எடுத்துக் காட்ட இந்த இடைத் தேர்தல் ஓர் அரிய சந்தர்ப்பத்தை நல்கியுள்ளது தமிழரசுக் கட்சி அபேட்சகரான ஜனாப் எம். ஈ எச். முகம்மது அலி விடுத்துள்ள ஓர் வேண்டுகோள் இங்கே தரப்படுகிறது.

மூதூர்த் தொகுதியின் இடைத்தேர்தல் 1962-ம் ஆண்டு ஜூன் மாதம் 28-ந் திகதி நடைபெற இருப்பது வாக்காளப் பெருமக்களாகிய தங்களுக்கு நன்கு தெரியும். உயர் திரு. த. ஏகாம்பரம் அவர்கள் இயற்கையெய்திய காரணத்தால் தான் இவ் இடைத்தேர்தல் நடைபெறுகிறது-என்பதும் நீங்கள் அறிந்ததே. 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் நானும் கலந்து கொண்டாலும் திரு. த. ஏகாம்பரம் அவர்களும் ஜனாப் ஏ. எல். ஏ. மஜிது அவர்களுமே வெற்றியடைந்தனர். நான் தோல்வியுற்றேன். நான் தோல்வியுற்றமைக்கு வாக்காளப் பெருமக்களைக் காரணமாகக் கொள்வதை விட ஆண்டவன் நாட்டம் அப்படியிருந்ததென்பதே பொருந்தும்.

இவ் இடைத்தேர்தலில் நானும் இத்தொகுதி வாக்காளப் பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஓர் அபேட்சகனாகப் போட்டியிட முன் வந்துள்ளேன். என்னை எதிர்த்து எனது உறவினரான எஸ். ஏ. ஹமீது, வவுனியா எஸ். சுந்தரலிங்கம், குணத்திலகா முதலியோர் போட்டியிடுகின்றனர்.

ஜனாப் எஸ். ஏ. ஹமீது சென்ற தேர்தல்களின் போது என் பக்கம் நின்றுழைத்தவர். ஆதலால் என் ஆதரவாளர்களின் அன்பைப் பெற்றிருந்தார். ஆனால் அவருடைய திடீர் அரசியல் பிரவேசத்தால் மக்கள் அவர்மீது நம்பிக்கை வைப்பது சாத்தியமன்று. என்மேல் பொதுமக்களாகிய நீங்கள் கொண்டுள்ள அன்பையும் ஆதரவையும் அறிந்திருந்தும் அவர் தேர்தலில்



ஜனாப் முகம்மது அலி

குதித்துள்ளார் என்றால் அதற்குக் காரணம் இல்லாமல் இறங்கி இருக்க மாட்டார் என்றே எண்ணுகிறேன். அவருக்கு நன்மை என்பனவற்றுக்குக் குறுக்கே நிற்க நாம் யார்?

வவுனியா சுந்தரலிங்கம் அவர்களுக்குத் தேர்தல் ஒரு விளையாட்டு. தனக்கு வாக்குக் கிடைக்காது விடினும் சமஷ்டிக் கட்சியினர் வெல்ல இடங் கொடுக்கக் கூடாதென்பது அவரது முக்கிய குறிக்கோள்—என்று ஊகிக்கக் கூடியதாக இருக்கிறது.

தான் வெல்வது அரிதென அறிந்தும் யார் வெல்ல வேண்டுமென்று விரும்புகிறாரோ தெரியவில்லை. சமஷ்டிக் கட்சி, சிங்கள மக்களோடு இணைந்து, சகோதரர்களாகச் சமஷ்டி அமைப்பின் கீழ் தமது சுயவுரிமைகளைப் பெற்று வாழ விரும்புகிறார்கள்.

திரு. சுந்தரலிங்கம் அவர்களோ தனித் தமிழ் நாடு கோருகிறார்கள். சமஷ்டிக் கோரிக்கையின் அடிப்படையிலே பல உயிர்கள் பலியாகிவிட்டன என்று கூறும் சுந்தரலிங்கம் அவர்கள் தமது தனித்தமிழ்நாட்டுக் கோரிக்கையால் முழுத் தமிழ் மக்களும் அழிய வேண்டுமென்று எதிர்பார்க்கின்றாரா? சாண் போட இடம் மறுக்கும் அரசாங்கம், முழம் போடவா இடங்கொடுக்கப் போகிறது? தமிழ் பேசும் மக்கள் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு சமஷ்டிக் கட்சியினரை விட நம்பத் தகுந்த வேறு கட்சி உருப்படியாக எதுவும் இன்றில்லை என்பதனைத் தமிழ் பேசும் மக்கள் நன்குணர்ந்திருக்கிறார்கள்.

முஸ்லீம் மக்கள் கூடத் தமது நிரந்தர உரிமைகளைச் சட்டபூர்வமாகப் பெற்று வாழ்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. சில முஸ்லிம் தலைகள் அரசாங்கத்தை ஆதரிப்பதனால் தற்போதைக்கு வளர்ப்புப் பிள்ளைகளாக இருக்கிறார்களே தவிர நிரந்தரமாக அவர்களின் ஆதரவு முஸ்லீம் மக்களுக்குக் கிடைக்கும் என்று நம்புவதற்கில்லை. இன்றையச் சூழ்நிலையில் சில மந்திரிமார்கள் முஸ்லீம்களுக்கு ஒரு குறைவுமில்லை என்று வாய்ப்பந்தல் போடலாம். உண்மை அதற்கு

(13—ம் பக்கம் பார்க்க)

## சலுகை எனும் இரை காட்டி சமூகத்தை சாகடிக்க முயற்சி

### அரசாங்கத்தை முஸ்லிம்கள் நம்பலாமா?

தூண்டில் முள்ளில் குத்தப்பட்டிருக்கும் புழுவை நல்ல உணவு என்று நம்பி மீன்கள் தங்கள் உயிருக்கே உலைவைத்துக் கொள்கின்றனர். இதே முறையில் அரசாங்கம் என்னும்தூண்டில்காரன் தூண்டிலில் செருகி எறியும் சலுகை என்னும் இரையை முஸ்லிம் சமூகம் நல்ல உணவென்று எண்ணிஏமாந்தால் நிரந்தரமான அடிமைத் தளத்துக்கு முஸ்லிம் சமூகம் வழிகோலுகிறது என்றே துணிந்துரைக்கலாம். இவ்வாறு தம் புலகாமம் கோயில் குடியிருப்பில் இஸ்லாமிய இளைஞர்கள் மத்தியில் எழுந்த ஐயப்பாடுகளை நீக்கும் முகமாகக் கருத்து வழங்கிய ஜனாப் இபுறாகிம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இலங்கையின் இரண்டாந்தரப் பெரும்பான்மை மக்களான தமிழ்ச் சகோதரர்களுக்கு அளிக்காத சலுகைகளை மூன்றாந்தரப் பெரும்பான்மை இனமான நமக்குமட்டும் அளிக்க அரசாங்கம் முன் வருகிறதெனில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒன்றுபடவிடாமல் தனித் தனியே பிரித்து வைத்து, இரு இனத்தின் கால்களிலும் அடிமை விலங்கைப் பூட்டத் தந்திரமாக அரசாங்கம் முயன்று வருகின்றது என்பதில் ஐயமில்லை. எனவே முஸ்லிம் மக்கள் அரசாங்கத்தின் மாய்மாலப் பேச்சுகளிலும் செய்கைகளிலும் மயங்கி விடாமல் மிக எச்சரிக்கையாக இருந்து தங்கள் அரசியல் வாழ்வை ஸ்திரப் படுத்திக் கொள்ள வேண்டும்.

சுதந்திரன் சந்தா விபரம்
இலங்கை—இந்தியா உட்பட
வருடச் சந்தா ரூபா. 10-00
இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!

ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.
நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.
ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.
இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லால் எழுதினால் இனமாக அனுப்புவோம்.
பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.
தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜிக்கு விமானநிலைய வரவேற்பு

சிவாஜியைச் சிறந்த முறையில் வரவேற்க சினிமா உலகப்பிரமுகர்கள் மட்டுமல்லாமல், தமிழக மக்கள் அனைவருமே ஏற்பாடுகள் செய்ய முன்வந்துள்ளனர். 24-ந் திகதி மாலை சிவாஜி கணேசன் சிங்கப்பூரிலிருந்து வரும் 'எயார் இந்தியா'வைக்கவுண்ட் விமானத்தில் சென்னை மீனம்பாக்கம் வருகிறார்.

24-ந் தேதி மாலை சென்னை வந்து சேரும் சிவாஜி கணேசனை வரவேற்க, சென்னை நகரமக்கள் சிறந்த ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். மகாதோரணங்கள் கட்ட ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

சினிமாப்பட அதிபர்கள், தாங்கள் சிவாஜிக்கு அணியவிருக்கும் மாலை எத்தகையதாக இருக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்கவே முடியாது திண்டாடுகின்றனர்.

மீனம்பாக்கம் விமான நிலையம் அன்று சமுத்திரம் போல் இருக்குமாதலால் பொதுமக்களையும், போக்குவரத்துகளையும் கட்டுப்படுத்துவது சம்பந்தமாக பொலிஸ் உயர் உத்தியோகத்தர்கள் கலந்து பேசி சில ஒழுங்கு வழிகளை ஏற்படுத்தியுள்ளனராம்.

எக்கச் சக்கமான நெரிசல் ஏற்பட்டால் எப்படிச் சமாளிக்க முடியும் என்பதை எண்ணியுள்ள சில முன்னணி நடிகைகள் மீனம்பாக்கம் செல்வதில்லையென எண்ணியுள்ளனராம். அப்படி அவர்கள் விமான நிலையம் செல்லாவிட்டால், சிவாஜியின் விமான நிலைய வரவேற்பை பகிஷ்கரிப்பதாகாதா? என்றும் எண்ண வேண்டியுள்ளது. ஆகவே அன்றையத்தினம் மாம்பலத்திலுள்ள சிவாஜி கணேசன் வீட்டுக்கே சென்று விடுவதாக இப்போது யோசித்துள்ளனராம்.

சிவாஜி கணேசனை வரவேற்க புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் பெரிய அளவில் ஏற்பாடு செய்து வருகிறாராம்.



"சலோமியின் சபதம்" என்ற நாடகத்தில் ஏரோது மன்னனாகத் தோன்றும் நடிகவேள் லடிஸ் வீரமணி.

## அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழ்

சிக்காகோ, கலிபோர்னியா பல்கலைக் கழகங்கள் தமிழும் மற்ற தென் இந்திய மொழிகளும் போதிக்கும் திட்டங்கள் தொடங்கியிருப்பதைக் கேட்டுத் தாம் மகிழ்ச்சியடைவதாக சிவாஜி கணேசன் தன் சுற்றுப் பிரயாணத்தின் போது, கூறினார். "இது எனக்கு மகிழ்ச்சியளித்தது இயற்கையே. ஏனெனில் நமது நாட்டைப் பற்றியும் நமது பண்பாட்டைப் பற்றியும் அமெரிக்கர் உண்மையில் அக்கறை கொண்டுள்ளனர் என்பதை இது காட்டுகிறது" என்றார் அவர்.



சிவாஜி கணேசன் அமெரிக்காவிலிருக்கையில் அவருக்கு ஏராளமான விருந்து வைபவங்கள் நடைபெற்றன. வாஷிங்டனில் நடைபெற்ற ஒரு விருந்தின்போது இந்தியாவில் பிறந்தவரும், அமெரிக்கப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. தாலிப் சிங் சாண்ட் என்பவருடன் அவர் உரையாடி மகிழ்கிறார்.

## புரட்சி நடிகரின் புதுமுகம்

எம். ஜி. ஆர். தயாரிக்கும் "மீனவ நண்ப"னில் திருச்சியைச் சேர்ந்த கமலாதேவி என்ற புதுமுகம் நடிக்கிறார். இன்னுமொரு கல்லூரி மாணவியும் இப்படத்தில் நடிப்பார் எனத் தெரிகிறது. ஆலங்குடி சோமு என்ற புதிய கவிஞரின் பாடல்கள் இரண்டும் கடந்த 14-ந்திகதி ஒலிப்பதிவு செய்யப்பட்டன.

படவிமர்சனம்

## "சிவகாமி"

வஞ்சகரின் பொறாமைத் தீயில் பொசுக்கப்பட்டபாகவதர் கண்ணிழந்தார், கபோதியானார். கைப்பிடித்த காரிகை சிவகாமியுடன் கிராமத்தில் வாழ்கிறார். கலைவாழ்வில் மீண்டும் காலடி எடுத்து வைக்க முயலுகையில் உயிர் துறக்கிறார்.

அனாதையாக வந்த மணி சிவகாமியின் அரவணைப்பால் முத்து என்ற பெயருடன் சிறப்புடன் வளர்கிறான். தனது முறைப் பெண் வசந்தாவை, உறவு முறை தெரியாமலே காதலிக்கிறான். அனாதை என்ற காரணத்தால் கலியாணம் தடைப்படுகிறது. மணியைப் பிரிந்த துக்கத்தால் அவன் தந்தை தில்லைநாயகம் தனது தீய குணங்களை ஒழித்துவிட்டு தேசாந்திரம் புறப்படுகிறார்.

திருடன் என்ற சந்தேகிக்கப்பட்ட தில்லைநாயகம் தன் மகன் மணிதான் முத்து என்பதனை சிவகாமி மூலம் அறிந்ததும் சகலதும் சுபமாக முடிகிறது.

இதுதான் "சிவகாமி"யின் கதை.

தியாகராஜ பாகவதரின் சொந்த வாழ்க்கையைப் பின்னணியாக வைத்துப் பின்னப்பட்ட கதை அமைப்பில், பாகவதரின் திடீர் மறைவினால் பல மாற்றங்கள் இருப்பினும் சுவை குன்றவில்லை.

பாபநாசம் சிவன் இயற்றும் கீர்த்தனங்களுக்கும், அதை இசைக்கும் பாகவதரின் எடுப்புக்களுக்கும் ஒருமைப்பாடு நிரம்ப உண்டு. பல வருடங்களுக்குப் பின்னர், பாகவதர் இறந்த பின்னரும்கூட தத்ரூபமாக இசையை ரசிக்க சினிமாஸ் தாபனத்தார் ஒரு நல்ல வாய்ப்பை அளித்துள்ளனர்.

கச்சிதமான சில பாடல்களுக்காகவும் சேலத்தின் இயற்கைக் காட்சிகளுக்காகவுமே "சிவகாமி"யைப் பார்க்கலாம்.

"சிவகாமி'யை சேலம் ரத்னா ஸ்டூடியோவில் எம். ஏ. வேணு தயாரித்துள்ளார்.

சிவகாமியாக ஜி. வரலட்சுமி தோன்றி ஒரு கண்ணியமான மனைவியாகக் காட்சி அளிக்கிறார். முத்துவாக வரும் ஜக்கையா, வசந்தாவாகத் தோன்றும் ஜயசிறி, அண்ணுசாமி—ராமராவ், தங்கம்—முத்துலட்சுமி ஆகியோர் திறம்பட நடித்துள்ளனர்.

தியாகராஜ பாகவதரைக் காணாது, அவரது அந்நாள் புகழ்பாடும் ரசிகர்களுக்கு நல்ல இசை விருந்தாக சிவகாமி அமையும் என்பதில் சந்தேகமில்லை.

—பானு—

# புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். இலங்கை வருகிறார்

## தமிழ்ப் படத்தில் நடிக்க

இலங்கையின் எழில் காட்சிகளை உள்ளடக்கி எத்தனையோ மேலைநாட்டுப் படத்தயாரிப்பாளர்கள் பயனடைந்தனர். ஆனால் தென்னகத்துச் சினிமாத் தயாரிப்பாளர்கள் அதிகமாக இலங்கையின் இயற்கைவனப்பை இதுவரை நன்றாகப்பயன் படுத்தவேயில்லை. விரைவில் இலங்கையில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் பிரதமபாகத்தில் தோன்றும் படம் ஒன்று தயாராக விருக்கின்றது.

புரட்சி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன் பிரதான பாகத்தில் தோன்றும் ஓர் தமிழ்ப் படத்தை இலங்கையில் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளார், பி. வி. என். புரொடக்ஷன்ஸ் உரிமையாளர் திரு. வள்ளிநாயகம் செட்டியார். "நாகநந்தினி", "மாடப்புறா" ஆகிய படங்களைத் தயாரித்தளித்த பி. வி. என். புரடக்ஷன்ஸ்சார் இப்படத்தை முழுக்க முழுக்க இலங்கையிலேயே தயாரிக்கப் போகிறார்களாம். இப்படத்தில் மேலும் பல நட்சத்திர நடிகர்கள் தோன்றுவார்களென தெரிகிறது.

இலங்கைக்கு புரட்சி நடிகர் வரும் பட்சத்தில், அவருடைய ரசிகப் பெருமக்கள் அவரைப் புடைசூழ்ந்து கொண்டுவிடுவார்கள். இலங்கைப் பொலிசாராலும் இந்நிலைமையைச் சமாளிக்க முடியுமோ என்னமோ தெரியாது.

தி. மு. க. தலைவர்களில் ஒருவராக விளங்கும் எம். ஜி. ஆர். மேல் சபையிலும் ஒரு உறுப்பினராக விருக்கிறார். ஆகவே அவரது வருகையை இலங்கை அரசாங்கம் ஆதரிக்கும் என்றும் சொல்லுவதற்கில்லை. தயாரிப்பாளர் பி. வள்ளிநாயகம் செட்டியார் ஒரு செயல் வீரர். எடுத்த காரியத்தை முடிப்பதில் அசகாய சூரர். எம். ஜி. ஆர். அவர்களை இலங்கைக்குக் கொண்டு வரும் முயற்சியிலும் விட்டுக் கொடுக்க மாட்டார் என்பது உறுதி.

## அஞ்சலியின் சிங்கம்

அஞ்சலிதேவி தனது சொந்தப் படமொன்றில் தோற்றுவிப்பதற்காக ரூ. 16,000 செலவு செய்து ராஜஸ்தானிலிருந்து கொண்டு வந்து வளர்த்த சிங்கம் செத்து விட்டது. சென்னை வீனஸ் ஸ்டூடியோவில் சில காட்சிகளில் இச் சிங்கம் நடித்துள்ளது. இச்சிங்கத்திடம் அஞ்சலிதேவி அதிக அன்பு காட்டினார்; அன்புக்குப் பாத்திரமான தனது வளர்ப்புச் சிங்கம் இறந்து [illegible] அழுதுவிட்டார்.


## ஒரு புதுமுறை சினிமாப் போட்டி?

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் விரைவில் திரையிடப் போகும் "குமுதம்" திரைப் படத்தை இலவசமாகப் பார்க்கலாம்.

"குமுதம்"

திரைப் படப் போட்டி விரைவில் இப் பகுதியில் இடம் பெறும்.

கீழ்காணும் பத்திரத்தை கத்தரித்து பத்திரப் படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்:-

கூப்பன் இல. 2

"குமுதம்"

புது முறை சினிமாப் போட்டி

பெயர் ..............................

முகவரி ..............................

..............................

..............................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிக்கு....

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

யாது. சோவியத் அரசியல் அமைப்புக்குப் பிறகுதான் சில தேசிய இனங்களின் மொழிக்கு வரி வடிவங்களே ஏற்பட்டன. ஆனல் வாழ்ந்த இனம்—வீரப பெருமைகள் பல கண்ட இனம்—தனக்கென ஒரு வரலாற்றைப் படைத்த இனம்—தனித்தன்மை கொண்ட இனமான தமிழினம் சமத்துவம் கேட்பது தேசிய ஒற்றுமைக்கு இழுக்கு என்று நிலை கெட்ட இந்தப் பொதுவுடமை வாதிகள் பிதற்றிப் புலம்புகின்ருர்கள். ஐக்கிய இலங்கைக்கு அவதாரம் எடுத்தவர்கள் நாங்கள் என்று தம்மைத்தாமே கூறிக் கொள்ளும் இவர்கள் முதலில் தம் பெயரை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போது அவர்களது மந்தபுத்தி சிறிது தெளிவடையும்.

## ஏமாறிய அப்பாவி மக்களை ஏமாற்றுகின்றது

சோவியத் யூனியலின் தேசியப் பிரச்சினைகளின் தீர்ப்பைப் பற்றி 1921-ல் லெனின் குறிப்பிடுகையில்-இது ஒரு உலகப் பிரச்சினை—இதில் நாம் ஆயிரமாயிரம் தடவைகள் கவனமாக இருக்க வேண்டும். இப்பிரச்சினை இந்தியா போன்று பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய நாடுகளுக்குத்தான் பொருந்தும—போராட்டங்கள் நடக்கும் என்ருர். ஆனல் இதன்படி பார்க்கின்றபோது இலங்கை போன்ற சின்னஞ் சிறிய நாடுகளில் தேசிய இனப் பிரச்சினைகள் ஏற்படவே இடமில்லை என்றுதான் லெனின் சித்தாந்தப்படி கருத்தாகின்றது.

ஆனல் ஈழம் கண்ட கம்யூனிசம் எப்படியோ போலியாகி—வேண்டுமென்றே சிறுபான்மை மக்களின் தேசியப் பிரச்சினைகளைப் பல வழிகளிலும் திரித்துவிட்டு வேடிக்கை பார்ப்பதும்—அதற்குப் புரியாத புதிய வியாக்கியானங்கள் தருவதுமே தொழிலாகிவிட்டது. இல்லாத ஊருக்குப் போகாத பாதையால் புரியாத விதமாகக் கம்யூனிசம் எங்கோ ஏமாறிய அப்பாவித் தமிழ் பேசும் மக்களை அழைத்துப் போய் கொண்டிருக்கின்றது.

## கம்யூனிசம் ஒற்றை ஆட்சியை எப்படி ஆதரிக்க முடியும்?

அதே போல் அன்று பொதுவுடமை வாதிகளால் வணங்கப்பட்ட "ஸ்டாலின்" 1952-ல் சோவியத் யூனியனின் பத்தொன்பதாவது காங்கிரஸில் பேசிய போது, முன்னரெல்லாம் முதலாளித்துவமே தேசியத்தின் தலைமையாகக் கருதப்பட்டது. ஆனல் அக்காலம் மலை ஏறிவிட்டது. சிறுபான்மை—பெரும் பான்மை என்ற தேசிய பிரச்சனைகள் பூண்டோடு ஒழிக்கப்பட்டு சமத்துவம்—சகோதரத்துவம் என்ற நிலை பரவலாக உருவாகி விட்டன என்றே முழங்கினர்.

பல்வேறு தேசிய இனங்களின் மொழி—கலை கலாச்சாரம் போன்றவைகளின் தேசியப் பிரச்சினைகளும்—சிக்கல்களும்—போராட்டங்களும் உருவாகாத வாறுதான் பதினறு தேசிய இனங்களுக்கும் ஏற்ற முறையில் சோவியத் அரசியல் சட்டத்தை வகுத்திருக்கின்றது. ஆனல் அதைப் பூஜிக்கும் இலங்கைப் பொதுவுடமைக் கட்சியினர் இங்கு ஒற்றை ஆட்சிச் சட்டத்தைப் பூஜிப்பது தவறு என்னும் உண்மையை உணர்ந்து திருந்திக்கொள்ள வேண்டும். இதைச் செய்ய அவர்கள் தவறினல்-இன்றில்லாவிட்டால் நாளை நிச்சயமாக அவர்கள் சாயம் வெளுக்கத்தான் போகின்றது.

# ஒரே இனம்! ஒரே மொழி!...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி இன்றில்லாவிட்டாலும் நாளை இலங்கையில் ஒரே மதமாக பௌத்தம் மட்டும்தான் இருக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு வந்தாலும் நம்மால் ஆச்சரியப்பட முடியாது. இந்த அரசாங்கமும் அதற்குத் தயங்காது.

ஆகவே நாம் அளிக்கும் வாக்கு ஜனுப் ஹமீதுக்கு அளிக்கப்படும் வாக்குகளல்ல. அடக்குமுறை ஆட்சிக்கும்—குடியேற்றம்—மொழி—அந்தஸ்து — உத்தியோகம் போன்றவைகளில் முஸ்லிம் பெருங்குடி மக்களை வஞ்சித்து வரும் சிங்கள அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படும் வாக்குகள் என்பதை மறந்து விடாதீர்கள்.

## இதுதானே முஸ்லிம்களுக்குச் செய்த நன்மைகள்

மூதூர் பிரதிநிதி போன்ற அரசியல் விழிப்புணர்ச்சியற்ற சிலர், ல. சு. கட்சி முஸ்லிம்களுக்குப் பல நன்மைகளைச் செய்து வருகின்றது என்று காலம் நேரம் தெரியாது வீணுகக் கத்திக்கொண்டிருக்கின்ருர்கள் சிலர். அவர்கள் உங்கள் மத்தியிலே வாக்குக் கேட்டு வருகின்றபோது நீங்களே கேளுங்கள். எந்த வழிகளில் எப்போது முஸ்லிம்கள் ல. சு. கட்சி அரசாங்கத்தால் நன்மைகள் பெற்றிருக்கின்ருர்கள், என்பதை.

சுமார் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக முஸ்லிம்களின் தனிப்பெரும் சொத்தாகக் கல்வித்துறையில் மக்களுக்குச் சேவை செய்து வந்த சாஹிராக் கல்லூரியை இந்த அரசாங்கம் பறித்துக்கொண்டது.

ஆசிரியர் உத்தியோக மூலம் வளர்ந்து வரும் இஸ்லாமிய சமுதாயத்தை மூன்று ஆண்டுக்குள் சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டும் இல்லையேல் உத்தியோகத்தைக் காலிசெய்து வெளியேறவேண்டும் என்று ஆணையிட்டிருப்பது—நிந்தாவூர் பொத்துவில், கல்முனை போன்ற பகுதிகளில் உள்ளடக்கிய ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட முஸ்லிம்களுக்கு ஒரு கச்சேரியாவது திறக்க மறுத்து இருபது ஆயிரம் சிங்கள மக்கள் வாழும் அம்பாறையில் கடந்த ஆண்டு கச்சேரி திறக்கப்பட்டது போன்றவைகளெனலாம். இவைதான் முஸ்லிம் மக்களுக்குச் செய்யப்படும் நன்மையா?

பெரும்பான்மையான முஸ்லிம் வர்த்தகர்களுக்கு எதிராக "லைசன்ஸ்" வரிச் சட்டத்தைக் கொண்டு வந்து, சில முஸ்லிம் பாடசாலைகளைச் சிங்களப் பாடசாலைகளாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுவருவது, காலி முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை மூடிவிடசதிசெய்து வருவது, முஸ்லிம்களுக்குச் சந்தேகத்தின் பெயரில் கூப்பன்கள் கொடுக்க மறுத்து வருவதுபோன்றவைகளெல்லாம் முஸ்லிம்களுக்குச் செய்யும் நன்மையா?

ஏன்? எமது மூதூர் தொகுதியில் காட்டு மிருகங்களைப் பிடித்துத் தொழில் நடத்தி வந்த முஸ்லிம்களுக்கு இது வரை இருந்து வந்த லைசன்ஸை ரத்துச் செய்து அதே லைசன்ஸைச் சிங்கள மக்களுக்குக் கொடுத்திருப்பதும் முஸ்லிம் மக்களுக்குச் செய்யும் நன்மைகளைச் சேர்ந்ததா? எனவே தனக்குக் கிடைக்கும் அற்ப சொற்ப ஆசைகளுக்காகவே இவர்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கின்ருர்கள் என்பதைத் தெரிந்து நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

## தமிழரசின் இன முழக்கம்

எனவேதான் இந்நிலைகள் மாற்றப்பட்டு சிங்களவர்—தமிழர் என்ற மொழி வேறுபாடின்றி தமிழர்—முஸ்லிம் என்ற இன வேற்றுமையின்றிச் சகல மக்களும் சமத்துவமாக வாழவேண்டும் என்று ஓயாது போராடிக் கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சி உங்கள் மத்தியிலே ஓர் அபேட்சகரை நிறுத்தியிருக்கின்றது. உங்கள் மத்தியிலே அவர் புதியவரல்ல. கடந்த பல ஆண்டுகளாக உங்களின் பிரதிநிதியாக இருந்து இன—மத வேறுபாடின்றி உங்களுக்காகவே உழைத்து வந்தவர். இஸ்லாமிய மக்கள் அரசியல் அரங்கில் மாறி மாறி அனுதையாக்கப்பட்டு மொழியை இழந்து, உத்தியோகத்தைப் பறிகொடுத்து அந்தஸ்துச் சூறையாடப்பட்டு நிர்க்கதியாக வாழும் இஸ்லாமிய பெருங்குடி மக்களின் இழந்த உரிமைகளுக்காகப் போராடத் துணிந்து நிற்கும் தமிழரசுக் கட்சி வேட்பாளரான ஜனுப் முகம்மதலி அவர்கட்கே உங்கள் வாக்குகளைக் கொடுக்க வேண்டுமென உரிமையோடு மூதூர் வாக்காளர் பெரு மக்களைக் கேட்டுக் கொள்கிருேம்.

## நம்பிக்கைக்கு ஓர் எடுத்துக்காட்டு

பல முஸ்லிம் தலைவர்கள் தமக்குக் கிடைத்த 'கிரிபத்' மயக்கத்தில் இஸ்லாமிய சமுதாயத்தைச் சிங்களத் தலைவர்களின் காலடிக்குக் காணிக்கையாக்கிவிட்டு, தமிழரசுக் கட்சியை விட்டு வேகயாகத் துரோகம் செய்து மாறி மாறி வெளியேறி இருந்தும்கூட தமிழரசுக்கட்சி முஸ்லிம் மக்கள் மீது தொடர்ந்து கொண்டுள்ள நம்பிக்கைகளுக்கு எடுத்துக்காட்டாகவே இந்த இடைத் தேர்தலில் ஜனுப் முகம்மதலியைத் தன் அபேட்சகராக நிறுத்தியிருக்கின்றது. நிச்சயமாக நீங்கள் அவரை ஆதரிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன்.

# இழந்த உரிமைகளை..

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மாருகவே உள்ளது. எப்படியும் அரசாங்கத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக—மக்களை நம்பச் செய்வதற்காக எவ்வளவோ சொல்வார்கள். ஆனல் அவ்வளவும் உண்மையல்ல. தங்கள் கட்சி வெல்லவேண்டுமென்பதற்காக இப்படியெல்லாம் பேசுவதைத் தவிர வேறு வழியில்லை. எனினும் மக்களாகிய நீங்கள் இன்றைய நடைமுறைகளை-அரசியற் போக்கை—வாழ்க்கைச் செலவுயர்வுகளை நன்கு அறிந்திருக்கிறீர்கள். அதனல் நான் விளக்க வேண்டிய அவசியமில்லை.

ஆளுங்கட்சி என்னை முறியடிக்க வேண்டுமென்பதற்காசப் பொய்யும், மெய்யுமான எவ்வளவோ பேசும். அவற்றுக்கெல்லாம் நாம் கவலைப்பட முடியுமா? எந்தக் கட்சியும் இந்த வேலையைச் செய்யத்தான் செய்யும். ஆனல் நீங்கள் உண்மையை அறிவீர்களென்ற நம்பிக்கை எனக்குண்டு.

என் கடந்த கால அரசியல் வாழ்வில் நான் யாரையும் ஏமாற்றியவனல்ல, பெருமையடித்தவனுமல்ல என்பது தங்களுக்குத் தெரியும். அதே நேரத்தில் என் ஆதரவாளர், எதிர்ப்பாளர் என்றும் பிரித்துக் கடமை செய்தவனுமல்ல. எல்லோரையும், அவர்கள் எச்சமயத்தவர்களாயினும் சமமாகக் கருதியே சேவை செய்தேன். இதுவே எனது என்றும் நிலையத்துள்ள கொள்கை. தொகுதி வேலைகளைப் பொறுத்த வரையில் என்னல் இயன்ற சேவைகளைச் செய்து வந்திருக்கிறேன். கல்விக்கும்முக்கியத்துவம் கொடுத்து வேலை செய்தேன். இனி 3 மலும் முடிந்த வேலைகளை—சேவைகளைச் செய்ய வருவேன் என்பதற்கு உறுதி கூறுகிறேன்.

சிறுபான்மையோர் நலவுரிமைக்குப் பாடுபடும் சமஷ்டிக் கட்சியின் அபேட்சகன் நான். என்னைத் தெரிந்து வைத்திருக்குந் தங்களுக்கு என்னைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. ஆதலால் சாதி பேதம் பாராது எனக்குத் தங்கள் பொன்னுன வாக்குகளைத் தந்து ஆதரிக்குமாறு அன்போடும், பணிவோடும் கேட்டுக் கொள்கிறேன்.

# பருத்தித்துறையில் ஹர்த்தால் தின சம்பவம்

தமிழ் பேசும் இனம் துக்க தினம் கொண்டாடிய 5—6—62 அன்று, தமிழரசுக் கட்சியின் வடமராட்சிக் கிளைச் செயலாளர் திரு. நா. செல்லையா, கூட்டுப் பிரார்த்தனையின் போது ஒலிபரப்பி உபயோகிப்பதற்காகப் பருத்தித்துறை, காங்கேசன் துறை பொலிஸ் அதிகாரிகளிடம் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார். அவ்விண்ணப்பத்தைப் பருத்தித்துறை சப்-இன்ஸ்பெக்டர் நிராகரித்து சிபார்சு செய்தார். ஆனல், காங்கேசந்துறை பொலிஸ் அதிபர் அனுமதி கொடுக்கலாமென தொலைபேசி மூலம் பருத்தித்துறை பொலிஸ் அதிகாரிக்குத் தெரிவித்தார். அத்துடன் அனுமதிப் பத்திரத்தையும் அன்று பிற்பகல் 1 மணியளவில் கட்சிக்கிளைக் காரியதரிசியிடம் கொடுத்தார்.

பருத்தித்துறை பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர், காங்கேசந்துறை பொலிஸ் அதிகாரிக்கு அனுப்பியிருந்த கடிதத்தின் நகல்ப் பிரதியைக் கீழே தருகிருேம்:

**A. S. P., K. K. S.:**

There is information that the "Tamil Arasu Kadchi" is organising a Hartal on 5-6-62. I believe that this application is not genuine. I do not recommend the application please.

**S. I., Pt. Pedro.**
**3—6—62.**

இதன் தமிழாக்கம்:

ஏ. எஸ். பி., கே. கே. எஸ்.:

5—6—62 அன்று "தமிழரசுக் கட்சி" ஹர்த்தால் நடாத்தத்திட்டமிட்டிருப்பதாகச் செய்தி கிடைத்துள்ளது. இந்த விண்ணப்பத்தை உண்மையான தொன்றல்ல என்று நான் நம்புகிறேன். இந்த விண்ணப்பத்தை சிபார்சு செய்ய நான் விரும்பவில்லை.

சப்-இன்ஸ்பெக்டர்,
பருத்தித்துறை.

இந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒரு தமிழர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.


கமலா பீடி

ஒளியில் சிறந்தது சூரியப் பிரகாசம்

பீடியில் சிறந்தது கமலா பீடியே!

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்.

கமலா ஸ்டோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

தந்தி: "தாமரை" போன்: 3597—6522.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்புத் தங்கைக்கு..

('செந்தமிழ்க் காவலன்', யாழ்ப்பாணம்)

ஒரு தாய் வயிற்றிலே பிறந்தோம். ஒரு தாய்ப்பாலேயே உண்டோம். எமது மழலைப் பருவத்திலே எங்கள் தமிழ்த்தாயை நீயும் நானும் எப்படியெல்லாம் புகழ்ந்து பாடி மகிழ்ந்தோம் என்பது உனக்கு இப்போது ஞாபகம் வருமென்று நம்புகின்றேன். கன்னித் தமிழை நான் பாட்டுப் பாடிப்புகழ நீ அதைப் பண்ணுடன் பாடி மகிழ அம்மா அதை யெல்லாம் கேட்டு ஆனந்தக் கண்ணீர், வடித்தாளே, இன்று அதை எண்ணிப்பார். அப்படி அன்று நாமெல்லாம் புகழ்ந்துரைத்த கன்னியாம் தமிழன்னை, இன்று புகழுவாரற்று, போற்றுவாரற்று, புனைந்துரைப்பார் யாருமற்று, நாட்டு அரியணையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு விட்டாள். தமிழைப் பேசுவதோ, தமிழன் என்று சொல்வதோ கூடத் தண்டனைக் குரியதாய் விட்டது.

இது எல்லாம் விதியின் விளையாட்டு என்று நீ அன்று எழுதியிருந்தாய். சிங்களம் ஆட்சி மொழியானது ஒரு சமயம் விதியின் விளையாட்டு என்று நீ கருதினாலும், தமிழர் நாம் தாழ்வுற்றது ஒரு போதும் விதியின் சதியல்ல, அது எமது நடத்தையால், வாழ்க்கை முறையால், பண்படாத மனோநிலையால், கேடுகெட்ட பண்பாட்டால் என்பதை மட்டும் உனக்குப் பல முறை இடித் திடித்துச் சொன்னேன். ஏதோ உனது பெரிய பேதமைப் பெண்மதி ஏற்க மறுக்கின்றது. இதோ சொல்லுவேன் கேள்!

நீயோ பருவ மங்கையாய், பட்டம் பெறப் படிக்கின்றாய். நீயே இப்படி விதியைக் குறை கூறி வீணே காலத்தைக் கழித்தால் யார்தான் சரோஜா சிந்திக்கப் போகிறார்கள்? படிப்பறிவற்ற தாய்மார்களைத் தங்கையர்களையெல்லாம் ஒருங்கே திரட்டி இனவிடிவிற்கு நீயும் ராஜினியும், ஏன் மதுமதியும் கூடி செயலாற்றக் கூடாது? அண்ணா நான்மட்டும் என்ன செய்வதென்று எழுதியிருக்கிறாய். நீ தான் முன்மாதிரி காட்ட வேண்டும், அதை உலகம் பார்த்து வியக்க வேண்டும். கட்டாயமாக உன்னைத் தொடர்ந்து எத்தனையோ பேர் இப்பணியில் ஈடுபடுவார்கள். நான் தனி மனிதனுச்சே என்னால் என்ன செய்யமுடியுமென்று கேட்கிறாயே, அன்று காந்தி பேசாமல் இருந்தால் இன்று பாரதம் விடுதலை கண்டிருக்குமா? இல்லை தந்தையெங்கள் செல்வநாயகம் எனக்கென்ன என்று சொல்லி விட்டு வாளாவிருந்திருந்தால் நாம் இன்னமும் தமிழராகத் தன்மானத்துடன் வாழ முடியுமா,? இதை ஏன் சொன்னேனென்றால் தனி மனிதரால் சாதிக்கக்கூடியது ஏராளம், ஏராளம்.

உனக்கு இந்த நேரத்தில், சிலவற்றைச் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

அடிமையாக்கப்பட்ட ஒரு இனம் விடிவு காணத்துடிக்கும் போது ஆயிரம் ஆயிரம் வீரர்கள் அவதரிக்கிறார்கள்.

எத்தனையோ வீர மங்கையர்கள் நாட்டுக்காக வாழ்வைத் தியாகம் செய்கிறார்கள், செய்துள்ளார்கள். இது தான் சரித்திரம் சொல்லும் பாடம். ஆனால், சரோஜா! எமது நாட்டிலே இப்படியான ஓர் பெண்ணை நீ கேட்டதுண்டா? ஆனபடியால், கட்டாயம் தேர்தலுக்கு நின்று வாக்குகள் பெற்றுப் பாராளுமன்றம் செல்ல வேண்டுமென்பது கருத்தல்ல. தேர்தல் தான் தொண்டு என்று எண்ணிவிடாதே. நாட்டு மக்களை விழிக்கச் செய்து, அவர்களின் மடமையைப் போக்கி, சுதந்திர புருஷர்களாக வாழ எத்தனை பெண்கள் வாழ்வை அர்ப்பணித்தார்கள். இல்லை அர்ப்பணிக்க எத்தனித்தார்கள். எண்ணிப் பார்க்க வெட்கம் வரவில்லையோ?

அக்கப்பை பிடிக்கும் கைகள்தான் ஆட்சியை ஆட்டிப்படைப்பவை. அடங்கி நடக்கும் பெண்கள் தான் அடிமை விலங்கறுத்த ஆபிரகாம் லிங்கனையும் மறக்குலத் தமிழன் கட்ட பொம்மனையும், திருமலைத் தியாகியையும் ஈன்றெடுத்தவர்கள். பாடசாலை மதில் சுவருக்குள் பட்டம் பெறப் படித்த மங்கையர்தான் பஞ்சு மெத்தையாகப் போர்க்களத்தில் புரண்டு அல்ஜீரிய நாட்டு விடுதலை வேண்டுகிறார்கள். தலை குனிந்து நடந்து சென்ற தாய்க்குல மகளிர்தான் காந்தியண்ணலையும், தந்தை செல்வநாயகத்தையும் கைதூக்கி விட்டவர்கள். மறியல் சாலையில் பூட்டிய சிறையின்மத்தியில் விடுதலைக்கீதம் பாடி தலைவர்களைத் தட்டியெழுப்பியவளும் தளபதி தந்த பத்தினிப் பெண், மங்கையர் குலத்தரசி என்பதை மறந்து விடாதே. சரித்திர ஏட்டை வரிக்குவரி மனப்பாடம் செய்யும் நீ தான் இந்நாட்டுச் சரித்திரத்தை வரைய வேண்டும். அடுத்த கடிதத்தில் அனேகம் எழுதுவேன்—ஆனால் ஒன்று.

எமது தமிழ்ப் பெண்கள் வீட்டுப் பெட்டிக் குள்ளே எத்தனை ஆயிரம் பெறுமதியான தங்க நகை தேங்கிக் கிடக்கின்றது. எத்தனையாயிரம் பெறுமதியான சேலை வகைகள், மணிப்புரிகள், டக்காக்கள் பூச்சிக்கிரையாகிப் புறப் பிடிக்கத் தேங்கின்றன. இத்தனையையும் பூட்டி வைத்து [illegible] பெருக்க பொருளாதாரம் எங்கே என்று எழுதுகிறாயே இதுவா உன் படிப்பின் பண்பு.—இல்லை—உன் பட்டப்படிப்பின் பிரயோசனம்.

மேல் நாட்டு நங்கையரும் இப்படிப் பல ஆயிரம் பெறுமதியான நகை நட்டைப் பெட்டிக்குள் பூட்டிப் பெருமிதம் கொள்கிறார்களா, இல்லை நகைகளைப் பூட்டி நாகரீகம் கொண்டாடுகிறார்களா? மணிப்புரி யென்றும், டக்கா வென்றும் பல ஆயிரம் கொடுத்துப் பட்டாடை கட்டுகிறார்களா? உடுக்குமுடையால், பூணும் பொன் நகையால் என்ன தான் உயர்வு தாழ்வு ஏற்படப் போகின்றது. இதை நீயேன் எண்ணிப்பார்க்கக் கூடாது.

சரோஜா! நீயாவது ஒன்று செய். இனிமேலாகிலும் பவுண் பல உருக்கி நகைகளை மாட்டாமல் இலேசான ஒரு சில நகைகளை அணிந்து கொள். மிக மிக மலிவான நம் நாட்டு நூல்ச் சேலைகளைக் கட்டி திருமண வைபவங்கட்கும் பெரு விழாக்கட்கும் சென்று வா. உன்னைக் கண்டு மற்றைய பெண்கள் நாணிக் கோணித்தலை குனியட்டும். சாதாரண பெண் ஒருத்தி இப்படி நடந்தால் வறுமை யென்பார்கள், வாயாரத் தூற்றுவார்கள். நீயோ செல்வக்குடும்பத்தில் பிறந்தவளாச்சே. பட்டப் படிப்புப் படிப்பவளாச்சே, முதலிலே உடுப்பை எளியதாக்கிக் கொள், பின் எளிய வாழ்க்கை வாழ்ந்து கொள்.

அப்படியானால் உனது வாழ்க்கை எளிமையும் உயர்ந்த இலட்சியமும் கொண்டதாக மாறிவிடும். மாதர் குலத்திற்கு ஒரு முன்மாதிரியாக, முன்னோடியாக வாழ்வமைத்துக் கொள்; சுதந்திரம் கிடைத்தே தீரும். சுபீட்சம் வந்தே சேரும்: நானும் நீயுமாக—ஏன் உனக்குக் கிடைக்கப் போகும் உன்னத இலட்சிய புருஷனோடு—நம் தாயகத்து மண்ணிலே நின்று அன்பு தவழும் தாய் முன்னிருக்க, விடுதலை கிடைத்த தன் குதூகலத்தால் கவிஞன் பரமஹம்ஸ தாசன் இயற்றிய தேசிய கீதத்தைப் பூரித்த உள்ளத்தோடு பாடும் நாள் நெருங்கி விட்டது. மறந்து விடாதே.

உனது அன்பின் அண்ணன்,

செந்தமிழ்க்காவலன்

---

## அன்புள்ள மருமக்களே!

வணக்கம். பத்திரிகை ஓராண்டு காலமாகத் தடை செய்யப்பட்டிருந்தது உங்கள் எல்வோருக்குந் தெரிந்ததே. இந்த நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் எனக்குப் பெரு மகிழ்ச்சியே.

'வளர்மதி'க்கு கட்டுரைகள், கவிதைகள், கதைகள் எழுதி அனுப்புங்கள். அனுப்பும் பொழுது உங்களுடைய பெயர், விலாசம், அங்கத்தவர் இலக்கம் இவற்றைக் குறிப்பிடத் தவறாதீர்கள்.

நல்ல புகைப்படங்கள் எடுத்தனுப்புங்கள். நாம் அவற்றை இப்பக்கத்தில் பிரசுரிப்போம்.

'செந்தமிழ்க் காவலன்' தமிழ்த் தங்கைக்குக் கடிதம் வரைகிறார் இப்பகுதியில். படித்துவிட்டுத் தங்கைமார் தக்க பதில் எழுதுவார்களென நம்புகிறேன்.

வணக்கம்.

வளர்மதி மாமா

---

# அறிவினைத் தேடு தம்பி!

''வன்னியூர்க் கவிராயர்''

புல்லைத் தின்று கன்றுக்குப்
    புதுப்பா லூட்டும் பசுவைப்போல
அல்ல லுற்றினும் கல்விகற்று
    அடுத்தோர் வாழ்வை யாராய்ந்து
வெல்லச் சுவையார் சொற்செயலால்
    விரக்தி துன்பம் பசிபோக்கி
நல்ல சுபீட்சம் எதிர்காலம்
    நாட்ட லுன்றன் கடமையதாம்!

★

பண்புள்ள பழமை காக்க நல்ல
    பயனுள்ள புதுமை பூக்க
எண்ணஞ்சொற் செயலா லுன்றன்
    எதிர்காலத் துழைப்ப தற்கு;
கண்ணியம் கட்டுப் பாடு
    கடமையில் வழுவி டாமல்
அன்னம்போல் நல்ல கற்று
    அறிவினைத் தேடு தம்பி!

---

# அறிஞர் அறிவுரை

இறந்த காலம் நம்மைப் பின் தொடர்கிறது. நம்முடைய வாழ்வை அது பதிவு செய்துகொண்டே வருகிறது. —ஜோசப் டார்க்கர்.

நேற்று என்பது நீங்கள் இழந்துவிட்ட ஒன்று. நாளை என்பது உறுதியில்லாதது. எனவே இன்றுதான் உங்கள் சொத்து. —ஹோம்ஸ்.

இன்று நீங்கள் செய்ய முடிந்ததைச் செய்யுங்கள். ஏனெனில் இன்றைய ஒரு வெற்றி நாளைய இரு வெற்றிகளுக்குச் சமம். —இவாரன்ஸ்.

காலத்தை நன்றாகப் பயன்படுத்துங்கள். இல்லையேல் காலம் உங்களை நெட்டித் தள்ளிவிட்டுப் போய் விடும். —பேகன்.

இளைஞர் அனுஷ்டிக்க வேண்டிய விதிகள்: குறைந்த பேச்சு—நிறைந்த கேள்வி—தனித்த சிந்தனை—தம் கருத்தில் ஐயுறவு—பிறர் கருத்தில் மதிப்பு. —டெம்பளர்.

---

# வளர்மதி புதிய மருமக்கள்

3408 செல்லப்பா தர்மலிங்கம், சாவகச்சேரி.

3409 நவாலியூர் த. பரமலிங்கம், கொழும்பு.

3410 செல்வி வ. சிவக்கொழுந்து, கொடிகாமம்.

3411 அ. ராஜேஸ்வரி, திருக்கோணமலை.

3412 ஞா. ஜெயகுமார், மானிப்பாய்.

3413 க. ராணி நவமணி, மட்டக்குழி.

3414 பிலமினா மங்களம், திருக்கோணமலை.

3415 பி. தங்கவேல், புதுக்காடு.

3416 எஸ். பி. சுப்பையா, எட்டியாந்தோட்டை.

3417 புவனேஸ்வரி சபாபதிப்பிள்ளை, அப்புத்தளை.

3418 அ. சிற்றம்பலம், கைதடி.

3419 த. செல்வரட்னம், கேகாலை.

3420 அ. ச. இராசாத்தி, முள்ளியளை.

3421 ச. ஆனந்தன், மாதகல்.

3422 வி. சுதாகரன், தொண்டமானாறு.

3423 கலைவாணி கந்தையா, நல்லூர்.

3424 சு. சத்திய மூர்த்தி, மாத்தளை.

3425 நா. பங்கஜவல்லி, அட்டன்.

3426 தீ. பாலராசா, சித்தாண்டி—முறக்கொட்டான் சேனை.

3427 ஆ. பாலகிருஷ்ணன், பருத்தித்துறை.

3428 கமலா குமாரசாமி, சுன்னாகம்.

3429 தி. பாக்கியதுரை, கல்முனை.

3430 மா. தருமலிங்கம், கல்லடி-உப்போடை.

3431 பீ. கணேசலிங்கம், அல்வாய்.

3432 க. தணிகாசலம் கேதீஸ்வரி, இடைக்காடு.

3433 வி. பாலசுப்பிரமணியம், தெல்லிப்பழை.

3434 இ. அசோகன், மட்டக்களப்பு.

3435 எஸ். வேலாயுதம், மட்டக்களப்பு.

---

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 7

பெயர் ______________________

பாடசாலை ______________________

விலாசம் ______________________

______________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்          கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கமும் இலங்கையர்கோனும்

"ஈழத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் முன்னேடியாக விளங்கும் காலம் சென்ற 'இலங்கையர்கோன்' அவர்களை இலக்கிய உலகம் மறக்க முடியாது. அவரது சின்னமாக ஏதாவது செய்ய வேண்டியது ஈழத்து எழுத்தாளர்களினதும் இலக்கிய அன்பர்களினதும் இன்றியமையாத கடனுகும். அதற்கமைய அவரது பிறந்த நாளை 'எழுத்தாளர் தின'மாகக் கொண்டாடுவது சாலவும் சிறந்ததாகும்.

இலங்கையர் கோன் அவர்களது பிறந்த நாளாகிய செப்டெம்பர் ஒன்பதாம் திகதியை எமது தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கம் எழுத்தாளர் தினமாகக் கொண்டாடுவது என முடிவு செய்துள்ளது. இலங்கையில் உள்ள ஏனைய எழுத்தாளர் சங்கங்களும் இலக்கிய அன்பர்களும் இதனை வரவேற்பார்கள் என்று எதிர்பார்க்கிறேம். அனைவரையும் இதனைக் கைக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளுகிறேம்.

தின, வார, மாத இதழ்களும் 'இலங்கையர் கோன் நினைவு இதழாக "எழுத்தாளர் தினச் சிறப்பு மலர்" வெளியிட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளுகிறேம்."

இவ்வாறு தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

—

### குருநாகல் சைவ மகாசபை திருவள்ளுவர் விழா

திருக்குறளின் சங்கநாத இலக்கியச் சிறப்புக்களை தாயகத்திலிருந்து வந்திருந்து தீவின் பற்பல பகுதிகளிலும் சென்று சொற்பெருக்காற்றிய திரு. சாலை இளந்திரையனும் திருமதி சௌந்தரி இளந்திரையனும் குருநாகல் சைவ மகாசபை மண்டபத்திலே நடைபெற்ற திருவள்ளுவர் விழாவில் மிக அழகாகப் பேசினுர்கள்.

விழா வே. இராசப்பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைவரையும் திரு. கே. கந்தசாமி (நீதிபதி) அவர்கள் வரவேற்றுப் பேசினுர்கள்.

சைவமகாசபைக் காரியதரிசி திரு. பொ. நடராசா அனைவருக்கும் நன்றி கூறினுர்.

—

### சேமமடு அரசினர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

இம்மாதம் 7-ம் திகதி வியாழக்கிழமையும் 8-ம் திகதி வெள்ளிக்கிழமையும் நடைபெற்ற 37 போட்டிகளில் 171 புள்ளிகள் பெற்ற சந்திரன் இல்லத்தை 177 புள்ளிகள் பெற்ற சூரியன் இல்லம் வென்றது.

கிராமச்சங்க அங்கத்தவர் திரு. பொ. அருணுசலம் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

தலைமை ஆசிரியர், பண்டித பொன். சின்னத்துரை அவர்கள் அறிவுரையும் நன்றியுரையும் வழங்கினர்.

கோலாட்டம் கும்மி சிறுண்டி யாதியவற்ருல் சபையோர் மகிழ்விக்கப்பட்டனர்.

### யாழ்ப்பாணக் கல்லூரியில் பாராளுமன்றம்

யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர்வகுப்பு அரசியல் மாணவர்கள் 'பாராளுமன்றம்' என்ற ஒரு சபையை ஏற்படுத்தியுள்ளனர். இது இலங்கைப் பாராளுமன்றம் நடப்பது போல் நடக்கும். 7—6—62 அன்று பாராளுமன்றம் கூடியது. இதில் 36 மாணவர்கள் சமஷ்டிக் கட்சியினராகவும், 29 மாணவர்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாயுமிருந்தனர். இவ்வெதிர்க்கட்சியில் 21 பேர் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர்கள். சமஷ்டிக் கட்சியே அரசாங்க பொறுப்பை ஏற்றது. தலைவர் இ. தவராஜா (த. அ. க.) பிரதம மந்திரியானுர். எதிர்க்கட்சித் தலைவராக க. கனகசபாபதி (ல. ச. ச. க.) தெரிவு செய்யப்பட்டார்.

—

### திருமலையில் வள்ளுவர் விழா

"வையகம் எல்லாம் வள்ளுவன் குறள் வளர்ந்து பரவி விட்டது. அக்குறள் எழுந்த தமிழினத்திடையே வள்ளுவம் பரவவில்லை என்பதை வாழ்க்கைச் சீர்கேடே காட்டிக் கொண்டிருக்கின்றது. என்ருலும் மக்கள் ஈழத்தில் திருக்குறளுக்குச் செவி சாய்க்க தொடங்கி விட்டார்கள் என்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி. முதலில் தமிழன் ஒவ்வொருவனும் தன் குற்றத்தைக் காணப் பழகிக் கொள்ளவேண்டும். இது தான் வள்ளுவனுக்கு நாம் செய்யும் கைமாறு," என்று பேராசிரியர் சாலை இளந்திரையன், திருமலை திருவள்ளுவர் கழக ஆதரவில் நிகழ்ந்த வள்ளுவர் விழாவில் பேசுகையில், "சங்க காலத்தில் கற்பொழுக்கமுள்ள குலமகளிரும், பரத்தமை ஒழுக்கமுள்ள விலைமகளிரும் வாழ்ந்தனர். வள்ளுவன் தான் முதன் முதலில் எல்லாரும் கற்புடைமையுடன் வாழல் வேண்டும் என்றெண்ணி பரத்தமைக்கெதிராக அஞ்சா நெஞ்சுடன் இடித்துரைத்தார்," என்று கூறினுர்.

திருமலை மாவட்ட நீதிபதி ஜனுப் எம். எம். அப்துல் காதர் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

—

### தமிழ் மன்றம்

மத்தீகம வாழ் தமிழன்பர்களும், இளைஞர்களும் தங்களிடையே கலை, இலக்கிய, தமிழ்ப்பற்றை வளர்க்க ஒரு மன்றம் அவசியம் என உணர்ந்து கடந்த 20--5--62 அன்று கூடி 'தமிழ் மன்ற'த்தை உருவாக்கினர். பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திரு. டி. பென்னட்; பி. ஏ., ஏ. பி. ரி. ஐ. (லண்டன்) துணைத்தலைவர்: திரு. பி. தேவராஜன். செயலாளர்: ஆசிரியர் திரு. ஐ. ஜே. எச். கனகையர். துணைச் செயலாளர்கள்: திரு மு. கனகராசா, திரு செ. பாக்கியநாதன். தனுதிகாரி ஆசிரியர். திரு. வி. கே. ஈசுரபாதம். நிர்வாகக் குழு: வித்துவான். எம். பி. ராசநாயகம், திருவாளர்கள் டபிள்யூ. எல். சகாயம், [illegible] கார்த்திகேசு. சி. சிவகுரு, கே. ஜெயராஜ், மு. கிருபாகரன், தேவராஜன்.

### அ. இ. அ. சங்கத்தின் பொதுக்குழுக்கூட்டம்

அகில இலங்கை அருந்ததியர் சங்கத்தின் இவ்வருட முதலாவது பொதுக்குழுக் கூட்டம் கடந்த 2—6—62ல் மாலை 4 மணியளவில் உப தலைவர் திரு. அ பி. சுந்தரராஜ் அவர்கள் தலைமையில், பணிமனையில் நடைபெற்றது.

பொதுச் செயலாளர் கூட்டத்தை ஆரம்பித்துப் பேசுகையில், கிளைச் சங்கப் பிரதிநிதிகள் தம்முடைய பொறுப்பை உணர்ந்து செயலாற்ருவிடின் மத்திய தலைமை நிர்வாகிகள் தங்களுடைய பொறுப்பினைச் செய்யமுடியாதவர்களாகி விடுவார்கள். எனவே அனைவரின் ஒத்துழைப்பும் மிக மிகத் தேவையெனக் குறிப்பிட்டார்.

தலைவர் தமது உரையில் கூறியதாவது: தற்போதைய சங்கத்தின் திட்டங்கள் சரிவர நிறைவேறக் கிளைச் சங்கங்களின் ஒத்துழைப்பு தவருது கிடைகக வேண்டும்.

மத்திய செயற்குழு அறிக்கை வாசித்தபின், தலைவர், உபசெயலாளர் ஆகியோர்களின் விலகல் கடிதங்கள் விவாதத்திற்கு எடுத்தொள்ளப்பட்டபோது, தலைவர் திரு. மூ. வேலாயுதம் அவர்களின் கடிதத்தைப் பொதுக் குழு ஏற்றுக் கொண்டது.

உபசெயலாளர் திரு. மா. சே. அருள் அவர்களின் கடிதத்தை நிராகரித்துப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டது. திரு. அருள அவர்கள் தன்னுடைய விலகல் கடிதத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டு தொடர்ந்து உப செயலாளராகத் தாம் செயலாற்றுவதாக வாக்குறுதியளித்தார்.

கூட்டம் இரவு 9 மணிக்கு உபசெயலாளர் திரு. கா. சிவஞானம் அவர்களின் நன்றியுரையோடு முடிவுற்றது.

—

### இஸ்லாமிய புதுவருட கொண்டாட்டம்

திருகோணமலை ஜமாலியா ஜன சமூக நிலையத்தில் 5-6-62 மாலை 7 மணிக்கு மேற்படி கொண்டாட்டம் திருமலை மாவட்ட நீதிபதி ஜனுப் எம். எம். அப்துல் காதர் அவர்கள் தலைமையில் ஜனுப் உதுமான் லெப்பை ஆலிம் அவர்களின் கிராத்துடன் ஆரம்பமானது. "நாமெல்லாம் எமது புது வருடத்தை வெகு சிறப்பாகக் கொண்டாடுமுகமாக இங்கு கூடியுள்ளோம். இன்று முதல் முஸ்லிம் மக்கள் எல்லாரும் புது மனதுடன் இஸ்லாத்திற்கு உழைப்பவர்களாகவும் பெயரளவில் அல்லாமல் கொள்கையளவில் முஸ்லிம்களாயும் வாழ வேண்டும்" என்று நீதிபதி அவர்கள் தமது பேச்சில் குறிப்பிட்டார்கள்.

இறக்கக் கண்டி பாடசாலை தலைமையாசிரியர் ஜனுப் என். எம். ஜெமீல் அவர்கள் பேசுகையில், ஐங்காலத் தொழுகையை விளக்கி எதிர்காலத்தில் அனைவரும் ஆண்டவனின் அடியார்களாக மாற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

நிலாவெளி கதிப் ஜனுப் அப்துல் கரீம், ஜனுப் கே. தஸ்தகீர் ஆகியோரும் புது [illegible] சமூக தலைவரின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

# மக்கள் குரல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சேவை ஆகாதா? தன்னிடம் உள்ளதை, தன்னுல் முடிந்ததை, பேருக்கும் புகழுக்குமாக அன்றித் தன் இனத்தின் நன்மைக்காகச் செய்யும் ஒவ்வொருவனும் சேவை செய்பவன்தானே. செய்ய முடியாததை, செய்து முடியாமல் போனதைச் செய்ய முன் வருவதுதான் சேவையோ? சேவை செய்ய வேண்டுமென்ற ஆசை—துடிப்பு இருந்தால் தெரிந்ததை, முடிந்ததைச செய்வது தானே. ஆடிக் கெட்ட, கெடுத்த அரசியலில் புகுந்து அதை மேலும் கெடுப்பானேன்?

அரசியலிலிருந்து விலகியிருந்த சுந்தரமுனிவர் நிரந்தரமாகவே விலகிவிடுதல் அவருக்கும் நல்லது... பெருமையும்கூட. எங்களுக்கும்.. தமிழ மக்களுக்கும்.. நல்லது.

தனித்து ஒருவனுகத் தமிழ் மக்களைக் காப்பாற்றிவிட முடியுமென்ற ஒரு தவருன தன்னம்பிக்கையில் தமிழ் மக்களிடம் உள்ள ஒற்றுமையைக் கெடுக்க வேண்டாம், சுந்தரமுனிவரே.

அருள்.

கொழும்பு-13,

—

### சிங்களத்தில் பட்ஜெட்!

அடுத்த பட்ஜெட்டைப் பாராளுமன்றத்தில் நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சிங்களத்தில் சமர்ப்பிக்கப் போகிருர் என்ற செய்தி ஆச்சரியத்தையும், வருத்தத்தையும் விளைவிக்கின்றது.

சிங்களத்தில் பட்ஜெட் தயாரிக்கும் நிதி மந்திரிக்குதவியாக மூன்று பேர், ஆங்கிலச் சொற்கள் சிலவற்றுக்குச் சிங்களச் சொற்கள் புதிதாகப்புனைய முயற்சித்து வருகிருர்களாம். இந்தச் 'சிங்கள' பட்ஜெட், நிதி மந்திரிக்கும், அவரது மூன்று உதவியாளர்க்கும் மட்டுமே விளங்கக் கூடியதாகத்தான் அமையும் போலும்!

நிதி மந்திரி இந்த வீண் ஆலோசனையை விட்டுவிட்டு எல்லோருக்கும் விளங்கக் கூடிய ஆங்கிலத்தில் வழக்கம் போல் பட்ஜெட்டைச் சமர்ப்பித்தால் நல்லது.

நிதி மந்திரியின் 'சிங்கள' பட்ஜெட் வெறும் கேலிக் கூத்தாக முடியலாம்.

பீலிக்ஸ் இராசநாயகம்.

யாழ்ப்பாணம்

### இ. தொ. காவை நினைக்க மனதில் வேதனை

இலங்கை இந்திய வம்சாவளி மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு இடையூறுகளையும் பரிசீலனை செய்யும் பொருட்டு திரு. ஜவஹர்லால் நேரு அவர்கள் 1939-ல் இலங்கைக்கு விஜயம் செய்தார். அதன் பிறகுதான் இலங்கை இந்திய வம்சாவளியினர்களுக்கு ஒரு அரசியல் ஸ்தாபனம் இருக்க வேண்டுமென்ற கருத்து எல்லோரிடமும் உதித்தது. அதற்கிணங்க, இலங்கை இந்தியன் காங்கிரஸ் என்னும் பெயருடன் ஒரு அரசியல் ஸ்தாபனம் நிறுவப்பட்டது. ஆரம்பகாலத்தில் ஸ்தாபனத்திற்கு ஏற்பட்ட பலவித இன்னல்களுக்குமிடையில் பொழுதொரு வண்ணமும் நாளொருமேனியுமாக ஸ்தாபனம் வளர்க்கப்பட்டது. அதன் பின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்னும் தொழிற் சங்கமும் நிறுவப்பட்டது.

அன்று தொடக்கம் இன்று வரை; அந்த ஸ்தாபன வளர்ச்சிக்காக என்போன்ற தொழிலாள மக்கள் அனுபவித்த இன்னல்களும் செய்த தியாகங்களும் கணக்கிட முடியாது. ஆனுலும் இன்று ஸ்தாபனத்தின் நிலையை நினைக்கும் போது என்போன்ற ஆரம்ப அங்கத்தவர்களின் மனம் சொல்ல முடியாத துக்கமடைகிறது.

காரணம்; ஸ்தாபனம் எந்த லட்சியத்திற்காக நிறுவப்பட்டதோ, அந்த லட்சியத்திற்கு மாருன கருத்துகள் ஸ்தாபனத்தில் உருவாகிவிட்டன.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்ற கருத்தை வளர்த்த நாங்கள் துண்டு பட்டால் அடையும் பலன் என்ன என்பதை அறியாமல் இருக்க முடியாது. ஒன்று படுவதும் துண்டு போடுவதும் யாருக்காக என்பதை என்போன்ற தொழிலாள மக்கள் இனியும் அறியாமலிருக்க முடியாது. ஒற்றுமையின்றி உரிமை பெறுவது திரிசங்கு சொர்க்கம் என்பதை உணராமலில்லை. தொழிலாளர் யுகமென்று வர்ணிக்கப்படும் இன்று எங்கள் நிலை மாறுமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

எம். எஸ். மாரிமுத்து,

அட்டபாகை தோட்டம், கம்பளை.


# இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரேமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரேமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 22-ம் திகதி வெள்ளி முதல்

கெபிட்டல் (கொழும்பு) — சபையர் (வெள்ளவத்தை) — விஜயா (மட்டக்களப்பு)



காலஞ்சென்ற எழிலிசை மன்னன்
எம்.கே. தியாகராஜபாகவதர்
ஜி. வரலட்சுமி-முத்துலட்சுமி
எஸ். டி. சுப்புலட்சுமி
ஜெயஸ்ரீ-ராமராவ்
ஆகியோர் நடித்த
எம். ஏ. வி
பட நிறுவனத்தினர்
அளிக்கும்

# சிவகாமி

சங்கீதம்: கே. வி. மகாதேவன்
டைரக்ஷன்: மித்ரதாஸ்

## விரைவில் எதிர்பாருங்கள்!

சினிமாஸ் திரைகளில்



இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ஆர். M.L.A — இலட்சிய நடிகை விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
மாடர்ன் தியேட்டர்ஸ்

# குமுதம்

இசை: கே. வி. மகாதேவன்
டைரக்ஷன்: ஏ. சுப்புராவ்

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) — றெக்ஸி (வெள்ளவத்தை) — அசோகமாலா (நீர்கொழும்பு)
வின்சர் (யாழ்ப்பாணம்) — கிங்ஸ் (பதுளை) — குயீன்ஸ் (காலி) — இம்பீரியல் (மட்டக்களப்பு)
வேல்ஸ் (கண்டி) — நெல்சன் (திருகோணமலை)

பிரேம் நஸீர்—எம். என். ராஜம்—வி. ஆர். ராஜகோபால்
ஸ்ரீரஞ்சனி—தாம்பரம் லலிதா முதலியோர் நடித்த



ஏ. வி. எம். அளிக்கும்

# திலகம்

(ஹெலனின் நடனத்தை கலரில் கண்டு ஆனந்தியுங்கள்)

## 29-ம் திகதி வெள்ளிக்கிழமை முதல்

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) — தாஜ்மஹால் (மாத்தளை) — றீகல் (நுவரெலியா)
றேயல் (பண்டாரவளை) — குமரன் (மன்னார்)
கணேசன் (திருகோணமலை)
இம்பீரியல் (குருநாகல்)
நடராஜா (நீர்கொழும்பு)

பிரேம் நசீர்
எம். என். ராஜம்
கே. ஏ. தங்கவேலு
விஜயலட்சுமி
மற்றும் பலர் நடித்த




## அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க நீடிக்கப்பட்டுள்ளது

4-வது கடைசி வாரம்!

செண்ட்ரல் (மருதானை)

* ராஜ் கபூர்
* பத்மினி
* நந்தா
* அபி
* ஹனி இராணி

நடித்த



# ஆஷிக்

(சிறந்த ஹிந்தி படம்)

டைரக்ஷன்: முக்கர்ஜி, இசையமைப்பு: ஷங்கர்-ஜய்கிஷன், பின்னணி: முகேஷ்-லதா

## சிலோன் எண்டர்டெயின்மண்ட் திரைகளில் விரைவில் வருகிறது

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்—ஜமுனா
வி. நாகையா—ரங்கராவ்—கண்ணாம்பா—நம்பியார்
துரைராஜ்—ராமராவ்—ராஜஸ்ரீ
நடித்த
விக்ரம்ஸ்

# நிச்சய தாம்பூலம்

இசையமைப்பு: விஸ்வநாதன்—ராமமூர்த்தி
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
டைரக்ஷன்: பி. எஸ். ரங்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் [illegible] கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்தை, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் ஜூன் மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.